துவங்கி விட்டார்கள்
களிடையே வெளிப்

தேசம்தான் உயர்ந்த
அடையும். வேறு
யோக்கியதை இல்லை.
பண்டிதர்களும் ஒரு
அரசாங்கம் செவ்வனே

ர்த்தனை செய்வோம்.

சரணம்.

# ராஜ கோபுரம்

## 1

மழை மிக பலமாய் திரிசிரபுரத்தை தாக்கிக் கொண்டிருந்தது. திருவானைக்காவல் கோவிலைச் சுற்றி நீர் சுழித்துக் கொண்டு ஓடியது. மரங்கள் ஆடின. மனிதர்களோ, மிருகங்களோ, பறவைகளோ வெளி வராமல் அதனதன் இடத்தில் ஒடுங்கிக் கிடந்தார்கள். கோவிலுக்குள்ளே அந்த அந்தணன் மண்டபத்துக் கல் சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். அவன் தலை சற்று வலப்பக்கம் சாய்ந்திருந்தது. அவனைச் சுற்றி துணியால் திரை போடப்பட்டிருந்தது.

கடந்த ஆறு நாட்களாக உணவும், நீரும் உறக்கமுமின்றி அவன் இடைவிடாது மந்திரஜபம் செய்து கொண்டிருந்தான். இது எட்டு வருஷத்து சாதனை.

கற்றுக்கொண்ட நாள் முதல் ஒவ்வொரு மாதமும் கால் நாழிகை ஜப நேரத்தை ஏற்றி ஒரு நாள் முழுவதும் இடைவிடாது ஜபம் செய்யும் ஆற்றலைப் பெற்றிருந்தான். அவன் மனம் அந்த மந்திர சொல்லாலேயே லயித்திருந்தது. உடம்பு பற்றிய எந்த எண்ணமும் இல்லாமல் அவன் மனம் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சுற்றிச் சுற்றி வந்தது.

இந்த ஜபம் இவ்விதம் செய்தால் இந்த ஜபத்தின் தேவதை பிரத்யட்சமாவாள் என்று சொல்லப்பட்டிருந்தது.

பதினாறு வருட குரு சேவைக்குப் பிறகு அவனுக்கு இந்த மந்திர ஜபம் தரப்பட்டது. சித்தியடைவது மட்டுமே வாழ்க்கையின் மிக முக்கியமான லட்சியமாய் கொண்டு அவன் இந்த சாதனையை செய்யத் துவங்கியிருந்தான். எப்படியாவது தனக்கு முன்னே இந்த மந்திரத்தின் தேவதை பிரசன்னமாக வேண்டுமென்று விரும்பினான்.

*க எஇ லஹ்ரீம் அசஹல ஹ்ரீம்*
*ஸௌ: சகல ஹ்ரீம்*

என்ற மந்திரம் இடைவிடாது அவன் மனதுக்குள் சுற்றி உடம்பு முழுவதும் பரவியிருந்தது. அவன் உடம்பே மந்திர ரூபமாகியிருந்தது. வெளியே மழை பெய்வதும் அவனுக்குத் தெரியவில்லை. மெல்லிய இழையாய் சுவாசம் மட்டுமே ஓடிக்கொண்டிருந்தது. உடம்பிலுள்ள எல்லா வியர்வை துவாரங்களும் காற்றை இழுத்து உறிஞ்சி வெளியே அனுப்பி அவனுடைய ரத்த ஓட்டத்தை, உடம்பு சக்தியை ஆதரித்து வந்தன. அவன் உடம்பு பற்றி எந்தக் கவலையுமில்லாமல் மனம்தான் உடம்பை வாழ வைக்கிறது என்று தெளிவாகப் புரிந்துகொண்டு மனதை ஒரே பாதையில் செலுத்திக் கொண்டிருந்தான்.

*க எஇ லஹ்ரீம் அசஹல ஹ்ரீம்*
*ஸெ: சகல ஹ்ரீம்*

அவன் மந்திரமாக மாறி இருந்தான். வெளியே மழை பலத்துப் பெய்ய ஆரம்பித்திருந்தது. உள்ளே அகிலாண்டேஸ்வரி புன்னகை செய்து கொண்டிருந்தாள். அவளுக்கு அருகே பெரிய குத்துவிளக்கில் நிறைய நெய் விட்டு



தீபச்சுடர் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. அவள் அங்கே ஒரு நாடகம் நடத்த தீர்மானித்தாள்.

வரதன் ஓடுகிற நீரைத் தாண்டிக் கொண்டு திருவானைக்காவல் கோவிலுக்குள் உள்ளே புகுந்தான். உடம்பு ஈரத்தைத் துடைத்துக் கொண்டான். வேட்டியை அவிழ்த்துப் பிழிந்து உதறி மறுபடி கட்டிக் கொண்டான். வேகமாக நடந்து உள்ளே போனான்.

திருவானைக்காவல் கோவில் மண்டபம் மிகப் பெரியது. ஊர் முழுவதும் அங்கே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து. பெண்களும், ஆண்களும் மண்டபத்தின் எல்லா பகுதிகளிலும் பரவி, பாடிக் கொண்டும், பேசிக்கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்தார்கள். அவன் ஜனங்களைத் தாண்டி சிற்ப மண்டபத்துக்குப் போனான்.

பெரிய பெரிய கருங்கல் தூண்களும் சோமாஸ்கந்தர்களும் கூடிய அந்த மண்டபத்தின் நடுவே போய் நின்றான். கொடிமரத்துக்கு எதிரே நின்று வணங்கினான். மறுபடி கொடிமரம் தாண்டி உள்ளே நடக்க ஆரம்பித்தான்.

ஜம்புகேஸ்வரர் சந்நிதிக்கு அருகே சித்ராங்கி எதிர்ப்பட்டாள். சட்டென்று அவன் வருவதைப் பார்த்து கதவுக்குப் பின் நகர்ந்து கொண்டாள்.

“என்ன சித்ராங்கி! இந்த மழையிலும் உன்னைத் தேடிக் கொண்டு வருகிறேன். என்னைப் பார்த்து எதற்கு ஒளிகிறாய்.” வியப்போடு வரதன் கேட்டான்.

“ஒரு திகைப்பு. ஒரு சந்தோஷம். நீங்கள் இவ்வளவு நல்லவராகவே இருக்கிறீர்களே என்று ஒரு பரவசம். எல்லாம் சேர்ந்து கணநேரத்தில் என்னைத் தாக்கின. கீழே விழுந்து விடுவேன் என்கிற பயம் இருந்தது. அதனால்தான்

கதவோடு ஒட்டிக் கொண்டேன். கதவுக்குப் பின்னே விழலாம் என்று கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன்."

சித்ராங்கி நாக்கு குழறப் பதில் சொன்னாள். அவள் கண்கள் லேசாக கலங்கியிருந்தன.

"என்ன... எதற்கு உணர்ச்சிவசப்படுகிறாய். நான் வர மாட்டேன் என்று யார் சொன்னார்கள்."

யாரும் சொல்லவில்லை. இருந்தாலும் மனதிற்குள் ஒரு கிலேசம். மழை பெய்கிறதே, இதில் வா என்று நான் சொல்லிவிட்டேனே. வருவீர்களோ, மாட்டீர்களோ, என்று ஒரு அச்சம். வந்தால் பிரச்சினையா.. வராது போனால் பிரச்சினையா என்று ஒரு கலவரம். "

"நீ சொல்வது புரியவில்லை சித்ராங்கி."

"இந்த மழையில் பூச்சி பொட்டுகள் பலதும் எழுந்து அலைகின்றன. இதில் கால் வைத்து உங்களை வரச் சொன்னால் ஏதும் கடித்து உங்களுக்குத் துன்பம் உண்டாகுமே என்கிற கலவரம். நீங்கள் வராது போனால் இங்குள்ள சில பிரச்சினைகளை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாத ஒரு அச்சம்."

சித்ராங்கி அவனைப் பார்த்துக் கொண்டே பேசினாள்.

"இங்கு என்ன பிரச்சினை."

"ஜம்புநாதருக்கு அமுது படைக்கவில்லை."

"பரிசாரகன் வரவில்லை."

"அதனாலென்ன.... யாராவது ஒரு தவலை சாதம் வடிக்கக் கூடாதா."



"அப்படியல்ல... யார் தீட்சை பெற்றிருக்கிறார்களோ... யார் செய்ய வேண்டுமோ அவர்கள்தான் செய்ய வேண்டும். குருக்கள் செய்ய முடியாது என்கிறார். நான் செய்யக் கூடாது என்கிறார்கள். வேறு எவரையும் கூப்பிட்டு செய்ய அச்சமாக இருக்கிறது."

"பரிசாரகன் என்ன ஆனான்?"

"பரிசாரகன் எங்கோ மழையில் சிக்கிக் கொண்டான் போல. அல்லது தென் திசையில் நாலைந்து வீடுகள் விழுந்து விட்டன என்று சொல்கிறார்கள். அதில் பரிசாரகன் வீடும் இருக்குமோ என்ற பயமும் இருக்கிறது.

வீடு விழுந்தால் ஒரு மனிதன் எப்படி வர முடியும்."

சித்ராங்கி கவலையோடு பேசினாள்.

"சரி, இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்."

"முதலில் தலையை நன்றாகத் துவட்டிக் கொள்ளுங்கள்."

"அது கிடக்கட்டும். சித்ராங்கி, ஜம்புகேஸ்வரர் உச்சி வேளை ஆகியும் உணவு உண்ணவில்லை என்பது தவறான விஷயம். கடவுளைப் பட்டினி போடக் கூடாது. அகிலாண்டேஸ்வரிக்கு நைவேத்தியம் ஆயிற்றா."

"ஜம்புநாதருக்கே இன்னும் ஆகவில்லையே. அகிலாண்டேஸ்வரி தாய்க்கு எப்படிப் ஆகும்." சித்ராங்கி தீனமான குரலில் பேசினாள்.

வரதன் கவலைப்பட்டான். தலை குனிந்து யோசித்தான்.

"என்ன நைவேத்தியம் இன்று செய்ய வேண்டும்?"

"ஜம்புநாதருக்கு வெண்பொங்கல். அகிலாண்டேஸ்வரிக்கு சர்க்கரைப் பொங்கல்."

"என்ன சாமான்கள் இருக்கின்றன?" வரதன் கேட்டான்.

"எல்லாமும் இருக்கின்றன. யார் செய்வது?"

"நான் செய்கிறேன் சித்ராங்கி."

"தெரியவில்லை. செய்யலாமா என்று தெரியவில்லை. நீங்கள் வைணவரல்லவா. ஸ்ரீரங்கத்து மடைப்பள்ளி தலைவரல்லவா. என்னைத் தேடிக் கொண்டு என்னைப் பார்ப்பதற்கு வருகிறீர்கள். இங்கே மற்ற வேலைகளை உங்களைச் செய்ய விடுவார்களா."

"இது என்ன... யார் நைவேத்தியம் செய்தாலென்ன, பக்தியோடு செய்யவேண்டிய ஒரு விஷயத்திற்கு ஜாதியும் ஆசாரமும் எதற்கு? வா... போய் குருக்களைக் கேட்போம்."

அவர்கள் கருவறை நோக்கி நகர்ந்தார்கள்.. கருவறை இருட்டாக இருந்தது. நீர் கருவறையைச் சுற்றிப் பொங்கி சிவலிங்கத்தை முற்றிலும் மறைத்திருந்தது; ஜனங்கள் உட்கார்ந்து நீர் மேலே வருவதையும் தாழ்ந்துபோவதையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். கால் நாழிகை சிவலிங்கத்தை மறைக்கின்ற ஜலம் மறுபடியும் வடிந்து சிவலிங்கத்தை முழு உருவமாகக் காட்டியது. மறுபடியும் ஊற்றுக்களிலிருந்து பொங்கி சிவலிங்கத்தை மூழ்கடித்தது.

உட்கார்ந்து பார்க்கும்போது, நீர் சிவலிங்கத்தை அணைத்து, அணைத்து சந்தோஷப்படுவது போல் இருந்தது. வரதன் உட்கார்ந்து ஊற்றிலிருந்து நீர் பொங்குவதைப் பார்த்தான். கீழே விழுந்து ஜம்புகேஸ்வரரை நமஸ்கரித்தான். திரும்பி குருக்களை நோக்கி நடந்தான்.

"நான் வரதன்."

"தெரியுமே. நீ ஸ்ரீரங்கத்து மடைப்பள்ளி ஆள். என்ன வேண்டும்?"



"ஸ்வாமிக்கு நைவேத்தியம் ஆகவில்லையாமே."

"ஆமாம், அதனாலென்ன?"

"உச்சி வேளை வரை வந்துவிட்டது. ஜம்புநாதருக்கும் அகிலாண்டேஸ்வரிக்கும் நைவேத்தியம் ஆகவில்லை யென்றால் சரியா. கடவுளைப் பட்டினி போடலாமா. ஏற்கெனவே இயற்கை சீற்றம் அதிகமாக இருக்கிறது. இவர்கள் பட்டினியாக இருந்தால் மழை அதிகமாகி ஊர் நாசமாகாதா."

"எனக்கென்ன அதனால். பரிசாரகன் வரவில்லை. அவன் வந்து சமையல் செய்தால்தான் நைவேத்தியம் செய்ய முடியும்."

"நீங்கள் செய்யலாமல்லவா?"

"இல்லை. அது என் வேலை இல்லை."

"நான் செய்யலாமா?"

"நான் செய்யக்கூடாது."

"நீ வைணவன். நீ செய்யக்கூடாது."

"நான் பரிசாரகன் ஸ்வாமி."

"இருக்கலாம், நீ சிவன் மீது நம்பிக்கையில்லாதவன். விஷ்ணுவின் மீது நம்பிக்கை வைத்தவன். சிவன் கோவிலுக்கு நுழையவே கூடாது. நைவேத்தியம் செய்யலாமா என்று கேட்கிறாயா."

"நான் சிவனையும் நம்புகிறேன்."

"சொன்னால் போதாது. திருநீறு இட்டுக் கொள்ள வேண்டும்."

"அவ்வளவுதானே."

"இனிமேல் விஷ்ணுவை வணங்காமல் இருக்க வேண்டும்."

"இது என்ன கூத்து. சிவனை வணங்கினால் என்ன... விஷ்ணுவை வணங்கினால் என்ன.... பக்தியோடு உணவு தயாரிக்க வேண்டும். அவ்வளவுதானே."

"இல்லை. சைவர்கள் விஷ்ணுவை வணங்க மாட்டார்கள். எப்படி விஷ்ணுவை வணங்குபவர்கள் சைவர்களை எள்ளி நகையாடுவார்களோ, அதே விதமாக சிவனை வணங்குபவர்களும் விஷ்ணுவின் ஆட்களை எள்ளி நகையாடுவார்கள். அவர்களோடு எந்தப் பேச்சும் வைத்துக் கொள்ள மாட்டார்கள்."

"குருக்களே. இது அபத்தம். சோழ தேசம் முழுவதும் இஸ்லாமியர்கள் வந்து சூறையாடிப்போன இந்த நேரத்தில் சைவம், வைணவம் என்று பிரித்துக் கொண்டிருக்கிறது நல்லதல்ல. இன்னும் என்ன விதமாக உதையெல்லாம் சோழ தேசம் படப்போகிறதோ தெரியவில்லை."

"ஏது பற்றியும் எனக்குக் கவலையில்லை. நீ வைணவன். உனக்கும் இந்தக் கோவிலுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. ஏதோ மழைக்கு வந்து ஒதுங்கி நிற்கிறாய் என்று விடுகிறேன். அனாவசியமாக இங்கு நின்று பேசிக் கொண்டிருக்காதே. மண்டபம் பக்கம் போய்விடு. இது கருவறை. வைணவர்கள் சிவன் கருவறைக்குள் அருகே வரக்கூடாது."

"நைவேத்தியத்திற்கு என்ன வழி?"

"அதைப் பற்றி உனக்கேன் கவலை."

"ஒரு கோவிலில் கடவுள் என்று ஒன்று ஸ்தாபித்து விட்டு ஆகம விதிகளின்படி அதைப் பராமரித்து வருகிற போது ஒரு நாள் ஒரு வேளைகூட உணவு இல்லாமல்



இருக்கக்கூடாது. இது தவறு. இது ஊருக்குக் கெடுதல் விளைவிக்கும். நான் எப்படியாவது நைவேத்தியம் செய்ததாக வேண்டும். நான் செய்ய ஆசைப்படுகிறேன். நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள்."

"நீ செய்யலாம். 'இனி நான் சைவன். ஒருக்காலும் இனி விஷ்ணுவின் பக்கம் போக மாட்டேன்' என்று ஜம்புகேஸ்வரர் முன்னால் சத்தியம் செய்தால் நீ செய்யலாம்."

வரதன் தயங்கினான். இடப்பக்கம் பார்த்தான். வலப்பக்கம் பார்த்தான். அவனைச் சுற்றி ஜனங்கள் சூழ்ந்து கொண்டார்கள். குருக்கள் உரக்கப் பேசியதை எல்லோரும் கேட்டுவிட்டு வரதனுக்கு அருகே வந்தார்கள்.

வரதன் என்ன செய்யப் போகிறான் என்று பார்த்தார்கள்.

வரதன், சித்ராங்கியைப் பார்த்தான்.

சித்ராங்கி, வரதனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வரதன் தலைக்கு மேலே உள்ள சாளரத்தின் வழியே வானம் பார்த்தான்.

வானம் கருத்து மழை அடர்ந்து பெய்து கொண்டிருந்தது. பளீரென்று ஒரு மின்னல் வெட்டியது. அந்த மின்னலில் சிவலிங்கம் போல் ஒரு உருவம் தோன்றியது.

வரதன் தலைகுனிந்தான். சரி என்றான்.

"ஜம்புநாதர் சாட்சியாக, அகிலாண்டேஸ்வரி சாட்சியாக இங்குள்ள எல்லா மக்களின் சாட்சியாக நான் நேசிக்கின்ற சித்ராங்கியின் சாட்சியாக, இந்தக் கோவிலின் குருக்களாகிய உங்கள் சாட்சியாக. என்னுடைய வேதமான ரிக் வேதத்தின் சாட்சியாக, என் பெற்றோர்கள் சாட்சியாக,

என் ஆத்மாவின் சாட்சியாக,என் புத்தியின் சாட்சி...
கோடானு கோடி தேவர்கள் முன்னிலையில் மிகப் பெ...
இறையருள் முன்னிலையில் சத்தியம் செய்கிறேன். இன்...
முதல் நான் சைவன். இன்று முதல் நான் சைவன். இனி...
முதல் நான் சுத்த சைவன்'' என்று இடக் கை நீட்டி, வல...
கையால் இடக் கையால் ஓங்கி அடித்து சத்தியம் செய்தான்.

கூடியிருந்தவர்கள் 'நமசிவாய வாழ்க' என்று சத்தமிட்டார்கள்.

சித்ராங்கி கண்களிலிருந்து தாரைத்தாரையாக நீர் வழிந்தது.

வரதன் திரும்பி தாவி மடைப்பள்ளி நோக்கிப் போனான். சித்ராங்கி அவனைத் தொடர்ந்து ஓடினாள். அவனுக்கு தானியங்கள் எடுத்துக் கொடுத்தாள்.

அவன் கற்பூரத்தைப் போட்டு அடுப்பு மூட்டினான். அடுப்பின் முன் விழுந்து வணங்கினான். தலையில் குட்டிக் கொண்டான்.

பாத்திரத்தில் நீர் எடுத்து அடுப்பில் ஏற்றி வைத்தான். அரிசியைக் களைந்து 'நமசிவாய வாழ்க' என்று உலையில் போட்டான். தீத்தழல் பானையைச் சுற்றிக் கொண்டது. கோவிலில் வேலை செய்யும் தேவரடியார் பெண்கள் சித்ராங்கியை நோக்கி ஓடி வந்தார்கள்.

''அடியே என்ன இது..... உன்னுடைய ஆள் வரதன் சைவனாக மாறிவிட்டாராமே. ஜம்புநாதருக்கு எதிரே சத்தியம் செய்து, நான் இனி சுத்த சைவன் என்று கூறி விட்டாராமே... அப்படியானால் இனி ஸ்ரீரங்கம் போக மாட்டாரா. ஸ்ரீரங்கம் போகாவிட்டால் வருமானம் வருமா. இந்தக் கோவிலைவிட ஸ்ரீரங்கம் கோயில் நல்ல வருமானம் உள்ள கோயில் அல்லவா. அந்த வருமானத்தை



...வைத்துக் கொண்டுதானே உன்னிடம் ஓடி வந்தார். அந்த வருமானம் இல்லையென்றால் என்ன பயன்.''

அவர்கள் கேள்வி கேட்டார்கள்.

சித்ராங்கி பதில் சொல்லவில்லை.

வெல்லத்தை துகளாக செய்து கொண்டிருந்தாள்.

காசு என்ன காசு.... எனக்கு ஒரு நல்ல மனிதர் கிடைத்திருக்கிறார். மிக நல்ல துணை அகிலாண்டேஸ்வரி அருளால் எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்தத் துணை நீடித்தால் போதும். இந்த மனிதன் வரதன் கடைசி வரை என்னைக் கைவிடாது இருந்தால் போதும். காசு முக்கியமில்லை. நான் நடனமாடி சம்பாதித்துக் கொள்வேன்.

எனக்குப் பிரியமாய், அனுசரணையாய், அன்பாய், ஆதரவாய் இந்த மனிதன் இருந்தால் போதும். வரதன் அப்படி இருப்பார் என்று எனக்குத் தெரியும். அகிலாண்டேஸ்வரி வழிகாட்ட வேண்டும் என்னையும் வரதனையும் ஆசீர்வதிக்க வேண்டும்.

மனசுக்குள் பேசிக் கொண்டாள்.

மழை இன்னும் அதிகமாய் பெய்தது. இந்த உலகத்தையே விழுங்கி விடுகிறேன் பார் என்ற வேகத்தில் நீர் தரையை முட்டியது.

ஜனங்கள் பயந்தார்கள். எல்லாவற்றையும் மறந்துவிட்டு மழையையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள் .

அந்த அந்தணன் திரைக்குப்பின் இங்கே நடப்பது எது பற்றியும் கவலை இல்லாது மந்திரத்திலேயே மூழ்கிக் கிடந்தான்.

க எஇ லஹ்ரீம் க்லீம் அசஹல க்ரீம்
சௌ: சகல க்ரீம்

மந்திரம் அவன் உடம்பிலிருந்து நாலா திசையிலும் தெறித்துக்கொண்டிருந்தது.

திருவானைக்காவல் ஊர் சபைத்தலைவர் மடைப்பள்ளி நோக்கி வந்தார்.

''வரதா, சைவனாக மாறிவிட்டாயாமே. ரொம்ப சந்தோஷம். உன்னைப் போன்றவர்கள் சைவ மதத்துக்கு வருவதுதான் நல்லது. ஜம்புநாதர் உன்னைத் தன்னிடம் அழைத்துக் கொண்டார்.

வரதா! ஜம்புநாதருக்கும், அகிலாண்டேஸ்வரிக்கும் நைவேத்தியம் செய்தால் மட்டும் போதாது.கோவிலுக்குள் நானூறு பேர் குழந்தைகளும் பெண்களுமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் ஏதாவது செய்தாக வேண்டும்.

மூன்று கூடை அரிசியும், ஒரு கூடை காய்கறியும் கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன். கதம்பசாதம் செய்து விடமுடியுமா. பெண்களை அழைத்து வந்து காய்கறி திருத்தித் தர செய்கிறேன். கொட்டிக் கிளறி ருசியாய் ஒரு உணவு தயார் செய்து விடுவாயா.''

''நிச்சயம் செய்கிறேன். செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். மக்களுக்கு சேவை செய்வதைவிட சந்தோஷமான விஷயம் உலகத்தில் வேறு ஏதேனும் உண்டா. நீங்கள் காயைத் திருத்த ஏற்பாடு செய்யுங்கள். இதோ நைவேத்தியத்திற்கு அனுப்பிவிட்டு வருகிறேன்.''

அவன் தோளில் சூடான பானையைச் சுமந்துகொண்டு ஓடினான். ஜம்புநாதருக்கு எதிரே வெண்பொங்கலை வைத்தான்.



நைவேத்தியம் ஆயிற்று.

சர்க்கரைப் பொங்கல் பானையைத் தூக்கிக் கொண்டு அகிலாண்டேஸ்வரியை நோக்கி ஓடினான்.

அகிலாண்டேஸ்வரிக்கும் நைவேத்தியம் ஆயிற்று.

மறுபடியும் மடைப்பள்ளிக்கு ஓடி வந்தான். காய்கள் திருத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. பெரிய பாத்திரத்தில் உலை கொதித்துக் கொண்டிருந்தது. அரிசி கல் பொறுக்கி தனியே முறத்தில் வைத்திருந்தார்கள்.

அரிசியைக் களைந்து உலையில் போட்டான். காய்களை தனியே வேகப் போட்டான், எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து உப்பு சரியாகப் போட்டுக் கை விடாமல் கிளறினான். தணலை அதிகப்படுத்தினான். அடிவரை இரும்பு சலாகையை விட்டு சாதத்தைப் புரட்டிக் கொடுத்தான்.

எலுமிச்சம் பழம் நறுக்கிப் பிழிந்தான். வாசனை தூக்கிற்று. கெட்டியான பதம் வரும்வரை இடைவிடாது கிளறினான். தோள்கள் வலித்தன. புஜங்கள், முழங்கைகள் நோவெடுத்தன. மூச்சு இரைத்தது. வியர்வை வெள்ளமாக வழிந்தது. கடைசியாக பசுநெய் கவிழ்ந்தான்.

உணவு தயாரானதும் ஒரு இலையில் எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். மண்டபத்தில் ஏறினான்.

ஜேஷ்டாதேவி சந்நிதி நோக்கி போனான். இலையை அங்கு பரப்பி நீரால் சுற்றி ஜேஷ்டாதேவிக்கு நைவேத்தியம் செய்தான். ஜேஷ்டாதேவிக்கு அருகே உள்ள சனீஸ்வரருக்கும் நைவேத்தியம் செய்தான். விழுந்து வணங்கினான்.

காகத் வஜாய வித்மஹே கட்கஹஸ்தாய தீமஹி
தந்நோ மந்தகப் பிரசோதயாத்:

என்று மந்திரம் சொன்னான். நைவேத்திய இலையை எடுத்துக் கொண்டு சித்ராங்கியை நோக்கி நடந்து வந்தான். அவள் கையில் வைத்தான்.

“சாப்பிட்டுப் பார்... எப்படியிருக்கிறது என்று.”

சித்ராங்கியைப் பெண்கள் சுற்றிக் கொண்டார்கள். ஆளுக்கு ஒரு வாய் சாப்பிட்டார்கள். சித்ராங்கியும் ஒரு பெரிய விழுது வாயில் போட்டுக் கொண்டாள்.

இவ்வளவு அற்புதமான கதம்ப சாதத்தை அவள் வாழ்நாளில் சாப்பிட்டதேயில்லை.

கதம்ப சாதம் விநியோகம் அகிலாண்டேஸ்வரி சந்நிதிக்கு வெளியே நடந்தது. குழந்தைகளும் ஜனங்களும் போட்டி போட்டு கொண்டு சாப்பிட்டார்கள்.

மழை மெல்ல குறையத் துவங்கியது.

வரதன் மடைப்பள்ளிக்கு அருகே உள்ள கிணற்றில் நீர் இறைத்து வியர்வை போக குளித்தான். முகத்திற்கும் மார்பிற்கும் வாசனைப் பொடியைத் தடவிக் கொண்டு துண்டால் அழுத்தித் துடைத்தான். மறுபடியும் நீர் எடுத்து தலையில் விட்டுக் கொண்டான்.

மடைப்பள்ளிக்குள் ஓடிவந்து துணியைப் பிழிந்து இடுப்பில் கட்டிக் கொண்டான்.

“வாருங்கள், மழை குறைந்திருக்கிறது. தடுக்கைத் தலையில் வைத்துக் கொண்டு வீட்டுக்குப் போய் விடுவோம். அங்கு உலர்ந்த துணிகள் இருக்கின்றன. அதை உடுத்திக் கொள்ளுங்கள்.”

சித்ராங்கி பிரியத்துடன் அவனைப் பார்த்துப் பேசினாள்.”



“தடுக்கு எடுத்துக் கொண்டு நீ போ. நான் பின்னால் வருகிறேன்.”

சித்ராங்கி தலையில் தடுக்கு வைத்துக் கொண்டு அகிலாண்டேஸ்வரி சந்நிதி விட்டு வெளியே வந்து இடப்புறமாக நடந்து நடன மண்டபம் தாண்டி, கிழக்கு வாசல் வழியாக வெளியேறினாள். வலது புறம் திரும்பி தன் வீட்டிற்குள் படியேறினாள்.

பின்னாலேயே வரதன் மழையில் நனைந்துகொண்டு ஓடினான். தெருவில் நீர் சுழித்தபடி ஓடிற்று. மீன்கள் நீரில் துள்ளி குதித்தன.

சித்ராங்கியின் வீட்டுப் படியேறினான். உள்ளே போய் கதவு சாத்தினான். சித்ராங்கி ஓடிவந்து பளிச்சென்று அவனை அணைத்துக் கொண்டாள். அவன் கண்களில், கன்னங்களில் முத்தமிட்டாள். உதடுகளைக் கவ்வினாள். வரதனும் அவளை இறுக்க அணைத்துக் கொண்டான்.

“எனக்காகத்தானே இத்தனையும் செய்தீர்கள்!” அந்த இருட்டில் அவள் கண்கள் மினுமினுத்தன.

வரதன் தலையசைத்தான்.

ஆம் என்று சொன்னான். குனிந்து அவள் இதழ்களைத் தேடி முத்தமிட்டான்.

அவளை அணைத்தபோது வீட்டிற்குள் போனான்.

அவள் விலகி அவனுக்கு வேறு உடை பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுத்தாள். ஈரத்தைக் களைந்துவிட்டு உலர்ந்த ஆடைகளை உடுத்திக் கொண்டார்கள்.

தீ மூட்டி இரும்பு அடுப்பில் உலர்ந்த சுள்ளிகளைப் போட்டு அவன் கூடத்திற்கு கொண்டு வந்தாள். இருவரும்

அருகே உட்கார்ந்து கொண்டு ஈரத்தால் வெளுத்துப் போன விரல்களுக்கு சூடேற்றிக் கொண்டார்கள்.

அருகருகே குளிருக்காக நெருங்கி உட்கார்ந்து கொண்டார்கள். ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

“எப்படி சட்டென்று சைவனாகி விட்டாய். எப்படி சட்டென்று மடைப்பள்ளிக்குள் புகுந்து கொண்டு இத்தனை ருசியாய், விரைவாய் உணவு தயாரித்து எல்லோருக்கும் அமுது படைத்தாய். எப்படி இவ்வளவு நல்லவனாக இருக்கிறாய். எல்லாம் கிடக்க, இந்த திருவானைக்காவல் தேவரடியார் சித்ராங்கியின் முன்பு எதற்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்.

நீ ஏன் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. நீ ஏன் எங்கேனும் நிலபுலன்கள் வாங்கி வீடுகட்டி குழந்தைகள் பெற்று சந்தோஷமாக இருக்கக்கூடாது.’’ அவள் படபடப்பாக பேசினாள்.

“நான் என்ன தவறு செய்தேன் சித்ராங்கி. எதற்காக என்னைத் தேவையில்லாமல் குடும்ப சிக்கலில் மாட்டு கிறாய். நான் உனக்கு என்ன தவறு செய்தேன்.’’ வரதன் கண் சிமிட்டிக் கேட்டான்.

“இவ்வளவு நல்ல மனிதனுக்கு திருமணமாகாமல் குழந்தை பெறாமல் போகக் கூடாது. வெறும் தேவரடியார் சிநேகிதம் மட்டும் உனக்குப் போதாது. நீ வாழ்க்கையில் உயர்வான இடங்களைத் தொட வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது. எனக்கு வரதனைத் தெரியும், வரதன் மிக நல்லவர், வரதன் பெரிய படிப்பாளி, வரதன் பெரிய புலவர், வரதன் நல்ல ஜோஸ்யக்காரர், வரதன் நான்கு வேதமும் தெரிந்தவர், வரதன் எல்லா சாத்திரங்



களும் கற்றவர் என்று ஊர் புகழ்ந்து பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்.

யாராவது, உனக்கு வரதனைக் தெரியுமா என்று கேட்டால் கொஞ்சம் தெரியும் என்று பொய் சொல்ல வேண்டும். ஆனால், மிக நன்றாக தெரியும் என்று எனக்குள் நானே சொல்லிக் கொள்ள வேண்டும்.’’

சித்ராங்கி அடிக்குரலில் முணுமுணுப்பாக பேசினாள்.

அவள் பேச்சில் காதல் சொட்டியது.

“ஏன் இப்படிப் பேசுகிறாய் சித்ராங்கி. நாம் இருக்கின்ற இந்த நிலைக்கு என்ன குறை? நீ தேவரடியார் என்பது உனக்கு வருத்தமாக உள்ளதா அல்லது நான் மடைப் பள்ளியில் சமைப்பவனாக இருப்பது உனக்குப் பிடிக்க வில்லையா. நாம் சந்தோஷமாகத்தானே இருக்கின்றோம்.

திருமணம் என்கிற பந்தம் என்னத்தைக் கொடுத்து விடும். அதனால் என்ன லாபம். இங்கே ஜம்புநாதருக்கு உணவு இல்லையென்றவுடன் எனக்கு உடம்பு பதறியது. எப்படி உணவில்லாமல் ஒரு கோவிலுக்குள் கடவுள் இருக்கலாம் என்று தோன்றியது. இதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று எண்ணம் வந்தது. உடனடியாக செய்தேன். நான் ஒன்றும் நல்லவனல்ல சித்ராங்கி. க்ஷணசித்தம். க்ஷணப்பித்தம் கொண்டவன் சித்ராங்கி! இதனாலேயே என்னால் எந்த ஊரிலும் தங்க முடியவில்லை. சிறிய வார்த்தைகளுக்குக்கூட நான் கோபித்துக் கொண்டு போய்விடுவேன்.

கோபமே இல்லாமல்கூட ஒரு ஊரை விட்டு நகர்ந்து விடுவேன்.

நான் பிறந்தது கும்பகோணம். வளர்ந்தது காஞ்சிபுர
நான் சுற்றாத ஊரில்லை சித்ராங்கி. என்னை வைஷ்ணவ
என்றா நினைத்துக் கொண்டாய், யார் சொன்னது..... நான்
வைணவனே இல்லை. ஸ்ரீரங்கம் கோவிலில் மடைப்பள்ளி
வேலை கிடைத்தது. நீ வைணவனா என்று கேட்டார்கள்.
ஆம் என்று சொல்லி விட்டேன்.

வைஷ்ணவனாக இருந்தாலென்னா, சைவனாக இருந்தா
லென்னா, இறைநம்பிக்கை உள்ளவனாக இருந்தால்
போதாதா. நான் பிறந்தது சைவ குலத்தில். ஆனால்,
சைவம்தான் உயர்ந்தது அல்லது விஷ்ணுதான் பெரியவர்
என்ற மூடநம்பிக்கைகள் எதுவுமில்லை.

கடவுள் ஒன்று. அது பல ரூபங்களில் பல்வேறு
மக்களால் பாராட்டப்படுகிறது. எப்படிப் பாராட்டினால்
என்ன... அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கிற
சக்தியைத்தானே பாராட்டுகிறோம்.

அகிலாண்டேஸ்வரி வெறும் பொம்மையல்ல. அவள் ஒரு
அற்புதமான சக்தி. அவள் எதிரே நிற்கும்போதெல்லாம்
எனக்கு உடம்பு பதறும். கண் சுழற்றிக் கொண்டு வரும்.
தலையில் ஒரு பாரம் வைத்தது போல இருக்கும்.

மூச்சு திணறும். அகிலாண்டேஸ்வரி அருகே இருப்பவர்
கள் புண்ணியம் செய்தவர்கள்.

அந்த அகிலாண்டேஸ்வரி பட்டினியாய் இருக்கிறாள்
என்றதும், எனக்குப் பசித்துவிடும். சித்ராங்கிக்கு சாப்பாடு
இல்லை. பட்டினியாய் இருக்கிறாள் என்றால், எப்படிப்
பதறுவேனோ, ஒரு மனிதர் பட்டினியாய் இருப்பது
எத்தனை கொடுமையோ அத்தனை கொடுமை கடவுள்
பட்டினியாக இருப்பது. இது பல்வேறு உற்பாதங்களை



விளைவிக்கும். அதனாலேயே நான் சைவனாக
மாறினேன்.''

''ஆனால், ஸ்ரீரங்கம் மடைப்பள்ளியில் இதைவிட
அதிகமான வருமானம் வருமே.''

''வருமானம் எல்லா இடத்திலும் வரும். வருமானம்
வரவேண்டும் என்று ஒரு ஆண் தீர்மானித்துவிட்டால்
அவன் எங்கேயும் எப்படியும் சம்பாதித்து விடுவான்.
வருமானம் முக்கியமல்ல. வந்த வருமானத்தை என்ன
செய்வது என்பதுதான் முக்கியம். எனக்கு என்ன செலவு.
நான் என்ன கோட்டை கட்டப் போகிறேன். யாருக்கு
வாரி வழங்கப் போகிறேன். ஏதேனும் காசிருந்தால்
உனக்குத் கொடுப்பதைத் தவிர வேறொன்றும் எனக்குத்
தெரியாது.''

''சரி... இன்னொரு கேள்வி?'' சித்ராங்கி தலைசாய்த்துக்
கொண்டு அவனைப் பார்த்தாள்.

''கேளேன்.'' வரதன் அவள் பக்கம் திரும்பிக்
கொண்டான்.

''எல்லாம் கிடக்க இந்த சித்ராங்கியை ஏன் பிடித்தீர்கள்.
ஸ்ரீரங்கத்து தேவரடியார்களைவிட நான் ஒன்றும்
அழகில்லையே. அவ்வளவு நாகரீகமும் எனக்குப் போறாதே.
வேத விஷயங்கள், சாஸ்திரங்கள் எதுவும் தெரியாத
வளல்லவா நான். தமிழ் மட்டுமே படிக்கத் தெரிந்த
என்னை ஏன் இவ்வளவு உயிருக்கு உயிராக காதலிக்
கிறீர்கள்.''

வரதன் அவள் கேள்விக்கு மெல்ல சிரித்தான். படிப்பு,
அழகு, பணம், பதவி இவை முக்கியமான விஷயங்களாக
எனக்கு என்றுமே தோன்றியதில்லை. ஒருவர் நல்லவரா

கெட்டவரா இதுதான் ஒருவரைப் பார்க்கும்போது எனக்கு தோன்றுகின்ற கேள்வி.

முதல் பார்வையிலேயே, முதல் பேச்சிலேயே, முதல் சந்திப்பிலேயே நீ மிக மிக நல்லவள் என்று எனக்குத் தெரிந்துவிட்டது சித்ராங்கி. உன் அன்பு என்னைக் கட்டிப் போட்டிருக்கிறது. அழகு, தோல் ஆழம், இந்த தோலுக்கு கீழே சிவந்த ரத்தம் ஓடுகின்ற தசையும், நரம்பும், எலும்பும் இருக்கின்றன. ஒரு மெல்லிய தோல் போர்வையால் இந்த உடம்பு மூடப்பட்டிருக்கிறது. அதைத்தான் அழகு என்று சொல்கிறோம். படிப்பால் கர்வம் வரும். கர்வத்தால் மற்றவர்களுக்கு துன்பம் நேரும். பணம் படிப்பைக் காட்டிலும் மிகுந்த திமிரைக் கொடுக்கும், தன்னைவிட உயர்ந்தவன் யாருமில்லை என்கிற அகம்பாவத்தைக் கொடுக்கும். அது ஊரையே கூட தொந்தரவு செய்யும். பதவிதான் இருப்பதிலேயே மிக மோசமான விஷயம். உலகமே தன் காலின் கீழ் இருக்கிறது என்று பதவியிலுள்ள ஒவ்வொரு மனிதனும் நினைத்துக் கொள்கிறான். அதிகார மமதையில் எப்படிச் சிந்திக்க வேண்டும் என்றுகூட தெரியாமல் சிந்திக்கிறான். சித்ராங்கி, சாதாரண மனிதராக இருப்பதைப் போல சுகம் உலகத்தில் எதுவுமில்லை. படிப்பாளிகளுக்கும், பணக்காரர்களுக்கும், பதவியில் இருப்பவர்களுக்கும் மனதில் நிம்மதியே இல்லை. உனக்கும் எனக்கும் இந்தச் சோறு பொங்கிப் போட்ட சந்தோஷம் இவ்வளவு இருக்கிறதல்லவா. ஜனங்கள் முழுவதுக்கும் கதம்ப சாதம் பொங்கிப் போட்டேனே, என் வயிறு எப்படி நிறைந்து விட்டது தெரியுமா. இந்த சந்தோஷம் நல்லவர்களுக்குத் தான் வரும். நீ அழைத்து ஓடி வந்தேன். இங்கே எவ்வளவு பெரிய காரியம் என்னை செய்ய வைத்திருக்கிறாய் சித்ராங்கி. நீ இல்லையெனில் இந்த மழையில் நான் ஸ்ரீரங்கம் விட்டு நகர்ந்திருக்கவே மாட்டேன். அவசரம்



உடனே வருக என்று ஓலையனுப்பினாய். உனக்குத்தான் ஏதோ ஆபத்து என்று வந்தேன். வந்தால் உன்னைப் பற்றி நீ சிந்திக்கவேயில்லை நானூறு ஜனங்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன செய்வது என்று கவலைப்பட்டிருக்கிறாய்.

ஜம்புநாதரும், அகிலாண்டேஸ்வரியும் ஒரு பகல் முழுவதும் உண்ணவில்லை. அவர்களுக்கு என்ன செய்வது என்கிற கவலை. இந்தக் கவலையாலல்லவா எனக்கு ஓலை எழுதி அனுப்பினாய் சித்ராங்கி. இப்படி ஊருக்காக கவலைப்பட யாருக்குத் தெரியும். உனக்கு மட்டுமே தெரியும். உன்னிடம் நான் காதலிப்பது இந்த மிகப் பெரிய அன்பைத்தான். இந்த அன்பு என்மீது கொட்டப்படும் போது நான் திக்குமுக்காடிப் போகிறேன். சித்ராங்கி! எனக்கு நீ போதும்.” வரதன் மெல்ல நகர்ந்து அவளை அணைத்துக் கொண்டான். அவள் இடுப்பை இறுக்கிக் கொண்டான்.

சித்ராங்கி அவள் முகத்தைக் தடவிக் கொடுத்தாள். மார்பை நீவினாள். தோளில் கைபோட்டு பின்னிக் கொண்டாள்.

“நீங்கள் என்னைப் புகழ்ச்சியால் வெல்கிறீர்கள்.”

“இல்லை, தவறு சித்ராங்கி. நான் எல்லோரையுமே உண்மையால்தான் வெல்கிறேன். எல்லோரிடமும் இயன்ற வரை சத்தியமாய் நடந்துகொள்கிறேன். நேர்மையாகப் பேசுகிறேன், நான் எதன்பொருட்டும் எவரையும் ஏமாற்றுவதில்லை சித்ராங்கி. இதனால்தான் எனக்கு அருகே நல்லவர்கள் வந்து உட்கார்ந்து கொள்கிறார்கள். கெட்டவர்கள் எனக்கு அருகே வருவதேயில்லை.”

“இப்போது பசிக்கவில்லையா?”

''ஆமாம். சேலாகப் பசிக்கிறது.''

''சற்று இருங்கள்.'' அவள் உள்ளே போய் கொ…
நிறைய பசும்பால் காய்ச்சி மேலே பனங் கல்கண்டு போ…
தூவி எடுத்து வந்தாள். அவன் கையைப் பிடித்து ஏ…
போட்டிருந்த அறைக்கு இழுத்து வந்தாள், கதவு சாத்தி…
கொண்டாள். அந்தப் பாலை ஆற்றி இருவரு…
குடித்தார்கள்.

மெல்ல அவன் கட்டிலில் சாய்ந்தான். சித்ராங்…
அவனுக்கருகே போய் படுத்துக் கொண்டாள்.

அவன் புரண்டு சித்ராங்கியின் தலையை வருடி அணை…
துக் கொண்டாள். அவள் அவனை ஏற்றுக் கொண்டாள்.

காற்று வேகமாய் ஊருக்குள் நுழைந்து எல்லா
மரங்களுக்குள்ளும் ஊடுருவி குலுக்கி இலைகளை
உதிர்த்தது. மழைநீர் சரிவாய் மண் மீது விழுந்தது. குளி…
ஊரைப் பற்றிக் கொண்டது. காற்றும் மரமும் களிநடனம்
புரிந்தன. மழை பலமாய் தாக்க, பூமி திடமாய் எதிர்த்தது.

அகிலாண்டேஸ்வரி மெல்ல கருவறை விட்டு வெளியே
வந்தாள்.

வரதன் சித்ராங்கியை விட்டுப் பிரிந்தான். அயர்ந்தான்.
எழுந்து கொல்லைப்புறம் போனான். மறுபடியும்
குளித்தான்.

வரும்போது கட்டிக் கொண்டிருந்த உடைகளை
இடுப்பில் கட்டிக் கொண்டு மறுபடியும் கோவிலுக்கு
ஓடினான்.

சித்ராங்கி, வரதன் கொடுத்த அயர்ச்சியால் கண்மூடி
தூங்கிப் போனாள்.



இரவு வேளைக்கான நைவேத்தியத்தை வரதன் தயாரித்தான். பால் சாதம் கிளறினான்.

ஜம்புநாதருக்கு தோசை வார்த்தான். எடுத்துக் கொண்டு போய் குருக்களிடம் கொடுத்து நைவேத்தியம் செய்த பிறகு குழந்தைகளுக்கு விநியோகம் செய்தான்.

இருட்டியது. காற்று அதிகமாகியது. மழை விடாது பெய்தது. மடைப்பள்ளியின் வாசலில் தலைக்கு ஒரு மணைக்கட்டை வைத்துக் கொண்டு மேலே ஒரு துணியைப் போர்த்திக் கொண்டு வரதன் தூங்கத் துவங்கினான்.

கோயிலுக்குள் ஜனங்கள் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். அகிலாண்டேஸ்வரி எல்லோரையும் பார்த்தபடி கோயிலை வலம் வந்தாள். சட்டென்று இடைவிடாது ஜபம் செய்து கொண்டிருக்கும் அந்த அந்தணன் முன்பு நின்றாள்.

க எஇ லஹறீம் அசகல ஹ்றீம்

சௌ: சகலஹ்றீம்

மந்திரம் இப்பொழுது அவன் உடம்பிலிருந்து வளைந்து மேல்நோக்கி ஒளி பொருந்திய ஒரு தாமரைப் பூ போல எழும்பியது.

மந்திரம் தாமரை மொக்கு போல் மலர்ந்திருந்தது. அவனுடைய மனஉறுதியைப் பார்த்து அகிலாண்டேஸ்வரி புன்னகை செய்தாள். குனித்து ஒரு பார்வையில் தன்னை மாற்றிக் கொண்டாள்.

வெள்ளை உடை, வைரக் கிரீடம், முத்து நகை என்றும் மிக வெண்மையாய் மாறி அவன் எதிரே நின்றாள். மெல்ல கை தட்டினாள்.

அந்தணன் உணர்ச்சிப் பெற்றான்.

"எழுந்திரு." இனிமையான குரலில் அகிலாண்டேஸ்வரி கட்டளையிட்டாள்.

அந்தணன் திரைக்கு நடுவே இருந்தபடியே அரைக்கண் விழித்துப் பார்த்தான். யாரோ நிற்பது போல் தெரிந்தது. சிரமப்பட்டு விழி மடல்களைத் திறந்தான். வெள்ளை வெளேர் என்று உருவம் நிற்பதைப் பார்த்து "யார் நீங்கள்?" என்று கேட்டான்.

"நான் அகிலாண்டேஸ்வரி. நன்றாகப் பார்."

"அகிலாண்டேஸ்வரி எப்படி வெள்ளையாக இருக்க முடியும். நீ ஏதோ ஆவி. அகிலாண்டேஸ்வரி சிகப்பு வண்ணம் உடையவள்.

நான் சொல்லும் மந்திரம் சிகப்பு வண்ணம் உடையது. நீ ஏன் வெள்ளை வண்ணத்தில் வந்திருக்கிறாய். வெண்மை நிறத்தில் வந்திருப்பதால் நீ அகிலாண்டேஸ்வரி அல்ல.

இந்தக் கோவிலைச் சுற்றிக் கொண்டிருக்கும் ஏதோ ஒரு ஆவி. நான் மந்திர ஜபம் சொல்கிறவன். காயத்ரி உபாசனை செய்கிறவன். நீ என்னிடம் வரலாகாது. போ, விலகிப் போ." அந்தணன் தன் அருகிலிருக்கும் கமண்டலத்திலிருந்து நீர் எடுத்து அகிலாண்டேஸ்வரி மீது வீசினான்.

அகிலாண்டேஸ்வரி சிரித்தாள்.

"முட்டாளே, வாயைத் திற. நான் அகிலாண்டேஸ்வரி வந்திருக்கிறேன். உன் ஜபத்திற்கு பரிசாக உன் வாயில் தாம்பூலம் உமிழப் போகிறேன்."

"முடியாது. நீ துர்தேவதை. வெறும் ஆவி. என்னை விட்டு விலகிப் போ" என்று சொல்லி மந்திர உச்சாடனம் செய்து மறுபடியும் கமண்டலத்திலிருந்து நீர் எடுத்து அவள்



மீது தெளித்தான். தரையில் கையால் அறைந்து ஒற்றை விரலை நீட்டி போ என்று உத்தரவிட்டான்.

அகிலாண்டேஸ்வரி சிரித்தாள்.

"முட்டாள்" என்று சொன்னாள். விலகினாள். நடந்தாள். மடைப்பள்ளி அருகே போனாள்.

அங்கே வரதன், சித்ராங்கியோடு நடத்திய கூடலால் மெல்ல வாய் பிளந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

அவனைத் தாண்டும்போது அகிலாண்டேஸ்வரி நின்றாள். ஓ... எனக்கு பசிக்கிறது என்று சைவனாக மாறியவனல்லவா நீ. பெண்களும், குழந்தைகளும், ஜனங்களும் பசியால் கிடக்கிறார்கள் என்று கதம்பசாதம் கிளறிப் போட்டவனல்லவா? நீ. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் எல்லோருக்கும் உதவி செய்தவனல்லவா நீ.

சைவம் என்ன.... வைணவம் என்ன.... இறை முக்கியம் என்று பேசியவனல்லவா நீ.

"வரதா! வாயைத் திற."

மெல்ல தூக்கத்திலேயே வாயைத் திறந்தான். அகிலாண்டேஸ்வரி நின்ற வண்ணம் தன் வாயிலுள்ள தாம்பூலச் சாற்றை உமிழ்ந்தாள்.

சிலீரென்று அமுதபானம் வரதன் தொண்டைக்குள் இறங்கியது. வரதன் திடுக்கிட்டு எழுந்தான். உட்கார்ந்தான். எதிரே பார்த்தான்.

வெள்ளை உடை உடுத்தி வெள்ளை தாமரை ஏந்தி, வெள்ளை முத்துநகையும், வைரக்கிரீடமும் அணிந்து, நீண்ட தலைமுடியோடு அபய ஹஸ்தத்தோடு அகிலாண்டேஸ்வரி இருந்தாள்.

''தாயே.... தாயே! நீ அகிலாண்டேஸ்வரியா, என்னைப் பார்க்க வந்தாயா.. என் தொண்டைக்குள் சிலீரென்று இறங்கியது நீ உமிழ்ந்த அமுதபானம்தானா? உன்னுடைய எச்சில் உயர்ந்த விஷயம். எனக்கு உயர்ந்த பரிசு கொடுக்க வந்தாயா..... உன் பரிசு எனக்கு மட்டுமல்லாமல், தமிழ் மொழிக்காக இருக்கட்டும். இந்த ஊருக்காக இருக்கட்டும். இந்த தேசத்திற்காக இருக்கட்டும். அந்நியர்கள் உள்ளே நுழைந்த இந்த நேரத்தில் இந்த வரதன் என்ன செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தை எனக்கு உள்ளேயிருந்து அறிவுறுத்து.''

அப்படியே புரண்டு அகிலாண்டேஸ்வரி காலில் விழுந்தான்.

அகிலாண்டேஸ்வரி தன் காலை அவன் தலையில் சற்று வைத்திருந்துவிட்டு நகர்ந்தாள். கருவறைக்குள் புகுந்தாள். ஐக்கியமானாள்.

வரதன் எழுந்தான். சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டான். அவனுக்கு என்ன சொல்கிறோம் என்று தெரியவில்லை. அவன் மனசுக்குள் ஒரு மந்திரம் தோன்றியது.

க எஇ லஹரீம் அசஹலக் ஹ்ரீம்
செள: சஹல ஹ்ரீம்:

அந்த மந்திரத்தை யாரும் உபதேசிக்காமல் தனக்குள் தானாகவே ஸ்பூரித்து சொல்லத் துவங்கினான். உள்ளேயிருந்து அகிலாண்டேஸ்வரி அவனைப் பார்த்து சிரித்தாள்.

வரதன் கை கூப்பினான்.

தனக்குத் தெளிவு வந்துவிட்டது என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. அவன் வாயிலிருந்து அற்புதமான தமிழ்ப் பாடல்கள் பெருகத் துவங்கின.



ஏர் ஆனைக்காவில் உறை என் ஆனைக்கு அன்று அளித்த
போர் ஆனைக் கன்றுதனைப் போற்றினால் வாராத
புத்தி வரும்; பத்திவரும்; புத்திர உற்பத்தி வரும்;
சக்தி வரும் சித்தி வரும்தான்.

என்று திருவானைக்காவல் பிரசன்ன விநாயகர் மீது முதல் பாட்டு பாடினான்.

வெள்ளைக்கலை உடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள். வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடு என்னைச்
சரியாசனம் வைத்த தாய்.

தனக்கு கவி பாடவும் வந்துவிட்டது என்று வரதனுக்குத் தெரிந்துவிட்டது.

பாடு வரதா. தொடந்து பாடு. சிறு சிறு கவிதைகளாக பாமர ஜனங்களும் சிரிக்கும்வண்ணம் பாடு. புலவருக்கான புலவராகாதே. மக்களுக்கான புலவராக மாறு. எல்லோரையும் சந்தோஷப்படுத்து. எல்லோரையும் ஒன்றிணைக்கின்ற பாடல்களைப் பாடு. யாரெல்லாம் மதம் பற்றி கேலி செய்கிறார்களோ அவர்களை இழித்துப் பாடு. யாரெல்லாம் மதம் பற்றி ஆவேசமாக அலறுகிறார்களோ, அவர்களை உன் பாடலில் நிந்தா ஸ்துதி செய்.

வரதா, கருத்த மேகம்போல, காளமேகம்போல, அடர்ந்து விடாது பெய்யும் மழை உடைய மேகம் போல பாடு. காளமேகமே பாடு. தமிழ்ப் பாடு.

வரதனுக்கு உள்ளேயிருந்த அகிலாண்டேஸ்வரி அவனோடு பேசினாள்.

வரதன் எழுந்தான். மழையில் நனைந்தபடி ஓடி மூடியிருந்த அகிலாண்டேஸ்வரி கதவுக்கு முன்னே நெடுஞ் சாண்கிடையாக விழுந்தான். விம்மி விம்மி அழுதான்.

தாயே! உன் ஆணையை இந்த காளமேகம் ஏற்று நடத்து வான். நீ சொன்னதுபோல அவன் இனி அவன் மக்களுக்கு மக்களை மாற்றுவதற்காக கவி பாடுவான். பெரிய காவியங் கள் செய்து ஓலைச்சுவடிகள் அதிகரிப்பதில் எனக்கு அக்கறையில்லை. மக்களுடைய வாழ்க்கையை மக்களுக்கு அருகே நின்று கவனித்து மக்களுக்கு எடுத்துச் சொல்வ தான் இனி இந்த காளமேகத்தின் பணி. கேலியும் கிண்டலு மாய் அவர்களைத் திருத்துவதுதான் என் வேலை.

அம்மா எப்போதும் என்னோடு இரு என்று எழுந்து வணங்கினான்.

கோவிலிலிருந்து கிளம்பி தாசி சித்ராங்கியின் வீடு நோக்கி நடந்தான்.

சித்ராங்கி வீட்டிலிருந்து இறங்கி ஓடிவந்து கொண்டிருந் தாள். திருவானைக்காவல் பின்புறமிருந்த நடன மேடையைத் தாண்டி அகிலாண்டேஸ்வரி சந்நிதி நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தாள்.

''சித்ராங்கி! என்ன இந்த இருட்டில்...'' காளமேகம் பதற்றத்தோடு கேட்டார்.

''உங்களை யாரோ கொலை செய்வதுபோல கனவு கண்டேன். பெரிய சூலத்தால் நெஞ்சில் குத்திக் கொல்வது போல் கனவு கண்டேன்.

சூலம் பட்டவுடன் நீங்கள் வெடித்து சிதறிவிட்டீர்கள். பெரிய சூறாவளி காற்றாய் கிளம்பி வான் உயரம் நிற்கிறீர் கள். எனக்கு உடம்பெல்லாம் நடுங்கிவிட்டது. விரித்த



சடையும், கோரைப் பற்களும், பெரிய விழிகளுமாய் ஒரு பெண் தெய்வம் உங்களைக் கொன்றுவிட்டது.'' படபடக்க சித்ராங்கி பேசினாள்.

''உண்மை சித்ராங்கி. வரதன் இனிமேல் இல்லை. அகிலாண்டேஸ்வரி வரதனைக் கொன்றுவிட்டு கவி காளமேகத்தை உயிர்ப்பித்திருக்கிறாள்.'' காளமேகம் நடந்ததைச் சொன்னார்.

சித்ராங்கி, அந்த நடன மண்டபத்துக்கு அருகே காளமேகத்தை கிழக்கு பார்க்க நிற்க வைத்து காலில் விழுந்து நமஸ்கரித்தாள்.

''அய்யா எப்போதும், என் கூடவே இரும்.... நீ எங்கு போனாலும் என்னை தயவுசெய்து அழைத்துச் செல்லும். எனக்கு இந்த நடன வாழ்க்கை அலுத்துவிட்டது. நானும் உம்மொடு ஊர் சுற்ற தயாராயிருக்கிறேன். என்னை விட்டு விடாமல் உங்களோடு எப்போதும் வைத்திருக்க வேண்டு கிறேன்.''

காளமேகம் சில வினாடிகள் யோசித்தார்.

''அகிலாண்டேஸ்வரியின் உத்தரவு அப்படியாயின், சரி.. உன் வீட்டில் படியேறி, என் நிலையை சொல்லி, நீ என்ன கேட்டால் சரி... என்று ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருந்தேன். நீ பொன் கேட்காமல், என்னோடு இருக்கின்ற விருப்பத்தை தெரிவித்தாய். சித்ராங்கி! அவ்வண்ணமே ஆகுக. எப்போதும் நான் எங்கு சென்றாலும் என்னோடு இரு.'' அவர்கள் கை பின்னிக் கொண்டார்கள், வீடு நோக்கி நகர்ந்தார்கள்.

# 2

தமிழ்ப் பேசும் சோழ தேசத்துக்கு அது மிகவும் மோசமான காலம், வலிமை மிக்க சோழர்கள் ஆட்சி முடிந்து, வீரம் மிக்க பாண்டியர்களின் ஆட்சி குலைந்து தெளிவுமிக்க சம்புவராயர்களின் ஆட்சியும் அடியோடு அழிந்து, தெலுங்கு பேசும் தேசத்திலிருந்து, கிருஷ்ண தேவராயரின் வம்சாவளியினர் சோழ தேசத்தைக் கைப்பற்றித் தங்களை நிலைநிறுத்திக் கொண்ட காலம்.

பாண்டியர்களின் இறுதி காலத்தில் மாலிகாப்பூர் படையெடுத்து, மதுரையையும், திருச்சியையும், சீரங்கத்தையும், இன்னும் பிற ஊர்களையும், கொள்ளையடித்து, குவியல் குவியலாய், யானை யானையாய், தங்கங்களை ஏற்றிப் போன காலம். அப்படி யானைகளால் சுமக்க முடியாத தங்கங்களை ஆற்றில் எறிந்துவிட்டுப் போன காலம்.

ஹரிஹரர் புக்கர் என்று இரண்டு இளைஞர்கள் இஸ்லாமியர்களின் இந்த கொள்ளையடித்தலை தடுப்பதற் காகத் தெலுங்கு தேசத்தில் வீறு கொண்டு எழுந்தார்கள். ஒரு அற்புதமான வம்சத்தை ஏற்படுத்தினார்கள். கோயில் களை கொள்ளையடிக்க விடாது தென்னிந்தியாவை தங்களுடைய போர் திறமையினால் கட்டிக் காத்தார்கள். மறுபடியும் படையெடுப்பு நடக்காவண்ணம் மிக கவனமாக இருந்தார்கள்.

தெலுங்கு தேசத்திலிருந்து சேர தேசம் உட்பட்ட தமிழ் தேசத்தை அவர்கள் ஒரு குடையின்கீழ் ஆட்சி செய்ய விரும்பினார்கள். ஆனால், அவர்களுக்கு ஒரிஸ்ஸாவிலிருந்து ஒட்டர்களின் இடைவிடாத தொந்தரவு இருந்தது. இஸ்லாமியர்களின் மிரட்டல் அவ்வப்போது இருந்தது. கர்நாடகாவிலிருந்து கோசலர்கள் தங்களுடைய கொடியை



ஏற்ற விரும்பினார்கள், தென்னிந்தியாவை தங்களுடைய குடையின்கீழ் கொண்டு வர ஆசைப்பட்டார்கள்.

அங்கிருந்து வீரமிக்க சைவர்கள் இஸ்லாமியர்களுக்கு எதிராய் உருவாகும் படையில் சேர்ந்து கொண்டு பல சிறப்புகள் பெற்றார்கள்.

கிழக்குப் பக்கம் தெலுங்கு பேசும் மன்னர்கள் மிக பலமாக உருவானதால், மேற்கே கர்நாடகத்திலிருந்து போர் வீரர்கள் தெலுங்கர்களோடு சேர்ந்துக் கொண்டார்கள். சேர தேசத்து இளைஞர்களும் தெலுங்கர்கள் படையில் இருந் தார்கள். மயிலை, திருவொற்றியூர். திருவான்மியூர் போன்ற தொண்டை தேசத்து பரதவர்களும், வன்னிய இளைஞர் களும், தெலுங்கர்களோடு கைகோத்துக் கொண்டு சோழ தேசத்திலுள்ள சிற்றரசர்களை ஜெயித்து எல்லா இடத்திலும் தெலுங்கு மன்னர்களின் ஆட்சியை நிறுவினார்கள். இதனால், இஸ்லாமியர்கள் தெற்குப்பக்கம் வருவது தாமத மாயிற்று. பாமினியைத் தாண்டி இஸ்லாமியர்கள் தெற்கே நுழைய முடியாமல் போயிற்று.

திரிசிரபுரம் என்று அழைக்கப்படும் திருச்சிராப்பள்ளி யில் திருமலைராயன் என்கிற தன்னுடைய தளபதியை கிருஷ்ண தேவராயர் தன் பிரதிநிதியாக அரசாள அனுமதித் தார்.

திருமலைராயனுக்கு கீழே கர்நாடகத்தைச் சேர்ந்த கோனேரிராயன் என்கிற படைத் தளபதி முக்கிய பொறுப்புகள் வகித்து வந்தான்.

திருமலைராயனுக்கு ஓயாத தலைவலி. தீராத மூக்கு ஒழுகல் தொந்தரவு செய்து கொண்டிருந்தது. அறிவுத் திறனும் ஆற்றலும் உடையவனாக இருந்தாலும், திருமலை ராயன் அரசாங்க விஷயத்தில் முழு கவனம் செலுத்த

முடியாதவனாக இருந்தான். தமிழ் தளபதிகளைவிட கர்நாடகத்து இளைஞனான கோனேரிராயனை நம்பினான். தமிழகத்தின் வன்னிய இளைஞர்கள் மீது திருமலை ராயனுக்கு கடும் சந்தேகம் இருந்தது. பதவி உயர்த்தினால், தன் மீதே பாய்ந்துவிடுவார்களோ என்ற பயம் இருந்தது. எனவே தமிழர் அல்லாதவர்களையே அவன் அதிகம் ஆதரித்து வந்தான். இதையும் தவிர கோனேரிராயன் அந்தணன். ஆனாலும் வாள் போரில் மிகவும் வல்லவன். போர் தந்திரங்கள் முற்றிலும் தெரிந்தவன். நன்கு படித் தவன். அரசாங்க நிர்வாகத்தில் கை தேர்ந்தவன்.

வடக்கேயிருந்து ஸ்ரீரங்கம் நோக்கி வரும் முன்னரே எதிரிகளை தடுத்து நிறுத்தவேண்டுமென்று காவேரியைத் தாண்டி, கொள்ளிடம் தாண்டி, கண்ணனூர் என அழைக்கப்படும் சிற்றூரில் படைகளைக் குடியமைத்து கோனேரிராயனுக்கு எல்லைக் காவல் பொறுப்பைக் கொடுத்தான்.

அந்தக் கண்ணனூரில் ஒரு மிக அழகான காளி கோவில் இருந்தது. அந்தக் காளி கோவிலிலுள்ள இடத்திற்கு சமயபுரம் என்று பெயர். அந்த சமயபுரம் மாரியம்மன் மீது எல்லோருக்கும் அளப்பரிய பக்தி இருந்தது.

சமயபுரம், கண்ணனூரை போர் வீரர்களின் வாழ்க்கைத் தலமாக திருமலைராயன் மாற்றினான்.

அந்த ஊருக்குப் பல வசதிகள் செய்து கொடுத்தான். கல்வீடுகள் எழுப்பினான். கோவிலைச் சுற்றி பெரிய மண்டபங்கள் கட்டினான். கோவிலுக்கு அருகே ஓடும் கால்வாயில் இடைவிடாது தண்ணீர் ஓடும்படி பார்த்துக் கொண்டான்.



கண்ணனூர் சுற்றிய பகுதிகளிலிருந்து வரியாக நெல்லும் மற்ற தானியங்களும் ஆடுகளும் வாங்கிக் கொள்ள கோனேரிராயனுக்கு உரிமை அளித்தான்.

திரிசிரபுரத்தின் எல்லையில் கோனேரிராயன் சிற்றர சனாய், தனியனாய் எந்த பந்தமுமின்றி மிக சந்தோஷமாக தன்னுடைய பணியைச் செய்து கொண்டிருந்தான்.

தாய்மொழி கன்னடமாக இருந்தாலும் கோனேரிரா யனுக்கு தமிழ் மொழி மிகவும் பிடித்திருந்தது. தமிழில் பேச மட்டும் இல்லாது, எழுதவும் படிக்கவும் கற்றிருந்தான். கம்பராமாயணத்தை பிறர் சொல்ல கேட்டு அனுபவித் தான். சேக்கிழார் எழுதிய பெரிய புராணத்தைப் படித்து கதை சொல்லக் கேட்டு சைவ பெரியார்கள் வாழ்க்கையை நினைத்து, கண்ணீர் சிந்தினான். அடி மனதில் அவனுக்கு தெலுங்கர்கள் மீது கோபம் இருந்தது.

தெலுங்கர்களின் வைஷ்ணவ வெறி அவனுக்குப் பிடிக்காமல் இருந்தது. இந்த நேரத்தில் சைவம், வைணவம் என்று பிரித்துக் கொள்ளலாமா? எப்போ வேண்டு மானாலும், இஸ்லாமியர்கள் தாக்கலாம் என்ற நேரத்தில் வைணவமே உயர்ந்தது என்று பேசவிடலாமா, சைவத்தை இழிவுபடுத்தலாமா, சிதம்பரத்தில் உள்ள தீட்சதர்கள் அடிப்படையாக ஒரு சில கோரிக்கைகள் கேட்டபோது இது தரமுடியாது என்று திருமலைராயன் சொல்லியது அவருக்கு வருத்தத்தை உண்டுபண்ணியது. சற்றுப் பொறுத் துக் கொள்ளுங்கள். நான் சில திட்டங்கள் வைத்திருக் கிறேன். நேரம் வரும்போது உங்கள் உரிமைகளை உங்களுக்கு நிச்சயம் நான் வாங்கித் தருவேன்' என்று கோனேரிராயன் அவர்களுக்கு சத்தியம் செய்து கொடுத் திருந்தான்.

திருவான்மியூரிலிருந்து திரிசிரபுரம் நோக்கி வரும் பாதையில் சமயபுரத்தின் எல்லையில், ஒரு பொற்றாமரைக் குளம் உண்டு. அங்கே நடு சுவரோடு கொண்ட மாளிகை அமைத்து, பொற்றாமரைக் குளத்தில் ஒரு நாள் காலை கோனேரிராயர் குளித்துக் கொண்டிருந்தபோது, அங்கே ஒரு சிறுவன் ஓலைப் படித்துக் கொண்டிருந்தான். அந்த ஓலையில் ஒரு கவிதை எழுதியிருந்தது.

பெருமாளும் நல்ல பெருமாள். அவர்தம்
திருநாமம் நல்ல திருநாள். பெருமாள் இருந்த
இடத்தில் சும்மா இராமையால் அய்யோ பருந்து
எடுத்து போகிறதே பார்.

கோனேரிராயனுக்கு சிரிப்பு வந்துவிட்டது. கருட வாகனத்தில் பெருமாள் உலா வருவதை இப்படி கேலியாக யாரோ தமிழ்க் கவிதை எழுதியிருக்கிறார்கள் என்று புரிந்து கொண்டான். பையனை கைதட்டி அருகே அழைத்தான்.

''யாருடைய பாடலது?'' என்று கேட்டான்.

''தெரியவில்லை அய்யா.... எனக்கு வெறும் ஓலைச்சுவடி தான் கிடைத்தது. பாடலுக்குக் கீழே யார் எழுதினார்கள் என்று கையெழுத்தேயில்லை. இது பெருமாளை கேலி செய்த பாட்டாக இருந்ததால் விரும்பிப் படித்தேன்.''

''வேறு ஓலைகள் ஏதேனும் இருக்கின்றனவா. இது ஒன்றுதானா?'' கோனேரிராயன் அந்த சிறுவனை வினவினான்.

''இன்னொரு ஓலைக்கூட இருக்கிறது அய்யா. இது சிவனை கேலி செய்தது.''

''அப்படியா. படி.''



''நச்சரவம் பூண்ட தில்லை நாதரே, தேவரீர்
பிச்சையெடுத்து உண்ணப் புறப்படும் உச்சி நேரம்.
[illegible] ஏன், குஞ்சரம் ஏன், கார் கடல் போல்
முழங்கும் மேளம் ஏன், இராசாங்கம் ஏன்.''

கவிதை கேட்டு கோனேரிராயனுக்கு சிரிப்பு அடக்க முடியவில்லை. உட்கார்ந்து விழுந்து சிரித்தான். தில்லை நடராசன் பிச்சாண்டி வேடம் பூண்டு ஊர்வலமாக வருகிறபோது மேளதாளம், எக்காளம் எதற்கு, யானை செல்வது எதற்கு, கொடை கொடி போன்ற அரசு சின்னங்கள் எதற்கு, எடுக்கப் போவது பிச்சை. அதற்கு இத்தனை ஆர்ப்பாட்டமா என்று கவிதை அமைந்திருந்தது. உண்மைதானே. தில்லை நடராஜர் பிச்சையெடுக்கப் போனால் எத்தனை வேண்டியிருக்கிறது என்று வாய்விட்டு கோனேரிராயன் சிரித்தான்.

''யார் அந்த கவிஞன். மிக அற்புதமான பாடல்களாக இருக்கின்றனவே. நான் மேலும் படிக்க விரும்புகிறேன். தம்பி, இந்தா இரண்டு பொற்காசுகள். மேலும் ஓலை கிடைத்ததால் என்னிடம் கொண்டு வா.....'' ஒவ்வொரு ஓலைக்கும் ஒவ்வொரு பொற்காசு தருகிறேன்.''

அந்த பிள்ளை பிற்பகல் கோனேரிராயனை பார்க்க வந்தது.

''என்ன ஓலை வைத்திருக்கிறாயா?'' கோனேரிராயர் அந்தப் பையனை ஆவலோடு கேட்டார்.

''ஆமய்யா.... ஒரே ஒரு ஓலை கீழே கிடந்தது. எடுத்து வந்தேன். இதுவும் அந்தக் கவிஞன் எழுதிய பாடல் போலவே இருக்கிறது.''

''அப்படியா.. படி பார்ப்போம்...''

"அப்பன் இரந்துண்ணி. ஆத்தாள் மலை நீலி. ஒப்பரிய மாமன் உறிதிருடி. சப்பைக் கால் அண்ணன் பெருவயிறன். ஆறுமுகத்தானுக்கு இங்கு என்னும் பெருமை இவை.''

ஆறுமுகக் கடவுளுக்குத் தந்தையாகிய சிவபெருமான் பிச்சையெடுத்து வாழ்பவர். தாய் உமையவளோ மலையரசன் மகளாய் பிறந்து நீல நிறத்தோடு விளங்குபவள். ஒப்பில்லாத மாமனாகிய திருமாலோ ஆய்ச்சியர் இல்லங்களில் உறிகளிலிருந்து வெண்ணெய் திருடியவன். குறுக தரித்த கால்களை உடைய அண்ணனாகிய விநாயகரோ பெரிய வயிறை உடையவர். இவை முருகப் பெருமானைப் பற்றி மதிக்கக்கூடிய பெரும் சிறப்புகளாகும் என்று கவிதை கேலி செய்திருந்தது.

"அற்புதம்... அற்புதம்! உண்மையைச் சொல்கிறார். அதே சமயம் கேலியாகவும் சொல்கிறார். கேலியாக சொல்வதாலேயே உண்மை இன்னும் அழகாக விளங்குகிறது. இந்த பாட்டை எவரால் மறுக்க முடியும். அதே நேரம் இந்த பாட்டினுடைய எளிமை எவ்வளவு சுவையாக இருக்கிறது.

ஆமாம்.... பெயரில்லாத ஓலை உனக்கு எப்படிக் கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. உன்னிடம் யாராவது கொடுக்கிறார்களா அல்லது நீயே எழுதி ஏதேனும் செய்கிறாயா.''

"அய்யா! இத்தனை அற்புதமாக கவிதை எழுத எனக்கு ஆற்றல் இல்லை. நான் இருக்குமிடத்தில் அவ்வப்போது யாரோ ஓலை கொண்டு வந்து வைக்கிறார்கள்.

அந்த ஓலையை நான் சத்தம் போட்டு படிக்கிறேன். உங்களிடம் தருவதற்காகவே இந்த ஓலைகளை என் அருகே வைக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், யார்



வைப்பது என்பது எனக்குத் தெரியவில்லை. வைத்தது யார் என்று கண்டுபிடித்தால் நிச்சயம் உங்களுக்கு சொல்கிறேன். மற்றபடி இந்த ஓலையிலுள்ள கவிதைக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்தப் பொற்காசுகள்கூட அந்த கவிஞனுக்குப் போய்ச் சேர வேண்டியதுதான். யாரென்று தெரிந்தால் பொற்காசுகளை அவரிடம் கொடுத்து விடுவேன்.''

"வேண்டாம். பொற்காசுகளை நீயே வைத்துக்கொள். யாரென்று தெரிந்தால் அந்த செய்தியை உடனடியாக என்னிடம் வந்து தெரிவி. அந்தக் கவிஞரை சிறைப்படுத்தி விசாரிக்கிறேன்.''

ஆனால், ஓலை ஏதும் கிடைக்கவில்லை. இரண்டு முறை ஆள் அனுப்பி அந்தப் பையனை அழைத்து வர சொல்லி, ஓலையேதும் கிடைத்ததா என்று விசாரித்தபோது அந்தப் பையன் கை கட்டி உதடு பிதுக்கினான்.

"ஏதும் கிடைக்கவில்லை'' என்று பதில் சொன்னான்.

நான்கு வரி வெண்பாவில் அழகான பாடல் எழுதிய அந்தப் புலவனைப் பற்றி இடைவிடாத ஒரு ஏக்கம் கோனேரிராயன் மனதில் இருந்தது.

திரிசிரபுரத்தில் இருந்தாலாவது பொழுது போக வழியுண்டு. வேத விற்பன்னர்களோடும், தமிழ்ப் புலவர்களோடும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கலாம். அல்லது, மலைக் கோவில் ஏறி காவிரியின் வளைவை பார்த்துக் கொண்டு இருக்கலாம். அல்லது அரசாங்க அலுவலர்களோடு திட்டம் ஏதேனும் பேசி கொண்டு இருக்கலாம். நன்றாக நாலு காதம் தள்ளி இந்த சமயபுரத்து கண்ணனூரில் உட்கார வைத்து விட்டார்கள். எந்த வேலையும் இல்லாமல் குடித்துவிட்டு உறங்கும் படை வீரர்களுக்கு

தலைவனாக வெறுமே உட்கார்ந்திருப்பது. வேதனையாக இருந்தது. நல்லதொரு நட்பு கிடைத்தால், நன்றாக இருக்குமே என்று தோன்றியது. அவ்வப்போது போய் சமயபுரத்தாள் முன்பு நின்று வெறும் போர்வீரனாக, வெற்றுத் தளபதியாக என்னை செய்துவிடப் போகிறாயா, இந்த தமிழ் மண்ணை ஆட்சி செய்யும் மன்னனாக அன்னையே மாற்றமாட்டாயா என்று கைகூப்பி இறைஞ்சினான். தனியே அலைந்தான்.

திருவானைக்காவல் சித்ராங்கியின் வீட்டில், காளமேகத்தின் பெருமையைக் கேட்டு பலர் வந்து கூடினார்கள். அகிலாண்டேஸ்வரி தாம்பூலம் உமிழ்ந்த கதையைக் கேட்டுவிட்டுப் போனார்கள். அந்த அந்தணனைக் காணோமே. எங்கு போனான் என்று வியந்தார்கள். பல வேறு விதமான சிலேடை பாடல்களைப் பாட கேட்டு விலாவெடிக்க சிரித்து வாழ்த்திவிட்டுப் போனார்கள். பரிசளித்தார்கள். யாருக்கும் பயப்படாத, எது பற்றியும் பாடத் தெரிந்த புலவனாக காளமேகம் வலம் வந்தார்.

"உங்களை ஒன்று கேட்பேன்." சித்ராங்கி அவர் விரல்களை கோத்துக் கொண்டு கொஞ்சிப் பேசினாள்.

"என்ன வேண்டும் சித்ராங்கி!"

"உங்களுடைய நட்சத்திரம், என்னுடைய நட்சத்திரம். என்னுடைய சகோதரியின் நட்சத்திரம், மூன்றும் வரும்படி ஒரு பாடலை இயற்ற முடியுமா?"

"இயற்றினால் போயிற்று."

காளமேகம் ஒலையையும் எழுத்தாணியையும் எடுத்தார். கிழக்குப் பார்த்து உட்கார்ந்து கொண்டார்.



"உன்னுடைய நட்சத்திரம் சித்திரை. உன் தங்கையின் நட்சத்திரம் என்ன?" கேட்டார்.

"தங்கையின் நட்சத்திரம் ரோகிணி!"

"அப்படியா! என் நட்சத்திரம் உத்திரம். மூன்றும் வைத்து எழுதலாம். இதோ பார்..."

உடனே மடமடவென்று ஒலையில் எழுதினார்.

"உத்திரத்திற்கு ஓர் நாள். உரோகிணிக்கு பத்தாம் நாள். சித்திரைக்கு நேரே சிறந்த நாள். எத்திசையும் கார் ஆரும் பூஞ்சோலை கண்ணபுரம் வாழ் சவுரி நாராயணன் பிறந்த நாள்.

கவிதை புரிகிறதா சித்ராங்கி.... எந்தப் பக்கத்திலும் மேகங்கள் தங்குகின்ற அழகிய சோலைகள் சூழ்ந்த திருகண்ணபுரத்தில் வீற்றிருக்கின்ற சவுரிநாராயண பெருமாளின் பிறந்த நாள் எது தெரியுமா. உத்திரத்திற்கு ஓர் நாள். பத்தாம் நாள் ரோஹிணிக்கு பத்தாம் நட்சத்திரம்.

சித்திரைக்கு நேரே சிறந்த நாள். சித்திரைக்கு முன்னால் உள்ள நட்சத்திரம் ஆகிய இந்த நட்சத்திரம் ஹஸ்த நட்சத்திரம் ஆக கண்ணபுர சவுரி நாராயணனுடைய நட்சத்திரம் ஹஸ்த நட்சத்திரம் என்று சொல்லுகிறேன்."

அக்காளும், தங்கையும், அந்த உத்ராபதியை கொண்டாடினார்கள். பாடலைப் பதிவு எடுத்துக் கொண்டார்கள். பலரிடம் பெருமையாக படிக்க கொடுத்தார்கள். அப்ப டி படித்து மனனம் செய்த பாடலை ஒருவன் சொல்ல அந்த சிறுவன் கேட்டான். பதிவு எடுத்துக் கொண்டான். நேரே ஓடி போய் கோனேரிராயனிடம் சொன்னான்.

"அய்யா! இந்தப் பாடலும் அந்தப் புலவர் எழுதிய பாடல் போல இருக்கிறது. திருவானைக்காவலிலிருந்து வந்தது. நீங்கள் திருவானைக்காவலுக்குப் போய் தேடினால் இந்தக் கவிஞரை எளிதில் கண்டுபிடித்து விடலாம். கோனேரிராயன் குதிரை ஏறி உடனே திருவானைக்காவல் நோக்கி விரைந்தான். புலவர்கள் வீடு தேடி அலைந்தான். எப்போதும் கூட்டமாய் இருக்கும் காளமேகம், சித்ராங்கி வீடு போனான்.

காளமேகம் அருகே போய் கை கட்டி பவ்யமாகி நின்றார்.

"யார் நீங்கள் என்ன செய்ய வேண்டும்."

"நான் வணிகன். வழிப்போக்கன். ஆலய தரிசனம் செய்தேன். இங்கு நல்ல புலவர்கள் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். தமிழ் கேட்க ஆசையாயிருந்தது. எனவே, யாராவது புலவர்கள் இருக்கிறார்களா என்று பார்க்க வந்தேன். வந்த வழியில் உங்கள் வீட்டைச் சுட்டிக் காட்டினார்கள். நீங்கள் ஏதேனும் பேசுங்கள். ஒரு ஓரமாய் நின்று தமிழ் கேட்டு விட்டு போகிறேன்."

காளமேகப் புலவரை சுற்றியிருந்தவர்கள், அடா அடா வென்று அந்த வணிகனின் பேச்சுக்கு வியந்தார்கள்.

காளமேகம், கோனேரிராயனை உற்றுப் பார்த்தார். உள்ளே வரும்படி கூறினார்.

"சித்ராங்கி! அவருக்கு ஒரு ஆசனம் எடுத்துப் போடு. குடிப்பதற்கு ஏதேனும் கொடு" என்று உபசரித்தார்.

அங்கே ஒரு அமைதி நிலவியது. சித்ராங்கி, கோனேரிராயனுக்கு ஒரு குவளை நிறைய மோர் கொண்டு வந்து கொடுத்தாள். இன்னொரு சொம்பில் பானம் தந்தாள்.



காளமேகமும், கோனேரிராயனும் ஒருவரை ஒருவர் மௌனமாக புன்முறுவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார் கள். வேறொருவர் மெல்ல பேசத் துவங்கினார்.

"மதுரையில் அழகர்கோவில் போயிருக்கிறீர்களா. மிக அற்புதமான இடம். அம்மாதிரி சோலை சூழ்ந்த மலை வேறெங்கும் இல்லை. பெருமாளும் நல்ல உயரம். ஆசையால்தான் அப்படி ஒரு கோவில் திருச்சிராப்பள்ளி யில் இல்லையே என்று என் மனம் ஏங்குகிறது. நல்ல உயரமான அரங்கர் படுத்தபடி இருக்கிறார். நெடுமாலாய் சேவிக்க திருச்சிராப்பள்ளியில் அழகான ஒரு உருவம் இல்லை, என் பேச்சு சரியா.... " காளமேகத்தை பார்த்துக் கேட்டார்.

"ம்..... எப்படிச் சரியாகும். அந்தப் பெருமாளைப் போய் யார் அழகர் என்று பெயரிட்டார். புரியவில்லை. பெரு மாளுக்கு உ:ழகு என்ற பெயர் தவறு. நான் ஒரு கவிதை சொல்கிறேன் கேளும்."

எல்லோரும் காதை தீட்டிக் கொண்டார்கள். கோனேரிராயர், காளமேகத்தையே பார்த்துக் கொண்டிருந் தார்.

"மீன முகம், ஆமைமுகம், மேதினி எல்லாம்
இடந்த ஏனமுகம் சிங்கமுகம் என்னாமல் - ஞானப்
பழகர் என்றும் சோலைமலை பண்பர் என்றும்
உம்மை அழகர் என்றும் பெயரிட்டவர் யார்?

கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

'திருமாலுக்கு மீன்முகம், ஆமைமுகம், உலகத்தை துளைத்து எடுக்கின்ற பன்றிமுகம், கோரமான சிங்கமுகம். இவரைப் போய் அழகர் என்று ஒரு மலையில் வைத்திருக்

கிறார்கள். நீங்களும் வந்து சொல்கிறீர்கள். மறுபடியும் பொருள் விளக்கத்திற்கு கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

தன்னிடம் வந்த கவிதைகளும், இந்தக் கவிதைகளின் ஓசையும் ஒரேவிதமாக இருப்பதை கோனேரிராயன் யோசித்து புரிந்து கொண்டார்.

"மிக நன்று.... மிக அற்புதமான கவிதை. இதை தாண்டியும் வேறு சில கவிதைகள் செய்யலாமா?" கோனேரிராயன் பேசினார்.

"உங்கள் விருப்பப்படி எதுவேண்டுமானாலும் செய்யலாம். எந்தவித கவிதைகள் செய்ய வேண்டும்."

"சிலேடைகள் என்று தமிழிலே ஒருவகை கவிதைகள் உண்டு. அம்மாதிரி சிலேடைகளை யாரும் சமீபத்தில் செய்வதில்லை. குழந்தைகளுக்கு இவைகளைச் சொல்லிக் கொடுத்தால், உற்சாகமாக கற்றுக் கொள்வார்கள்."

"புரிகிறது, எதற்கும்.... எதற்கும் சிலேடை என்று சொல்லுங்கள்."

"எப்படிச் சொல்வது?" கோனேரிராயன் யோசித்தான்.

"நானே சொல்லட்டுமா..." காளமேகப் புலவர் இடை மறித்தார்.

"சொல்லுங்கள்..."

"பாம்புக்கும் வாழைப்பழத்திற்கும் சிலேடை உண்டு" கூட்டம் திகைத்தது.

"எப்படி... பாம்பு, வாழைப்பழம் எவ்விதமாக ஒப்பிடப் படும்."

"ஒப்பிடப்படலாம். சொல்வதைக் கேளுங்கள்...



நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்தில் பல்பட்டால் மீளாது-விஞ்சு மலர்த்
தேன்பாயும் சோலைத் திருமலைராயன் வரையில்
பாம்பாகும் வாழைப்பழம்."

கூட்டம் மறுபடியும் கைதட்டியது.

பாம்பானது நஞ்சை உடையதாக இருக்கும். பருவம் வந்ததும் சட்டையை கழற்றும். சிவபெருமானது திருமுடி மீது அணியப்பட்டிருக்கும். அது சினத்துடன் யார் உடம்பிலாவது பல்பதித்தால் கடிப்பட்டவர் உயிர் மீளாது. வாழைப் பழத்தைப் பாருங்கள். வாழைப் அப்படியே வாழைப் பழத்தைப் பாருங்கள். தோலுரித்து பழமானது நலிந்து கனிவாக இருக்கும். தோலுரித்து வாழைப்பழம் உண்ணும்போது வாயில் பட்டுவிட்டால் அது மீளாது. அது வயிற்றுக்குள்தான் போகும். ஆகவே பாம்பும். வாழைப்பழமும் ஒரே மாதிரியான விஷயம். கூட்டம் இந்த முறையும் காளமேகப் புலவரின் பேச்சுக்கு ஆரவாரித்து கைதட்டியது. கோனேரிராயன் வாய்விட்டுச் சிரித்தான், எழுந்து நின்று வணங்கினான்.

"மிக அற்புதமான கவிதைகள் சொன்னீர்கள். எந்த யோசிப்பும் இல்லாமல் சற்றும் தயக்கமில்லாமல் மின்னல் வேகத்தில் கவிதைகள் சொல்கிறீர்கள். உங்கள் பெயரென்ன, உங்களைப் பற்றி நான் இன்னும் தெரிந்து கொள்ளலாமா."

பணிவோடு கேட்டான்.

காளமேகம் அவன் அங்கங்களைத் கூர்ந்து கவனித்தார். அவன் பணிவை உற்றுப் பார்த்தார்.

"நிச்சயம் பேசலாம். இங்கு வேண்டாம். வாருங்கள். வெளியே போய் தனியே பேசுவோம்."

கோனேரிராயனும் காளமேகப் புலவரும் மெல்ல நட...
திருவானைக்காவல் கோவிலுக்குள் நுழைந்தார்கள்.

"உங்கள் பெயரென்ன.. சொல்லவேயில்லையே."

காளமேகப் புலவர், கோனேரிராயனைக் கேட்டார்.

"என் பெயர் வைத்தியநாத காளிங்கராயர்."

"ஊர் எது?"

"என்னுடைய பூர்வீகம் கர்நாடகம். இங்கே சோழ தேசத்துக்கு வந்து வெகு நாட்களாகி விட்டன. என் ஊர் என்று கேட்டால் திரிசிரபுரத்தைத்தான் சொல்ல வேண்டும்."

"இப்பொழுது எங்கே குடியிருக்கிறீர்கள்."

"சமயபுரத்தில்."

"என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்."

"தொழில் செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

"திருமணமாகி விட்டதா."

"இல்லை."

"ஏன்?"

"திருமணத்தில் எனக்கு நம்பிக்கையில்லை."

"எதனால் அப்படி சொல்கிறீர்கள்?"

"ஊர் உறவு உற்றார் போன்ற விஷயங்களில் நான் என்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. என்னை மட்டுமே உயர்த்திக் கொள்ள அக்கறை கொண்டிருக்கிறேன். ஏதாவது செய்ய வேண்டும். சரித்திரத்தில் இடம்பெற வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய மனோ

...சக்தியும் உடல் சக்தியும் வெறுமே குடும்பம் நடத்துவதில் ...வீணாகி விடக்கூடாது என்று கவலைப்படுகிறேன்."

"நீங்கள் சைவமா வைணவமா."

"இந்தக் கேள்விக்கு எனக்கு பதில் சொல்ல பிடிக்க வில்லை. இவை இரண்டுமே ஒன்று என்று எனக்குத் தெரியும். முழுவதுமாகத் தன்னைக் கொடுத்தல், சரண டைந்து விடுதல் என்பது ஒரு வழி. சரணடைவதைவிட கடவுளோடு கலத்தல், கடவுளாகவே மாறுதல் இன்னொரு வழி. முன்னது வைணவம். பின்னது சைவம்.

இதில் எந்த வழியைப் பின்பற்றினாலும் நம்மை மீறி மிகப்பெரிய ஒரு இயற்கை சக்தி நம்மைச் சுற்றி நம்மை பந்தாடிக் கொண்டிருக்கிறது என்பது புரிந்துகொள்ள வேண்டும். புரியாது வெற்று வாதம் செய்கிற அயோக்கியர் களைக் கண்டால்தான் எனக்குப் பிடிக்கவில்லை.

வைணவனாக இருந்தாலும் சைவனாக இருந்தாலும் பணிவாக இருப்பதுதான் சிறந்த விஷயம். பணிவு, கடவுள் நம்பிக்கை இருப்போர்க்குத்தான் எளிதில் வரும். கடவுள் நம்பிக்கையில்லாதவருக்குப் பணிவு இருக்காது.

பணிவு இல்லாதவருக்கு அறிந்துகொள்ளும் ஆற்றல் இருக்காது. அறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்கள் மற்றவர்களைப் புரிந்துகொள்வதிலும் தயக்கம் காட்டு வார்கள். மற்றவர்களைப் புரிந்துகொள்ள தயக்கம் காட்டு பவர்கள் வாழ லாயக்கில்லாதவர்கள்."

"அற்புதம்... அற்புதம் காளிங்கராயரே. எவ்வளவு அழகாகப் பேசுகிறீர்கள். இம்மாதிரியான பேச்சுக்கள் கேட்பதற்காக எவ்வளவு காலம் காத்திருந்தேன்."

“நானும் அவ்விதமே காளமேகப் புலவரே. தெளிவாக விஷயங்கள் பேசிப் பகிர்ந்துகொள்ள ஆள் இல்லாமல் வெகுநாட்கள் தனிமையில் தவித்திருக்கிறேன். தனிமை தாங்க முடியாமல் யார் யாரிடமோ பேசிவிட்டு அவஸ்தைப் பட்டிருக்கிறேன். உங்களைச் சந்தித்தது என்னுடைய பாக்கியம் என்று கருதுகிறேன்.”

“அப்படியில்லை காளிங்கராயரே. நானும் ஏதோ புண்ணியம் செய்திருக்கிறேன். எனக்கும் உங்கள் கொள்கைகளோடு உடன்பாடு உண்டு. நானும் திருமணம் என்கிற பந்தத்தில் நம்பிக்கையில்லாதவன் ஊர் ஊராக சுற்றுவதில் விருப்பமுள்ளவன். ஏதேனும், உருப்படியாக செய்ய வேண்டுமென்று ஆசைப்படுபவன். சரித்திரத்தில் இடம்பெற வேண்டுமா இல்லையா என்பதைக் காலம் தீர்மானிக்கும். ஆனால், சரித்திரத்தில் இடம்பெறும் அளவுக்கு என்னை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.”

“ஆனால், நீங்கள் இருந்த வீட்டில் பெண்டுகள் இருந்தார்களே.”

“அது என்னுடைய வீடு அல்ல. தாசி சித்ராங்கியின் வீடு அது. அவள் தங்கையுடன் வசித்து வருகிறாள். என்னை ஆதரித்து வருகிறாள். நான் ஸ்ரீரங்கத்தில் மடைப்பள்ளியின் ஆளாக இருக்கும்போது பழக்கம். அவள் பிடிவாதம் இல்லாதவள். பொறாமை இல்லாதவள். அறிந்துகொள்ள வேண்டுமென்று ஆவல் உள்ளவள். அடக்கி வைக்க வேண்டும் என்று ஆசை இல்லாதவள். இலக்கிய தாகம் உள்ளவள்.

அவளோடு மனமொத்து வாழ்ந்து வருகிறேன். அவளுக்கும் இந்த ஏற்பாடு பிடித்திருக்கிறது.”



“மிக நல்ல விஷயம். நம் ஊரில் பெண் நட்பு வேண்டுமென்றால் உடனே திருமணம் என்று சொல்லிவிடுகிறார்கள். இந்தத் திருமணத்தால் மனம் கூம்பிப் போய்விடுவதால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பிணக்குகள் அதிகரிக்கின்றன.

யாருக்கு வம்சாவளி வேண்டுமோ அவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம்.

எனக்கு குழந்தை வேண்டும் என்கிற ஆசை இல்லை. எனக்குப் பிறகு என் சொத்துக்களை ஆள எவரோ வேண்டுமென்று பிடிவாதம் இல்லை. நான் வாழ்ந்து நன்றாக வாழ்ந்து நிறைவாக மடிய வேண்டும் என்கிற எண்ணம் தான் இருக்கிறது.”

காளமேகப் புலவர் கோனேரிராயன் தோள்களை அணைத்துக் கொண்டார். கோனேரிராயன் அவருடைய தோளில் கைபோட்டுக் கொண்டு நடந்தான். இருவரும் நடனமண்டபம் தாண்டி அகிலாண்டேஸ்வரி சந்நிதிக்கு வந்தார்கள். விலகி நின்றார்கள்.

“அகிலாண்டேஸ்வரியை தரிசித்து உண்டா?”

“சில முறை பார்த்ததுண்டு. சமயபுரத்தாள் தான் என்னுடைய உயிர். அவளோடுதான் நான் மனம்விட்டு பேசுவேன்.”

“அப்படியா! வந்து அகிலாண்டேஸ்வரியோடு பேசிப் பாருங்கள். அவள் இன்னும் அழகாக பேசுபவள். இன்னும் தெளிவாகப் பேசுபவள்.”

“என்ன பேசுவது?”

"உங்களுடைய எதிர்காலம் பற்றி அகிலாண்டேஸ்வரியிடம் கேள்வி கேளுங்கள். அவள் பதில் சொல்வாள்." காளமேகம் பேச்சுக்கு கோனேரிராயன் சிரித்தான்.

"என்ன சிரிக்கிறீர்கள் காளிங்கராயரே."

"தெய்வம் பேசுவது என்பது கல் பேசுவது அல்ல. உள்ளே இருக்கும் நம் மனம் பேசுவது. அவ்வளவுதானே."

"இல்லை காளிங்கரே. அதற்கு மேலும் உள்ளே இருக்கிற மனம் பேசுவது மட்டுமேயல்லாமல் கல்லாயிருக்கிற தெய்வத்துக்குள்ளேயும் ஒரு சக்தி இருக்கிறதே. அந்த சக்தி உங்களுக்கு அருகே வந்து உங்களோடு பேசும்."

"எனக்கு நம்பிக்கை இல்லை காளமேகப் புலவரே."

"எனக்கு நம்பிக்கை இருக்கிறது காளிங்கராயரே. நான் உள்ளே நுழைந்தபோது பல்லி பேசியது. வெளவால் பேசியது. கிளிகள் பேசின. உங்களோடு நிச்சயம் அகிலாண்டேஸ்வரி நிச்சயம் பேசுவாள்."

"நண்பரே, உங்கள் பேச்சை நம்புகிறேன்."

"என்ன சொன்னீர்கள்."

"நண்பரே என்று சொன்னேன்."

"நல்லது காளிங்கராயரே. நீங்கள் யாராக இருந்தாலும் இந்த சந்நிதி முன் நின்று சொல்கிறேன். நீங்கள் வாயார அழைத்த அந்த பேச்சு எனக்கும் பிடித்திருக்கிறது. நீங்கள் என் நண்பர். என் மரணபரியந்தமும் காளிங்கராயர் எனது நண்பர்."

காளமேகப் புலவர் கை நீட்டினார்.

கோனேரிராயன் கைநீட்டினான்.



இறுக ஒருவரை ஒருவர் முழங்கைகளைப் பற்றிக் கொண்டனர். ஆரத் தழுவிக் கொண்டார்கள்.

"ஆமாம். அகிலாண்டேஸ்வரியிடம் நான் என்ன பேச வேண்டும். எப்படிப் பேச வேண்டும் என்பதையும் எனக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்."

"இதை விட வேறு எனக்கு பாக்கியம் உண்டா. வாரும். கருவறைக்குப் போவோம்."

உள்ளே அகிலாண்டேஸ்வரி பட்டு உடுத்தி ஒரே ஒரு அரளி மாலை சாற்றி தலைக்கு சக்கரம் போன்ற வட்டப் பூ வைத்து ஒயிலாக அபயஹஸ்தம் காட்டி புன்சிரிப்போடு நின்றிருந்தாள். கட்டுமஸ்தான இருபத்தைந்து வயது முதிர்கன்னிப் போல அவள் காட்சி அளித்தாள்.

அருகே அவள் உயரத்துக்கு இணையாய் ஒரு குத்து விளக்கு இடைவிடாது எரிந்து கொண்டிருந்தது. அந்தக் குத்துவிளக்கு சுடர் ஆட்டத்தில் அகிலாண்டேஸ்வரியின் முகத்திலிருந்து புன்னகை தெறித்துக் கொண்டிருந்தது.

"தாயே! காளமேகம் வந்திருக்கிறேன். எனக்கருகே என் நண்பர் காளிங்கராயர் வந்திருக்கிறார். யாருமற்ற இந்த ஏகாந்த வேளையில் ஒற்றுமையாய் நாங்கள் இருவரும் உன்னை நமஸ்கரிக்கிறோம்.

இந்த சோழ தேசம் பல இன்னல்களைப் பார்த்து விட்டது. பல இன்னல்களை, பல பேரிழப்பைத் தாங்கி தவித்துக் கொண்டிருந்தது. தமிழ் மொழியும் இந்து மதமும் மிகப் பெரிய அழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த வேளையில் காளிங்கராயன் போன்ற மனப்பாங்கு மிக்க, சக்தி மிக்க இளைஞர்கள் உனக்கு தேவை. காளிங்க

ராயன் என்ன செய்ய வேண்டும், அவனுடைய எதிர்காலம் என்ன... தயவுசெய்து அவனுக்கு சொல்லுவாய்.”

இருவரும் மௌனமாக நின்றிருந்தார்கள்.

காளிங்கராயன், அகிலாண்டேஸ்வரியையே பார்த்துக் கொண்டிருந்தான். மெல்ல கண் சொருகினான். தூக்கம் போலும் ஒரு சுகம் அவனை அழுத்தியது. புறச்சுவர்மீது சாய்ந்து கொண்டான். அவனை நோக்கி வெள்ளைப் புடவை உடுத்தி முத்துமாலை அணிந்து வெண் தாமரை ஏந்தி வைரக்கிரீடம் சார்த்தி வெளிச்சமாய் வெள்ளையாய் ஒரு பெண்மணி நடந்து வந்தாள்.

“நீ மன்னன். சோழ தேசத்தில் இந்தப் பகுதிக்கு அரசன். உன்னால் தமிழ் வாழும். தமிழ் தேசம் வாழும். சைவமும் வைணவமும் வாழும். நீ வாளெடுத்துப் போகும் திசையெல்லாம் வெற்றி. காளியங்கராயா! நீ அரியணை ஏறும் காலம் வந்துவிட்டது. உனக்கு அருகே நான் இருக்கிறேன். உனக்குத் துணையாய் சிலர் வருவார்கள். அவர்கள் யாரென்று அவ்வப்போது சொல்லப்படும்.

காளியங்கராயா! போர் செய், போர் செய், போர் செய்.”

உள்ளே குரல் கேட்டது.

கோனேரிராயன் குரல் கேட்டு திடுக்கிட்டு விழித்தான். திரும்பி காளமேகப் புலவரைப் பார்த்தான். அவன் கண்களில் நீர் கோத்தது.

“என்ன செய்தி கிடைத்ததா?” வினவினார் .

“என்ன செய்தி கிடைத்தது. அப்படித்தான் அன்னை பேசுவாள். சிறு ஒரு மயக்கம் தருவாள். உள்ளுக்குள் புகுந்து கொள்வாள். உரத்த குரலில் தெளிவாய் நிதானமாய்



அகிலாண்டேஸ்வரி பலரிடம் பேசியிருக்கிறாள். விஷயம் என்னவென்று தெரிந்துவிட்டதல்லவா. வாரும். மெல்ல மெல்ல நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானிப்போம்.”

“நாம் என்று உங்களோடு என்னையும் இணைத்துக் கொள்கிறீர்களா.”

“இல்லை, காளிங்கராயா! உன்னோடு என்னைப் பிணைத்துக் கொள்கிறேன். காரியம் செய்ய வேண்டியது நீதான் காளிங்கராயா! நான் உனது நண்பன். உனக்கு பக்கத் துணை ஒரு புலவன். அவ்வளவுதான் செய்ய முடியும்.”

“எனக்கு என்ன கட்டளை என்று உனக்குத் தெரியுமா.”

“தெரியும் காளிங்கராயா! நீ மன்னன். இங்கே தமிழையும் தமிழ் தேசத்தையும் வாழவைக்கப் போகிறவன். எனக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால்தான் உன்னை இங்கே அழைத்து வந்தேன்.”

“காளமேகம் நான் உன்னை ஒருமையில் அழைத்ததைக் கவனித்தாயா.”

“நன்றாகக் கவனித்தேன். நானும் உன்னை ஒருமையில் தானே அழைத்தேன்.”

“என்னை யாரும் அப்படிக் கூப்பிட்டதில்லை காளமேகம்.”

“என்னையும்தான் காளிங்கராயா! உன் நட்பு கிடைத்ததே... நல்ல நட்புக்கு நான் ஏங்கியிருக்கிறேன். நல்ல நண்பன் கிடைக்காமல்தான் சித்ராங்கியிடம் அடிமையானேன். உனக்கும் நான் மட்டும் போதாது. நல்ல பெண் சிநேகிதம் வேண்டும். அதற்கு ஏதேனும் ஏற்பாடு

செய்ய வேண்டும். காளிங்கராயா! நீ எனக்கு நண்பன் தானே... வேறு ஏதேனும் பதவி ஏற்றுக் கொள்ளாதே.''

''ஒரு நண்பனுக்கு எல்லா பதவிகளும் உண்டு. அவன் கால்பிடித்து விடலாம். கைபிடித்து விடலாம். தலைவாரி விடலாம். தாசியையும் கூட்டிக் கொடுக்கலாம். தவறு இல்லை. நண்பனுக்கு உண்டான உரிமை வேறு எவருக்கும் இல்லை. ஆனால், பெண் சிநேகிதம் தேவைதானா என்பது பற்றி நான் யோசிக்க வேண்டும்.''

''நன்றாக யோசித்து முடிவு செய். நீ தனிமையில் இருப்பதாக சொன்னாய். அந்தத் தனிமை உனக்கு என்ன செய்கிறது. அந்தத் தனிமையால் உனக்கு என்ன நேருகிறது என்று பார்ப்பது முக்கியம். அந்தத் தனிமை உனக்கு தூக்கத்தையும், துக்கத்தையும் தருகிறது என்றால் அப்போது உனக்கு பெண் துணை அவசியம். பெண் துணை உனக்கு பிரச்சினைகள் தருமானால் உனக்குத் தனிமை முக்கியம். எதனால் லாபம் என்று பார்த்து ஏற்றுக்கொள்வது புத்திசாலித்தனம்.''

காளமேகமும், கோனேரிராயனும் ஜம்புகேஸ்வரரைத் தரிசித்துவிட்டு மூன்றாம் பிராகாரம் வழியாக வெளியே வந்தார்கள். வெளிகோபுரம் தாண்டி இன்னும் நடந்து திருச்சிராப்பள்ளியிலிருந்து சமயபுரம் நோக்கிச் செல்லும் சாலையில் நடந்தார்கள்.

''காளமேகம்! உனக்கு குதிரையேற்றம் பழக்கம் உண்டா?''

''பெண்குதிரைகள் ஏறுவேன்.'' காளமேகம் சொல்ல, கோனேரிராயன் வாய்விட்டுச் சிரித்தான்,

''உண்மையாகவே சொல்கிறேன். ஆண்குதிரைகள் ஓட்டுமளவு எனக்கு பயிற்சி இல்லை. பெண்குதிரைகளை



வெறுமே நடத்திக் கொண்டு போவதற்கு சிலமுறை முயன்றிருக்கிறேன்.''

''நல்லது என்னோடு சமயபுரம் வா.'' கோனேரிராயன் அங்கு சிறிது நேரம் நிற்க, மலைக்கோட்டையிலிருந்து சமயபுரம் நோக்கிப் போகும் குதிரைப் படை அவனைப் பார்த்துவிட்டு பதைபதைத்து நின்றது. மௌனமாய் இரு என்று கோனேரிராயன் முதலில் இறங்கியவனுக்கு சைகை செய்தான்.

ஒரு நல்ல ஆண்குதிரையில் ஏறிக்கொண்டு குதிரைப் படையைச் சுற்றி வந்து ஒரு அமைதியான பெண் குதிரையைத் தேர்ந்தெடுத்தான்.

குதிரை வீரனை இறங்கச் சொல்லி அதை ஓட்டிக் கொண்டு காளமேகப் புலவருக்கு அருகே வந்தான். ஒரு வீரனைக் குனிந்து தோள் கொடுக்கச் சொல்லி காளமேகப் புலவரை ஏற்றி விட்டான்.

இருவரும் மெல்ல குதிரை ஓட்டிக் கொண்டு சமயபுரம் நோக்கிப் போனார்கள். சமயபுரம் நோக்கி போகும்போது குதிரை ஓட்டுவதற்கான சூட்சுமங்கள் பற்றி காளமேகத்துக்கு கோனேரிராயன் சொல்லிக் கொண்டு வந்தான். குதிரையை எப்படி தொட வேண்டும். எப்போது குதிகாலால் உதைக்க வேண்டும். கடிவாளத்தை எப்படிப் பிடித்துக் கொள்ளவேண்டும் என்று பல விவரங்கள் சொன்னான்.

கோனேரிராயன் சொல்வதைக் கவனமாகக் கேட்ட காளமேகம், அந்தப் பெண்குதிரையை வேகமாக செலுத்த பெண்குதிரை அவர் வசப்பட்டு மிக அருமையாக ஓடியது.

அவர்கள் விரைவில் சமயபுரத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

சமயபுரம் நெருங்கியதும் காளமேகத்திற்கு கோனேரி ராயன் யாரென்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்து விட்டது.

பதின்மூன்றாயிரம் வீரர்கள் சமயபுரம் முழுவதும் பரவிக்கிடந்தார்கள் எல்லையில் சுங்கச்சாவடி அமைத்து மிக கவனமாக பரிசீலித்தார்கள்.

கோனேரிராயன் நெருங்கியதும் வீரர்கள் வரிசையாக நின்று வாழ்த்து சொன்னார்கள். குதிரையை வாங்கிக் கட்டினார்கள்.

காளமேகம், எல்லாவற்றையும் கவனித்து எதுவும் கவனிக்காதது போல் மௌனமாக இருந்தார்.

"என்ன பேச்சசே இல்லை."

"என்னிடம் ஏன் பொய் சொன்னாய் காளிங்கராயா."

"பொய் சொல்லவே இல்லை. வைத்தியநாத காளிங்க ராயன் என்பது என் இயற்பெயர் . இங்கு எனக்கு கோனேரிராயன் என்று பெயர். ஒரு புலவனை நான் தளபதியாக சந்திக்க விரும்பவில்லை. சாதாரண மனிதனாக, வைத்தியநாத காளிங்கராயனாக கர்நாடக அந்தணனாக சந்திக்க விரும்பினேன். கர்நாடகத்திலிருந்து வந்தாலும் தமிழ்மொழி மீது உள்ள ஆர்வம் காரணமாக, தமிழ்மொழி ஆர்வலனாகவே பேச விரும்பினேன். பேசினேன். ஒரு பொழுதும் மறந்தும் உன்னிடம் நான் பொய் சொல்ல வில்லை காளமேகம். நான் பொய் சொல்ல மாட்டேன். எனக்கு நட்பு மிகமிக முக்கியம்."

"திருமலைராயன் படைத்தளபதி கோனேரிராயன் என்று சொல்லியிருந்தால் என்ன தவறு நேர்ந்திருக்கும்."

"எழுந்து பரபரப்பாய் நின்றிருப்பாய். தளபதி என்று மரியாதை காட்டியிருப்பாய். இவ்வளவு எளிதில்



நண்பனாகக் கிடைத்திருக்க மாட்டாய். நீ புலவனாகவும் நான் மீசை முறுக்கிய தளபதியாகவும் ஒருவரை ஒருவர் ஏளனத்தோடு பார்த்துக் கொண்டிருப்போம். நம்மிடையே நட்பு மலர்ந்திருக்காது. எனக்கு ஆயிரம் புலவர்கள் சந்திக்கக் கிடைப்பார்கள். உனக்கும் பரிசளிக்க தளபதிகள் கிடைப்பார்கள். நண்பர்கள் பரஸ்பரம் கிடைப்பார்களா?"

காளமேகம் வாய்விட்டுச் சிரித்தார்.

"உண்மை. நாம் இப்போது நண்பர்களாகிவிட்டோம் எனவே, நம்முடைய பதவிகளும் பெருமைகளும் முக்கியமே இல்லை. ஆனாலும் இங்கே இந்த வீரர்கள் முன்பு எப்படி நான் நடந்து கொள்ளவேண்டும் என்று சொல்லிக் கொடு."

"நீ சாதாரணமாக எப்போதும் போல் நடந்துகொள். அடேய் காளிங்கராயா என்றே கூப்பிடு. நண்பனாக இரு. இவர்கள் முன்பு நீ எனக்கு எந்த மரியாதையும் தர வேண்டிய அவசியமில்லை.

ஆனால், இவர்கள் உனக்கு என்னுடைய நண்பன் என்கிற முறையிலே, தமிழ்ப் புலவன் என்கிற முறையிலே மரியாதை செலுத்தியே ஆகவேண்டும்.

வேண்டாம் காளிங்கராயா. நீ இவர்கள் தளபதி. ஒரு தளபதியை தமிழ்ப் புலவன் மதிக்காவிட்டால் மற்றவர்கள் மதிப்பார்களா. நான் வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

நாம் தனியே இருக்கும்போது நண்பர்களாகவும் சபையில் இருக்கும்போது நம்முடைய பதவி முக்கிய மாகவும் இருக்கட்டும்."

"ஏன் நண்பனே?"

"பலவிதங்களில் இது நல்லது. உன்னை நண்பன் என்பதால் ஏதேனும் கோரிக்கையுடன் என்னை அணுகாமல் இருப்பார்கள். நானும் உனக்கு பயந்து இருக்கிறேன் என்று இவர்கள் நினைத்துக் கொள்வது, நாம் நன்றாக நெடுநாள் பழக எளிதாகும்."

அவர்கள் இருவரும் மாளிகைக்குள் நுழைந்தார்கள்.

நீண்ட மதில்சுவரோடு பலத்த பாதுகாப்போடு கோனேரி ராயன் மாளிகை இருந்தது. மாளிகை உள்ளே கோனேரி ராயன் அறையில் பல ஓலைச்சுவடிகள் இருந்தன. விளக்குகள் பல இடைவிடாமல் எரிந்து கொண்டிருந்தன.

"இது என் படிப்பு அறை. என் படுக்கை அறை. நான் யோசிக்கும் அறை. அரசசபை எல்லாம் இதுதான்."

"புரிகிறது. பெண் இல்லாத வீடாக வைத்திருக்கிறாய். உனக்கு உடனடியாக நல்ல சிநேகிதத்தை, பெண் துணையைப் பெற்றுத்தர வேண்டும்."

"என்ன காளமேகம் எதற்காக இந்த முயற்சி."

"உள்ளே அகிலாண்டேஸ்வரி அவசரப்படுத்துகிறாள்." காளமேகம் பதில் சொன்னார்.

காளிங்கராயன் வாய்விட்டுச் சிரித்தான். கொஞ்சம் வெட்கப்பட்டான். அந்த வெட்கத்தில் நல்ல நட்பு இருந்தது.

"ஐயா!" ஒரு வீரன் கோனேரிராயன் நோக்கி வந்தான்.

"என்ன?"

"ஸ்ரீரங்கத்திலிருந்து கந்தாடை ராமானுஜர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்."



"அப்படியா! சற்றுநேரம் கோட்டைக்கு வெளியே காத்திருக்கச் சொல். நான் மிக முக்கிய வேலையில் இருக்கிறேன் என்று காரணம் கேட்டால் தெரிவி."

"எதற்கு இப்படி பேசுகிறாய் கோனேரிராயா! கந்தாடை ராமானுஜத்தை உடனே வரவேற்கவேண்டியதுதானே."

"காளமேகம்! எது முக்கியம். எது முக்கியமில்லை என்று எனக்குத் தெரியும். கந்தாடை ராமானுஜம் யாரென்று உனக்குத் தெரியுமா?"

"துளுவ சேனாதிபதி! விஜயநகரத்திலே இருக்கின்ற தளபதி நரச நாயக்கரின் சகோதரர். துறவு பூண்டு ஸ்ரீரங்கம் வந்து ரங்கனாதரே கதி என்று உட்கார்ந்திருக்கிறார்."

"இல்லை. அவனுடைய துறவு வெறும் வேஷம். இரவு நேரமானால் பெண்களில்லாமல் அவனால் தூங்க முடியவில்லை. ஒரு ஒற்றனைப் போல் அவன் தமிழ்நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். இங்குள்ள மன்னர் திருமலைராயன் போக்குகளைக் கவனித்து விஜய நகரத்துக்கு தகவல் சொல்லும் ஆள் அவன். துறவு என்கிற வசதியான போர்வையில் இத்தகைய வேலைகளைச் செய்து வருகிறான்.

ஏதோ ஒரு முக்கியமான காரியமாக அவன் என்னைக் காண வந்திருக்கிறான். நான் சில விஷயங்கள் கேள்விப் படுகிறேன். விஜயநகரத்தில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன் விளைவாக உதவி கேட்டு அவன் இங்கு வந்திருக்கிறான் என்று நினைக் கிறேன்."

"என்ன மாற்றங்கள்?"

“சாளுவ நரசிம்மர் விஜயநகரத்து அரசர் படுத்த படுக்கையாய் இருக்கிறார். அவருடைய பிள்ளைகள் இருவர் வயதுக்கு வராத நிலையில் அந்த ஆட்சி யாருக்குப் போய் சேரும் என்கிற கவலை எல்லோருக்கும் இருக்கிறது. தளபதி நரசநாயகன் ஆட்சியைப் பிடித்துவிடக்கூடும்.

அப்படி ஆட்சியைப் பிடித்தால் இங்கே இந்த கந்தாடை ராமானுஜர் குரல் அதிகம் உரத்து ஒலிக்கும். அதற்கு ஆதரவாக இருக்க கோனேரிராயனை உதவி கேட்டு வந்திருக்கிறான்.”

“அடேயப்பா! இவ்வளவு தெளிவான உன்னால் வருங் காலத்தை கணிக்க முடியுமா?” காளமேகப் புலவர் ஆச்சரியத்துடன் பேசினார்.

“இதன் பெயர் அரசியல்! ஒரு காய் வடக்கே நகர்ந்தால் எந்தக் காய் தெற்கே நகரும் என்று இதில் ஈடுபட்டவர்கள் சொல்ல முடியும். சொன்னால்தான் பிழைக்க முடியும்.

காளமேகம்! நீ சற்று விலகியிரு. தெலுங்குதேச அரசியல் உனக்குத் தெரியாது. ஆனாலும் நான் என்ன பேசுகிறேன் என்பதை உற்றுக் கவனித்துக் கொண்டிரு.”

காளமேகம் அடுத்த அறைக்குப் போனதும் எதிரே உள்ள வீரனுக்கு கோனேரிராயன் சைகை செய்தான்.

கதவு திறக்கப்பட்டது.

உள்ளே ஆறேழு சீடர்களோடு காவிவேட்டியும் மேல் துண்டுமாய் காலில் மரக்கட்டை செருப்புமாய் கந்தாடை ராமானுஜம் உள்ளே நுழைந்தான். அவனுக்கு ஐம்பது வயதிருக்கும். கனமான உடம்பு. சிறிய கூர்மையான கண்கள். மெல்லிய உதடு. எப்போதும் பரபரத்து அலையும் உதடுகள். அவசரத்தின் காரணமாக உதடுகள் ஈரமாகி,



எச்சிலை உள்ளே விழுங்காமல் வெளியே சிந்தவிட்டுக் கொண்டு இருந்தன.

கழுத்தில் முத்து வளையமும் தங்கச் சங்கிலியும் விரல்களிலெல்லாம் மோதிரங்கள் போட்டிருந்தான். பன்னிரண்டு திருமண் இட்டிருந்தான். கையிலுள்ள மூங்கில் பிரம்பை ஊன்றிக் கொண்டு வந்தான்.

அவனுடைய சீடர்கள் குடிப்பதற்காக ஒரு பாத்திரமும் உண்பதற்காக பண்டங்கள் நிறைந்த கூடையும் வெற்றிலைப் பெட்டியும் துப்புவதற்கு எச்சில் பாத்திரமுமாய் பின்னே வந்தார்கள்.

கந்தாடை ராமானுஜம் எதுவும் பேசாமல் மூச்சிரைக்க கோனேரிராயன் முன் உட்கார்ந்தான்.

“நான் வருகிறேன் என்று தெரிந்த பின்பும் காக்க வைக்கிறாயா. அப்படி என்ன இங்கு முக்கியமாகப் பிடுங்கிக் கொண்டிருந்தாய்.”

கோனேரிராயனுக்கு மெல்லியதாய் கோபம் வந்தது.

“ஏன் நீங்களும் சேர்ந்து பிடுங்கலாம் என்று கேட்கிறீர்களா.”

“மரியாதை இல்லாமல் பேசுகிறாய் கோனேரிராயா.”

“உங்களுக்கு என்ன மரியாதை தரவேண்டும் என்று எனக்குத் தெரியும். எனக்கு மரியாதை கொடுத்தால் நான் மரியாதை தருவேன். இல்லையெனில், என்னைவிட மோசமான மனிதனை நீங்கள் உங்கள் வாழ்நாளில் சந்தித்திருக்க முடியாது.”

கோனேரிராயன் குரல் உயர்த்தாமல் சாதாரணமாக பேசினான். கந்தாடை ராமானுஜத்துக்கு அந்த மிரட்டல் கலவரம் கொடுத்தது.

"ஏன் கோபித்துக் கொள்கிறாய் கோனேரிராயா. நான் முக்கியமான அரசியல் விஷயம் பேச வந்தேன்." அவன் குரல் கீழே இறங்கியது

கோனேரிராயன் அதைப் புரிந்து கொண்டான்.

"என்ன விஷயம்?"

"வடக்கே நிலைமை மிக மோசமாக இருக்கிறது." அடிக்குரலில் ரகசியம் போல் கந்தாடை ராமானுஜம் பேசினான்.

"பேராசை அதிகமானால் நிலைமை மோசமாகத்தான் இருக்கும். உங்கள் சகோதரர் நரச நாயக்கன் தன்னை ஸ்வாமி என்று கூப்பிட சொல்கிறாராம். ரட்சகன் என்று பெயர் வைத்துக் கொள்கிறாராம். அரசர் இருக்க ஏன் ஆட வேண்டும்."

"உனக்கு புரியவில்லையா. சாளுவ நரசிம்மனுக்கு அந்திம காலம் வந்துவிட்டது. மூச்சிரைப்பு நோயால் படுத்த படுக்கையாகக் கிடக்கிறார்."

"சொல்லுங்கள்."

"அவருடைய இரண்டு பிள்ளைகளும் வயதுக்கு வராத குழந்தைகள். எனவே, நரச நாயக்கனே அரசாட்சி செய்ய எல்லாவித ஏற்பாடும் நடந்து கொண்டிருக்கின்றன."

"மக்கள் ஏற்றுக்கொள்வார்களா?"

"சவுக்கு எடுத்து சொடக்கினால் மக்கள் தானாகக் கட்டுப்படுவார்கள்."

"உனக்குப் புரியவில்லை ராமராஜா."



"இதோ பார். என் பழைய பெயர் வைத்துக் கூப்பிடாதே கோனேரிராயா."

"உன் வாழ்க்கையை, உன் தம்பி வாழ்க்கையை ஞாபகப்படுத்த உன் பழைய பெயரைத்ததான் நான் கூப்பிட்டாக வேண்டும். நரச நாயக்கன் உன் தலையை சீவி விடுவான் என்று கலவரப்பட்டு அவனுக்கெதிரே நீ துறவு பூணுவதாய் நடித்தாய். உன் தம்பியினுடைய ஆத்திரம் ஆக்ரோஷம் உன்னை நடுங்கச் செய்துவிட்டது. நீ உயிரோடு இருக்கு வேண்டுமானால் துறவு பூண்டால்தான் முடியும் என்பது உனக்குத் தெரிந்துவிட்டது. அல்லது உணர்த்தப்பட்டது.

நரச நாயக்கனுக்கு எதிரே நீ வெறும் தூசு. ஆகவே சகல மரியாதைகளோடு தன்னிடமிருந்து உன்னை வெகு தொலைவே ஸ்ரீரங்கத்துக்கு அனுப்பி வைத்தான். இங்கு வந்து ஸ்ரீரங்கத்திலுள்ள ஒவ்வொரு தாசியையும் தொட்டுப் பழகி, உண்டும் உறங்கியும் கிடக்கிறாய். உனக்கும் துறவுக்கும் சம்பந்தம் உண்டா?

இது மட்டுமில்லை ராமானுஜா! சாளுவ வம்சத்தினுடைய அழிவுக்கு நீங்கள் காரணமாக இருந்துவிட்டீர்கள். மன்னர் சாளுவ நரசிம்மர் படுத்த படுக்கையாக இருப்பதற்குக்கூட உன் தம்பி நரச நாயக்கன் காரணமோ என்று தோன்றுகிறது. நரசிம்மருக்குக் குழந்தைகள் வயதான காலத்தில் பிறந்தன. அந்தக் குழந்தைகளை அரியணை ஏற்ற உன் தம்பி நரச நாயக்கனுக்கு விருப்பமில்ல ல. மன்னனாக ஆசைப்பட்டுவிட்டான் உன் தம்பி. அதற்கு இடைஞ்சலாக இருந்த உன்னை ஸ்ரீரங்கம் அனுப்பி விட்டான். தான் மட்டும் விஜய நகரம் முழுவதும் கொடி பறக்கவிட வேண்டும் என்று ஆத்திரப்படுகிறான்.

எனக்கு இதில் சம்பந்தமில்லை என்பதை இப்போதே தெரிவித்துக் கொள்கிறேன். நீ பேச வேண்டியதை பேசு.''

''இருந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு இவ்வளவு விஷயங்கள் எப்படித் தெரிந்து கொண்டாய்?''

''அதுதான் கோனேரிராயனின் புத்திசாலித்தனம்.''

''இப்போது நான் சொல்கிறேன் கோனேரிராயா. திருமலைராயனுக்கு ஆட்சியைக் கவனிக்க நேரம் போதவில்லை. அவன் எப்போதும் நோய்வாய்ப்பட்ட மனிதனாகவே இருக்கிறான். அவனுடைய தலைமையை அசைத்து வீழ்த்திவிட்டு என்னை நீ தலைவனாக்கினால் நான் உனக்கு உயர்ந்த தளபதி பதவி தருவேன். நீ எது கேட்டாலும் தருவேன். நான் துறவிலிருந்து திரும்பி மன்னனாக விரும்புகிறேன். அல்லது இப்படியே துறவு பூண்ட மன்னனாக விரும்புகிறேன்.''

''புரிகிறது கந்தாடை! நீ எதற்காக வந்திருக்கிறாய் என்பதை நான் முன்னமே ஊகித்து விட்டேன். ஆனால், இவ்வளவு வேகமாக இருப்பாய் என்று எதிர்பார்க்கவில்லை. திருமலைராயன் மீதே கை வைக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறாய் அல்லவா. நான் உனக்கு உதவி செய்கிறேன். எனக்கு என்ன செய்வாய் என்பதைத் தெளிவாய் சொல்லிவிடு. திருமலைராயன் மதுரை நோக்கிப் போக வேண்டும் என்று ஆசைப்படுகிறாய்.

உன்னுடைய அரசவை எங்கிருக்கும். நீ என்ன விதமான அரசன். எனக்கு என்ன விதமான பலாபலன் என்பதைத் தெளிவாகச் சொன்னால் மேற்கொண்டு இதைப் பற்றி பேச வசதியாக இருக்கும்.''

''ஒரு தீர்மானத்தோடுதான் வந்திருக்கிறேன். கோனேரிராயா! நான் திருச்சியைத் தலைநகராகக் கொண்டு இந்த



...ட்டாரம் முழுவதும், சோழ தேசம் முழுவதும் ஆள விரும்புகிறேன்.

உனக்குக் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொடுக்கிறேன். என்னுடைய தளபதியாக இருந்தாலும் காஞ்சிபுரத்திலிருந்து சமயபுரம் வரை ஆளலாம். சமயபுரத்திலிருந்து தெற்கே குமரிமுனை வரை நான் ஆட்சி செய்வேன். நீ எனக்கு அடங்கிய மன்னன். என் எல்லைப்புற காவலாளி. எனக்கு பெயருக்காக ஒரு கப்பம் கட்டுவாய். மற்றபடிக்கு தொண்டை நாடு முழுவதும் உன்னுடைய கட்டுப்பாட்டிலேயே இருக்கும்.

நீதான் விஜயநகரத்திலிருந்து வருகிற படைகளை மறித்து தடுத்து திருச்சிராப்பள்ளிக்கு அவை வராத வண்ணம் காக்க வேண்டும்.''

''ராமராஜா, உன்னுடைய தந்திரத்திற்கு அளவே கிடையாதா? என்னை மன்னனாக்குவேன் என்று சொல்லி என்னை வடக்கே அனுப்பி அங்கிருந்து வரும் நரச நாயக்கனை முதலில் எதிர்கொள்ளச் சொல்லி பிறகு ஏதேனும் செய்து கொள்ளலாம் என்று நினைக்கிறாயா.''

''நரச நாயக்கனைப் பற்றி உனக்குத் தெரியாது. நரச நாயக்கனை நீ மட்டும் எதிர்த்துவிட முடியாது. நரச நாயக்கனை எதிர்க்க மிகுந்த வலிவும் போர் தந்திரமும் தேவை.''

''என்னுடைய நிழலில் நீ குளிர்காய விரும்புகிறாய். அதற்கு எனக்கு காஞ்சிபுரத்தை பரிசாகத் தருகிறாய். ஒன்று செய்யேன். காஞ்சிபுரத்தை நீ எடுத்துக் கொள். திருச்சிராப்பள்ளியை எனக்குக் கொடுத்து விடேன்.''

''அதெப்படி முடியும் கோனேரிராயா?''

"எது... யாருடைய இடம். சாளுவ நரசிம்மரின் தேசம் முழுவதும் நரச நாயக்கன் சாப்பிடப் போகிறான். சோழ தேசம் முழுவதும் தெலுங்கு மன்னர்கள் ஆளப் போகிறார்கள். தெலுங்கு மன்னர்கள் காலம் முடிந்து இஸ்லாமியர்கள் வரப்போகிறார்கள் . யார் யாருடைய தேசத்தை ஆண்டு கொண்டிருக்கிறோம். இது உன்னுடைய தேசமும் அல்ல. என்னுடைய தேசமும் அல்ல ராமராஜா. இது தமிழர்களுடைய இடம். உனக்கு தமிழ் பேசவும் வர வில்லை. எழுதவும் வரவில்லை. தயவுசெய்து நீ இங்கு ஆட்சி செய்ய வேண்டும் என்கிற எண்ணம் இருந்தால் முதலில் தமிழ் படிக்கக் கற்றுக்கொள். தமிழ் மக்களை ஆட்சிசெய்ய தமிழ் படிக்காமல் முடியாது. தமிழில் பேசாமல் முடியாது. தமிழில் பாண்டித்யம் இல்லாதவனை மக்கள் மன்னனாக ஏற்றுக்கொள்வதில்லை. முட்டாளாக இங்கு வந்து பேசாதே. போ. முதலில் தமிழ் கற்றுக் கொள். பிறகு நரச நாயக்கன் என்ன செய்கிறான் என்பதைத் தெரிந்துகொண்டு பிறகு நமது திட்டங்களைப் பற்றி பேசுவோம்."

"நீ என்ன சொல்கிறாய் என்று விளங்கவில்லை கோனேரிராயா."

"சாளுவ நரசிம்மன் இறந்துபோகும் வரை, அடுத்து அரியணையில் ஏறுவது யார் என்று தெரியும் வரை எந்த வித போர் தந்திரமும் எந்தவித அறிக்கையும் விடலாகாது. நாம் விஜயநகர சாம்ராஜ்யத்திற்கு அடிபணிந்தவர்களாக சாளுவ நரசிம்மனுக்கு தொண்டர்களாகவே இருக்க வேண்டும். மறுத்தால் மிக மோசமான விளைவுகள் ஏற்படும். முதலில் மக்கள் தாங்கமாட்டார்கள். இங்குள்ள படைத்தளபதிகள் தாங்கமாட்டார்கள். படைகளுக்கு நடுவே கலவரம் ஏறபட்டால எப்படி மன்னராக முடியும்?



நீ உன்னுடைய படைவீரர்களான தெலுங்கர்களைப் பகைத்துக் கொண்டு, இங்கு தமிழ் தெரியாததால் தமிழர் களையும் பகைத்துக் கொண்டு அவமானப்படப் போகிறாய்.

கந்தாடை ராமானுஜா! முதலில் அரசியல் கற்றுக் கொள். இடைவிடாது பெண்களுடனே படுத்துக் கிடந்தால் உனக்கு ஒரு இழவும் புரியாது. முதலில் நீ இடத்தைக் காலி செய். எனக்கு நிறைய வேலை இருக்கிறது."

கந்தாடை ராமானுஜம் தடி ஊன்றி எழுந்திருந்தார். வெளியே நடந்தார்.

அவருடைய குதிரைவண்டி போவதைக் கேட்டு காளமேகம், கோனேரிராயன் அறைக்கு வந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் ஆழ பார்த்துக் கொண்டார்கள்.

"என்ன நினைக்கிறாய் காளமேகம்?" கோனேரிராயன் அடிக்குரலில் கேட்டான்.

"கோனேரிராயனே! நீ மன்னனாகும் காலம் வந்து விட்டது. நீ மன்னன். இன்றிலிருந்து ஆறு 'மாதம் பொறுத்து ஒரு நல்ல நாளில் நானே வைரக்கிரீடம் சூட்டுவேன். எனக்குள்ளே அகிலாண்டேஸ்வரி சொல்கிறாள்." காளமேகம் அடிக்குரலில், ஆனால் உணர்ச்சிவசப்பட்ட குரலில் உதடு துடிக்க கூறினார்.

மெல்ல எழுந்திருந்த கோனேரிராயன், சாஷ்டாங்கமாக காளமேகம் புலவர் காலில் விழுந்தான்.

"நான் என்னிலும் மூத்தவரான ஒரு புலவரை வணங்குகின்றேன். என்னிலும் பெரிதான தமிழ்மொழியை வணங்குகின்றேன். என்னிலும் பெரியவரான கடவுள்

தரிசனம் பெற்ற ஒரு ஞானியை வணங்குகின்றேன். ஆகவே காளமேகப் புலவரே! என்னுடன் எப்போதும் இரும்."

எழுந்த கோனேரிராயனைக் காளமேகப் புலவர் இறுக தழுவிக் கொண்டார். நெற்றியில் முத்தமிட்டார். தம்முடைய நட்பு விசித்திரமாக இருக்கிறது. கோனேரி ராயா! நாம் நண்பர்களா, நாம் குரு சீடர்களா, சகோதரர்களா... எனக்கு ஒன்றும் புரியவில்லை.

சித்ராங்கியின் மீது எனக்கு அளவற்ற காதல். அவளை நான் பிரிந்ததேயில்லை. ஆனால், உன்னை சந்தித்த பிறகு எனக்கு சித்ராங்கியின் ஞாபகமே வரவில்லை. உன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேன். மனம் முழுவது மாய் ஈடுபட்ட ஒரு பெண் சிநேகிதத்தையே உன் சிநேகம் குறைத்துவிட்டது. உன்னோடு இருக்க வேண்டும் என்கிற ஆசை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. உன்னோடு இன்னும் அதிகம் பேச வேண்டும் என்ற பேராவல் வந்திருக்கிறது."

கண்கள் பனிக்க காளமேகம் பேசினார்.

"இதற்குக் காரணம் என்னவென்று எனக்குத் தெரியும் காளமேகம். நீயும் நானும் நம் சுகங்களைப் பற்றி யோசிக்கிறவர்களல்ல. நமக்கு எந்தவித பிடிப்பும் இந்த உலகத்தில் இல்லை. மிகப் பெரிதான சில விஷயங்களை செய்யவே நீயும் நானும் பிறந்திருக்கிறோம். நீயும் நானும் சேர்ந்திருக்கிறோம்.

தமிழ்நாட்டின் மீது தெலுங்கர்களுடைய ஆதிக்கம் மிக அதிகமாக இருக்கிறது. தெலுங்கர்களுடைய அரசாட்சி குழப்பம் தமிழர்களைத் தாக்கப் போகிறது. தமிழர்கள் சும்மா இல்லாமல் சைவம் வைணவம் என்று சண்டையிட்டு அடித்துக் கொள்ளப் போகிறார்கள். சாதாரண மக்களைக் கலவரப்படுத்தப் போகிறார்கள். ஜாதிக் கலவரங்களைத்



[illegible] போகிறார்கள். எல்லாம் [illegible] இந்த சண்டை, [illegible] பிளவு. இந்தக் கேவலமான மூர்க்கமான [illegible] இஸ்லாமியனை உள்ளே வர ஏற்பாடு செய்துவிடும்.

நம்முடைய முக்கியமான குறிக்கோள் தென்னிந்தி யாவில் இஸ்லாமியர்கள் வரக்கூடாது. இந்துக் கோயில் களைத் தொடக்கூடாது. மறுபடியும் ஒரு கொள்ளை இங்கே நடக்கக் கூடாது. அவர்கள் வடக்கேயே தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இதற்காக என்ன வேண்டு மானாலும் செய்யலாம்."

"உண்மை, கோனேரிராயா! நான் என்ன யோசிக்கி றேனோ அதையேதான் நீயும் சொல்கிறாய். இந்து மதம் காப்பாற்றப்பட வேண்டும். இந்த இந்து மதத்தின் கோவில் கள் காப்பாற்றப்பட வேண்டும்.

கோனேரிராயா! எதிர்காலம் பற்றி நினைக்கும்போது வயிறு கலங்குகிறது. நாம் ஏதேனும் செய்ய வேண்டும். அதனுடைய முதல் முயற்சியாக நான் ஒன்று செய்யப் போகிறேன். நீ சரி என்று சொல்ல வேண்டும்."

"என்ன காளமேகம்?"

"நான் இரண்டு பெண்களை உனக்கு அறிமுகப் படுத்துகிறேன். அவர்கள் சோழர்குல சுந்தரிகள்! அரச பரம்பரையினர். சோழர் குலமாக இருந்தாலும் வைண வத்தின் மீது ஒரு பெண் மாறாத காதல் கொண்டிருக் கிறாள். இன்னொரு பெண் சைவத்தை விரும்புகிறாள்.

ஆயினும் வெவ்வேறு சமயவழிபாடு கொண்டவர்கள். ஆனாலும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஒருவள் பெயர் பெருமாள் நாச்சி. இன்னொருவள் பெயர் வீரநாச்சி.

பெருமாள் நாச்சி வைணவத்தைத் தழுவியவள். வீர நாச்சி சைவ குல சுந்தரி. இவர்கள் இருவரும் சோழர் பரம்பரையினர். நன்கு படித்தவர்கள். அழகிகள். கெட்டிக் காரிகள். பாடல்களில் தேர்ந்தவர்கள். இலக்கியம் தெரிந்தவர்கள்.

இவர்களை நீ சந்திக்க வேண்டும். இவர்களுக்கு எதிரே நான் பல பாடல்கள் பாடியிருக்கிறேன். இவர்களுக்கு தமிழ் பற்றி சொல்லிக் கொடுத்திருக்கிறேன். இவர்கள் இருவரும் திரிசிரபுரத்தில் உறையூருக்கு அருகே வாழ்கிறார்கள்.

நாளை நாம் இருவரும் உறையூருக்குப் போகிறோம். உன்னைப் பற்றியும் அவர்களிடம் நான் சொல்ல வேண்டு மல்லவா. அதற்காக நான் சற்று முன்னே போகிறேன். இப்போது விடைகொடு.''

மறுபடியும் நண்பர்கள் தழுவிக் கொண்டார்கள். கோட்டையிலிருந்து பெண்குதிரையேறி காளமேகப் புலவர் கிளம்பினார். இன்னொரு குதிரையில் கோனேரி ராயன் ஏறி வழியனுப்பி வைத்தான். காளமேகப் புலவரை திருவானைக்காவலில் விட்டுவிட்டு வரும்படி மூன்று குதிரை வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

அவர் கிளம்பும்போது அவர் மடிமீது ஒரு சிறிய மூட்டை பொற்காசுகள் வைத்தான்.

''இது எனக்குப் பிடிக்கவில்லை'' என்று காளமேகம் உரத்த குரலில் சொல்ல,

''இது என் கட்டளை!'' என்று கோனேரிராயன் கண்சிமிட்டினான்.



பொற்காசுகளோடும் குதிரைகளோடும் காளமேகம் திருவானைக்காவல் நோக்கிப் போனார். அவர் மனம் அதிவேகமாய் சிந்தித்துக் கொண்டிருந்தது.

மழை குறைந்து வெயில் அடிக்க ஆரம்பித்து விட்டது. மழையையும் வெயிலையும் மாறி மாறி அனுபவித்த தாவரங்கள் பளீரென்று திரிசிரபும் முழுவதும் இருந்தன. சிறிய செடிகள் பூத்துக் குலுங்கின. பறவைக் கூட்டங்கள் அலைமோதின. மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையாரை தரிசனம் செய்துவிட்டு பெருமாள் நாச்சியும் வீரநாச்சியும் கீழிறங்கி வந்தார்கள். ஸ்வாமி தரிசனத்தைவிட மலைக் கோட்டை உச்சியிலிருந்து சுற்றியுள்ள சோழ தேசத்தைக் கண்குளிரப் பார்ப்பதுதான் முக்கியமான நோக்கமாக இருந்தது. மனம் நிரம்புமளவுக்கு பார்த்துவிட்டு அவர்கள் தாயுமானவர் ஸ்வாமி சந்நிதி அருகே வரும்போது காளமேகப் புலவர் சித்ராங்கியோடும் ரோகிணியோடும் எதிர்ப்பட்டார்.

''வருக, வருக, புலவரே! இது என்ன ஆனைக் காவிலிருந்து மாணிக்க விநாயகரை தேடி வந்து விட்டீர்கள். அதுவும் உங்கள் பெண்களுடன் படையெடுத்திருக்கிறீர் கள். என்ன விஷயம்? ஏதும் வேண்டுதலா? உங்கள் சித்ராங்கி சூல் கொண்டிருக்கிறாளா?''

''உங்களைத் தரிசிக்க வந்தேன் தாயே! உங்கள் அரண்மனைக்குப் போனேன். நீங்கள் மலைக்கோட்டை போயிருப்பதாக செய்தி வந்தது. அரண்மனையில் பேசுவதைவிட உங்களோடு வெளியில் பேசுவது சிறந்தது என்று இங்கு வந்திருக்கிறேன். மற்றபடிக்கு வேறு விஷயமில்லை.''

''அப்படியா... அரண்மனையில் பேச முடியாத விஷயங்கள் ஏதேனும் உண்டா? இன்று வீரநாச்சியின்

பிறந்தநாள். உச்சிப்பிள்ளையாரை தரிசிக்க வேண்டும். காவிரி பாயும் திரிசிரபுரத்தைக் கண்குளிரப் பார்க்க வேண்டும் என்றாள். அதற்காகத்தான் இங்கு வந்தேன். என்ன விஷயம் சொல்லுங்கள்?''

''நான் சித்ராங்கியைக் கூட்டி வந்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது. சித்ராங்கி, அதைக் கொடு.''

சித்ராங்கி தோளில் மாட்டியிருந்த துணி மூட்டையிலிருந்து இரண்டு ஓலைச்சுவடிக் கட்டுகள் உருவி பெருமாள் நாச்சியிடம் நீட்டினாள்.

''உங்களுக்குப் பிடிக்குமா என்று தெரியவில்லை. இன்று வீரநாச்சியின் பிறந்தநாள் என்று சொல்கிறீர்கள். எனவே, வீரநாச்சிக்குப் பரிசாகவே இந்த காளமேகம் இதைத் தருகிறான். இந்த நூலுக்கு பெயர் பெரிய புராணம். சேக்கிழார் எழுதிய பெரிய புராணம். சைவ நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து அற்புதமான காவியமாக சேக்கிழார் எழுதியிருக்கிறார். இதன் பிரதி ஒன்று கோனேரி ராயன் சபையில் இருந்தது. நேற்று அங்கு சென்றிருந்தேன். கேட்டு வாங்கி வந்தேன். இதை வாங்கும்போதே உங்கள் நினைவு வந்தது. நீங்கள் பெருமாள் நாச்சியாக இருந்தாலும், தீவிர வைஷ்ணவ பக்தையாக இருந்தாலும் இந்த சைவ இலக்கியம் படித்துவிட்டு கண்களில் நீர் வழிய நிற்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.''

''நான் கேள்விப்பட்டிருக்கிறேன் காளமேகம்! கதையாகக் கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர பாடலாகப் படித்ததில்லை.

தன்னுடைய மனைவியை சிவனடியார்க்குக் கொடுத்தது. தன்னுடைய மகள் கூந்தலைத் திருமணத்தன்று மழித்துக் கொடுத்த ஒரு நாயன்மார், பிள்ளையை நறுக்கி



சிவனடியார்க்கு கறி செய்த இன்னொரு பக்தர், கண் குருடானாலும் கமலாலயத்தை தன்னுடைய முயற்சியினால் தூர் எடுக்க முயன்ற இன்னொரு சமய சிந்தனையாளர் என்று பல பேருடைய அற்புதமான கதைகள் நான் கேட்டிருக்கிறேன்.

சைவம் என்பதைவிட இறைபக்தி என்கிற விஷயம்தான் அதில் மேலோங்கி இருக்கிறது. இறைவன் உள்ளே புகுந்துவிட்டால் வேறு எதுவும் அங்கு இருப்பதில்லை இறைவனைத் தவிர என்று அதில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.''

''ஆமாம் தாயே! நீங்கள்தான் வைஷ்ணவராக இருந்தாலும் சைவ இலக்கியத்தைப் பாராட்டுகிறீர்கள். மற்றபடிக்கு வைஷ்ணவ சைவ பேதம் இங்கு மிக அதிகமாக இருக்கிறது. இதை நாம் எப்படியாவது குறைக்க வேண்டும்.''

''என்ன செய்யலாம்?''

''அதை பிற்பாடு யோசிக்கலாம் தாயே! அதற்கு முன் இன்னொரு கோரிக்கை.''

''என்ன?''

''நீங்கள் இருவரும் ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை.''

''ஹ... ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியில் எங்களிடம் வந்துவிட்டாரா காளமேகம்.''

''இல்லை தாயே! உங்களுடைய நன்மைக்காக சொல்கிறேன். சோழர் குல இளவரசிகளான நீங்கள் இத்தனை வயதுக்குப் பிறகும் திருமணமாகாமல் இருப்பது நல்லதல்ல.''

“காளமேகம்! என்ன நடந்தது என்று உங்களுக்கு தெரியுமா என்று தெரியவில்லை. எங்களுக்கு பதின்மூன்று வயதில், அதாவது வீரநாச்சியின் பதின்மூன்று வயதில் திருமணம் பேசப்பட்டது. நாங்கள் இருவருமே ஒருவருக்கே வாழ்க்கைப்படவேண்டும் என்று விரும்பினோம். அதே வண்ணம் ஒரு சோழர்குல இளவரசரைத் தேர்ந்தெடுத்தார் கள்.

தேர்ந்தெடுத்து திருமணமும் நிச்சயமாயிற்று. திருமணம் நிச்சயமான ஏழாம் நாள் அந்த இளைஞன் கொலை செய்யப்பட்டு விட்டான்.

இதற்குக் காரணம், எங்களைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்று வேறு ஒரு புதிய சோழர் குல தளபதி விரும்பினார். அவருக்கு ஏழாவது எட்டாவது மனைவிகளாக நாங்கள் இருக்கவேண்டும் என்று ஆசைப் பட்டார். எந்த பாவமும் அறியாத அந்த இளைஞனைக் கண்டம் துண்டமாக வெட்டிப் போட்டார்.

இந்த அவலத்திற்குப் பிறகு திருமணம் பற்றி நினைக் கவே அருவருப்பாக இருக்கிறது. இத்தனைக்கும் அந்த சோழகுல இளைஞன்மீது எங்களுக்கு எந்தக் காதலும் இல்லை. அவன் எப்படிப்பட்டவன் என்ற அக்கறையு மில்லை. ஏதோ ஒரு இளைஞன் என்றுதான் இருந்தோம்.

ஆனால், அவனுடைய சாவு எங்களைக் குலைத்து விட்டது. அவன் செத்ததற்கு போகக்கூடாது என்றார்கள். வேண்டுமென்றே என்னுடைய பதினைந்தாவது வயதில் அவளுடைய பதின்மூன்றாவது வயதில் குதிரை ஏறி அவனுடைய சாவில் கலந்துகொண்டோம். அவனுக்காக அழுதோம்.



அப்படியானால் நீங்கள் பொட்டழித்து விடுவீர்களா என்று கேட்டார்கள். இல்லை என்று சொன்னோம். மனதாலும் இவரை நாங்கள் தீண்டவில்லை. ஆனால், இவன் மரணம் எங்களை உலுக்கி விட்டது.

இவன் மரணத்திற்கு மறைமுகமாக நாங்கள் காரணமாகி விட்டோம். எனவே, வருந்துகிறோம் என்று சொல்லி அவனுக்கு வாய்க்கரிசி போட்டுவிட்டு வந்தோம். காவிரியில் அவன் மரணம் பொருட்டு தீட்டு கழிக்க நீராடிவிட்டு வந்தோம். இது பெரிதாகப் பேசப்படவே, இதற்குப் பிறகு பெண் பேசவே எவரும் வரவில்லை.

அந்தக் கிழ தளபதி மறுபடி முயற்சி செய்தால் வெட்டிக் கொன்று போடுவோம் என்று பயமுறுத்தினோம். பிறகு அந்தக் கிழ தளபதி மறந்தும், அவன் இறந்தும் இரண்டு வருடமாகிறது.

எனவே', எங்கள் திருமணம் அந்தரத்தில் நிற்கிறது காளமேகம்.”

“இல்லை அம்மா! இந்தத் திருமணம் வருந்தலுக்காக நிற்கவில்லை. சரியான ஆளுக்காக காத்திருக்கிறது. உங்களைப் போன்ற படித்த இலக்கியம் தெரிந்த, பண்புள்ள வீராவேசம் உள்ள சுதந்திர சிந்தனை கொண்ட பெண்களைத் திருமணம் செய்து கொள்ள பேரறிவும் பேராற்றலுடன் உள்ள இளைஞர் தேவை. சாதாரணமான இளைஞர்களையும் கிழவர்களையும் நீங்கள் திருமணம் செய்து கொண்டால் உங்கள் வாழ்க்கை பாழாகும். நான் என் மனதில் ஒருவரை வைத்திருக்கிறேன்.”

“தெரியும்!”

“சொல்லுங்களம்மா.”

"கோனேரிராயனை சொல்லப் போகிறீர்கள்."

"எப்படியம்மா கண்டுபிடித்தீர்கள்?"

"கோனேரிராயன் எப்படிப்பட்டவர் என்று எங்களுக்கு தெரியும். நீங்கள் கோனேரிராயனிடமிருந்து வருகிறேன் என்று சொன்னவுடன் இதற்கான தூதாகத்தான் இருக்கும் என்று உடனே கணக்கு போட்டு விட்டேன். ஆனால், கோனேரிராயன் தமிழரல்லவே."

"அதனாலென்ன தாயே! தமிழர் தமிழரைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற நியதி எப்போதோ உடைந்து விட்டது. சாளுக்கியர்களை உங்கள் வம்சம் திருணம் செய்து கொண்டிருக்கிறதே. கோனேரி ராயன் கர்நாடகத்திலிருந்து வந்தவர். கன்னடம் பேசுகின்ற பிராமணர். அவருடைய வாழ்க்கை வினோதமானது. தனியாக இருக்க வேண்டுமென்று புறப்பட்டு தென்திசை நோக்கி க்ஷேத்திராடனமாக வந்து வந்த இடத்திலே தளபதி பொறுப்பேற்றவர். போர் செய்வதில் வல்லவர். அரசியல் தந்திரம் தெரிந்தவர். நல்ல இலக்கியவாதி. பேச்சாளி. எல்லாவற்றையும்விட கோனேரிராயன் உண்மையானவர். வாழ்கையில் ஏதேனும் சாதிக்க விரும்புபவர். அதனாலேயே திருமணம் வேண்டாம் என்று இதுநாள் வரை இருந்தவர். எல்லாவற்றையும்விட தமிழ் காதல் உடையவர். என் நண்பர்."

"அவருக்கு என்ன வயதிருக்கும்?"

"உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் முப்பத்தாறு அகவை முடிந்து விட்டது."

"எனக்கு இளைஞர்களைத் திருமணம் செய்து கொள்ள விருப்பமில்லை."



"இளைஞர்களோடு திருமணம் செய்து கொண்டு அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவே சிரமப்படுவதற்கு பதில் தெளிவாகப் பேசுகிற முதிர் ஆட்கள் உத்தமம் என்பது என் எண்ணம்."

"கோனேரிராயருக்கு எங்கள் மீது விருப்பம் உண்டா?"

"உங்களுக்கு கோனேரிராயர் மீது விருப்பம் உண்டா என்று கேட்பதற்குத்தான் வந்திருக்கிறேன்."

"காளமேகம்! எங்களுக்கு விருப்பு வெறுப்பு என்று எதுவுமில்லை. திருமணம் வேண்டாமென்று சொன்னாலும் இப்படியே இருந்துவிட எங்களால் முடியும். ஆனால், கோனேரிராயரைத் திருமணம் செய்து கொண்டு என்ன சாதிக்கப் போகிறோம் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. நீ என்ன சொல்கிறாய் சகோதரி."

"நான் தீவிர வைணவம். இனி ஸ்ரீரங்கம் கோவிலுக்குப் போகாதே என்று தடுத்தாரேயானால் அவர் எனக்குக் கணவராக இருக்க முடியாது."

"அப்படியில்லை தாயே! கோனேரிராயர் அப்படிப் பட்டவரல்ல."

"அக்கா, கடந்த இருநூறு வருடங்களாக இந்த சோழ தேசமும் தமிழ் மக்களும் பல்வேறு வேதனைகளை அனுபவித்துவிட்டார்கள். யார் தங்களுக்குத் தலைவன் என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். எது தங்களுடைய கலாசாரம் என்று தெரியாமல் விழிபிதுங்கிக் கொண்டிருக்கிறார்கள். படையெடுத்து வரும் இஸ்லாமியர் களுக்குப் பயப்படுவதா, சாளுவ அரசர்களுக்குப் பயப்படுவதா, விஜயநகரப் பேரரசுக்கு அடிபணிவதா, அவ்வப்போது கிளர்ந்து எழும் சம்புவராய கலகக்காரர் களுக்கு பதில் சொல்வதா, பாண்டியர்களா, சேரர்களா,

சோழர்களா என்று தவித்துப் போயிருக்கிறார்கள். தங்களுடைய மொழி, மதம், கலாசாரம் எதுவுமே சரியாகப் புரியாமல் ஒரு குழப்பமான காலக்கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தெளிவாக சொல்லிவிடு அக்கா. யார் தமிழ் மொழிக்கு முதன்மை தருகிறார்களோ, யார் தமிழிலக்கியத்தை சீரும் சிறப்புமாக நிறுத்துகிறார்களோ, யார் இந்து மதத்தைப் பேணிக் காக்கிறார்களோ அவர்களுக்கு இந்த பெருமாள் நாச்சி அடிபணிவாள் என்று சொல்லி விடு.

அது கோனேரிராயராக இருந்தாலும் சரி, வேறு எந்த சோழனாக இருந்தாலும் சரி, அவன் திருமணம் செய்து கொள்ள வேண்டிய அவசியம்கூட இல்லை. வெறும் தாசியாக, வைப்பாட்டியாக நடத்தினாலும் சரி... அவன் தமிழுக்கு சேவை செய்பவனாக, தமிழ் மக்கள் முன்னேற்றத்திற்கு பாடுபடுவனாக இருக்கவேண்டும்.

கோனேரிராயரிடம் சொல்லுங்கள், இதற்கு மாறாக அவர் நடந்தாரானால் அவருக்கு மாறாக இந்த சோழர் குல இளவரசிகள் நடப்பார்கள் என்று சொல்லுங்கள். இதற்கு சம்மதமாயின் வந்து பேசச் சொல்லுங்கள். பரஸ்பரம் பிடித்திருப்பின் மேற்கொண்டு விஷயங்கள் தொடருவோம்.''

''வேறு என்ன புலவரே?''

''நீங்கள் உங்களுடைய வாழ்க்கை சௌகரியங்களைப் பார்க்காமல் எதற்கு மொழி என்றும் இனம் என்றும் பேசிக் கொண்டு அவஸ்தைப்படுகிறீர்கள். எந்த சோழ தேசத்துக் குடும்பம் தமிழ் மொழியைப் பற்றி கவலைப்படுகிறது. யாருக்குமில்லாத அக்கறை உங்கள் இருவருக்கும் ஏன்?



னக்குப் புரியவில்லை.'' காளமேகம் அவர்கள் இருவரையும் உற்றுப் பார்த்துப் பேசினார்.

''இதைப் பற்றி நேற்று நாங்களும் பேசினோம். நாம் வாழும் காலத்தில் நம் மொழியை நாம் வளர்க்காவிடில் இதைவிட பெரிய துரோகம் வேறு எதுவும் இருக்க முடியாது.

மொழி என்பது வெறும் செய்தி பரிமாறும் கருவிமட்டுமில்லை. மொழி என்பது ஒரு கலாசாரம். கலாசாரம் என்பது ஒரு வாழ்க்கை. வாழ்க்கை என்பது உணர்வுகள் நிரம்பியது. என் காலக்கட்டத்தின் உணர்வுகளை, என் காலக்கட்டத்தின் வாழ்க்கைச் சிறப்புகளை நான் எப்படி பரிமாறுவேன். மொழிதானே முதல் விஷயம். அந்த மொழியை நான் போற்றிப் பாதுகாக்காவிட்டால் என் உணர்வுகள் பரிமாறுவது முழுவதுமாக முடியாது. எப்போது பரஸ்பரம் நான் உணர்வுகளைப் பரிமாறவில்லையோ அப்போது என் வாழ்க்கை மிகுந்த நஷ்டத்துக்கு உள்ளாகும்.

இதோ ஒரு புலவர் என்னை ஏன் தேடிக் கொண்டு வந்திருக்கிறார். எனக்கு மொழி தெரியும் என்றுதானே. நான் கோனேரிராயரைத் திருமணம் செய்து கொள்ள ஏன் சில கட்டளைகள் விதிக்கிறேன். எனக்கு மொழி தெரியும் என்றுதானே. ஆக, என் உணர்வுகளை என் விருப்பங்களை, என் ஆசைகளைத் தெரிவிக்க மொழி மிக முக்கிய காரணம் அல்லவா. அந்த மொழியை நான் புறக்கணித்துவிட்டால், ஆசைகளே இல்லாதவளாக ஞானமே இல்லாதவளாக தெளிவே இல்லாதவளாக வாழ்ந்து கிடப்பேன். அந்த வாழ்க்கையும் காட்டுமிராண்டி வாழ்க்கையும் ஒன்றுதானே. என் நாகரீகம் என்னிலிருந்து உங்களுக்கு வெளிப்படுவது மொழியால்தானே. மொழியை நான் கவனமாக வளர்த்து என் அடுத்த சந்ததியினருக்குக்

கொடுக்க வேண்டும். இன்று நான் கவனமாக வளர்க்கா விட்டால் என் குழந்தைகள் செய்திகளைப் பரிமாற மொழியின் வளமை தெரியாமல் அவஸ்தைப்படும். நாகரீகம் வளர்வது என்பது மொழி வளர்வதால், கலாசாரம் வளர்வது என்பது மொழியினுடைய மேன்மையால். தமிழ் மொழி மிகச் சிறப்பாக இருப்பதற்கான காரணம், இங்கு மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். வாழ்க்கையை நன்கு அனுபவித்திருக்கிறார்கள் வாழ்க்கையின் உன்னதங்களை அற்புதமாக சந்தோஷமாகக் கொண்டாடியிருக்கிறார்கள். அதை வெளிப்படுத்தவும் செய்திருக்கிறார்கள்.

மொழியால் வாழ்க்கை சந்தோஷமாயிற்று. சந்தோஷத்தால் மொழி பலமாயிற்று. ஆக, ஒரு நாகரீகம் உன்னத நிலைக்கு வளர்ந்தது. நான் சொல்வது சரியா புலவரே.''

''தாயே! என்ன அற்புதமாகப் பேசுகிறாய். பெருமாள் நாச்சி! உனக்கு இருக்கும் அறிவில் பத்தில் ஒரு பங்குகூட புலவர்களுக்கு இல்லையே. இருந்தால் இந்த மொழி எவ்வளவு உன்னத நிலை அடைந்திருக்கும்.

ஆனால், அம்மாதிரி மொழியின் வளர்ச்சிக்கு அரசியல் சக்தி காரணம். தெலுங்கர்கள் உள்ளே வந்து விட்டார்கள் அல்லவா. எனவே, தமிழ் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. இனி இஸ்லாமியர்கள் வரப் போகிறார்கள். தெலுங்கும் பின்னுக்குத் தள்ளப்படப் போகிறது. எனவே, தெலுங்கர்களிடமிருந்தாவது தமிழைக் காப்பாற்றிவிடலாம். இஸ்லாமியர்களிடமிருந்து தமிழைக் காப்பாற்ற நாம் இப்போதே ஏதாவது செய்ய வேண்டும்.



தமிழை இன்னும் பலமான மொழியாக்க, எவராலும் அழிக்க முடியாத மொழியாக்க நாம் ஏதேனும் செய்தாக வேண்டும்.

இதுபற்றிப் பின்னர் பேசுவோம். கோனேரிராயர் பற்றி நீங்கள் சொன்னதை நான் அவரிடம் தெரிவிக்கிறேன் எங்கேனும் ஒரு பொது இடத்தில் அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்கிறேன்.

இது எனக்காகவோ உங்களுக்காகவோ, கோனேரிராயனுக்காகவோ அல்ல. தமிழுக்காக, தமிழ் தேசத்திற்காக.''

காளமேகப் புலவர் கைகூப்பினார். அவர்களும் வணங்கினார்கள்.

புலவர் படியிறங்கி சித்ராங்கியோடு மாணிக்க விநாயகர் சந்நிதி அடைந்தார். குதிரை பூட்டிய தேர் ஏறினார். திருவானைக்காவல் நோக்கி தேர் நகர்ந்தது.

''அப்படியா பேசினார்கள்!'' கோனேரிராயன் தொடை தட்டினான். எனக்கு பெருமாள் நாச்சியையும் வீரநாச்சியையும் இப்போதே பார்க்க வேண்டும் போலிருக்கிறது.''

''பொறு கோனேரிராயா. இது இரவு நேரம். பெண்களைப் பார்க்க இது உகந்த நேரமல்ல.''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் காளமேகம். இந்த நேரத்தில் பெண்களைப் பார்த்தாலென்ன... அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டால் என்ன ?''

''மறுபடி சொல்கிறேன், இரவு நேரம் முதல் ஜாமம் முடிந்துவிட்டது. நமக்கு ஊர் காக்கும் பணி உண்டு.''

"என்னோடு குதிரை ஏறி வாரும். அந்த சோழ தேசத்து இளவரசிகளின் வீட்டு வாசலில் போய் நிற்போம். என்ன நடக்கிறது என்று பார்ப்போம்."

"இரவு நேரத்தில் என்ன நடக்கும்."

"ஏதோ நடக்கும் என்று எனக்குள் அகிலாண்டேஸ்வரி சொல்லுகிறாள். வருகிறீரா இல்லையா?"

கோனேரிராயன் வெளியே கிளம்பினான். குதிரை ஏறினான். காளமேகப் புலவர் இன்னொரு குதிரை ஏறி அவனைப் பின்தொடர்ந்தார்.

"கோனேரிராயா! சித்ராங்கி என்னைக் கோபித்துக் கொள்ளத் துவங்கி விட்டாள். எப்போது கோனேரிராயன் சிநேகம் கிடைத்ததோ அப்போதிலிருந்து நீங்கள் சரிவர அரண்மனைக்கு வருவதில்லை என்று சீறி விழுகிறாள்.

'என்ன இன்று இரவு கோனேராயனிடம் படுக்கப் போகவில்லையா?' என்று கேலி செய்கிறாள்.

நான் எப்படி அவளைச் சமாளிப்பது என்று எண்ணிக் கொண்டிருக்கையில், நீ இவ்விதம் இரவெல்லாம் இழுத்தடித்தால் நான் என்ன செய்வேன். திருவானைக்காவல் எங்கிருக்கிறது. உறையூர் எங்கிருக்கிறது. விடியலில் பார்த்துக் கொள்ளலாமே."

காளமேகப் புலவர் அசதியோடு சொன்னார்.

"இல்லை இப்போதே போகிறோம்."

"எதற்கு என்று சொல். காரணத்தைத் தெரிந்து கொண்டாவது காரியத்தை செய்கிறேன்."

"காளமேகப் புலவரே! இன்று காலை பெரிய புராணம் என்கிற சிறப்பான நூலை அந்தப் பெண்களிடம் கொடுத்து



விட்டு வந்திருக்கிறீர்கள். அந்தப் பெண்களிடம் நீங்கள் கொடுத்த பொழுது அவர்கள் இருவருமே, இவை பாடல்களாகத் தெரியாது. கதைகளாகத்தான் கேள்விப்பட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இப்பொழுது அது கவிதை நூல் வடிவில் அவர்களுக்கு மூல நூல் கிடைத்திருக்கிறது.

எவ்விதமேனும் நான் உறையூர் போய், அந்த மாளிகைக்குள் நுழைந்து அந்த இரண்டு சகோதரிகளும் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கப் போகிறேன்.

அந்தப் பெரிய புராண நூலை இன்று படிக்கத் துவங்கி கீழே வைக்க முடியாமல் இரவெல்லாம் விளக்கொளியில் கண் விழித்துப் படித்துக் கொண்டிருந்தால் நான் அவர்களைத் திருமணம் செய்து கொள்வேன். இல்லையெனில், வேறு இடத்தில் நீங்கள் எனக்கு பெண் பார்க்க வேண்டியிருக்கும்."

"என்ன முட்டாள்தனமான கூற்று. கோனேரிராயா! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா. அரசகுலப்பெண்கள் அவர்கள். ஆயிரம் வேலைகள் அவர்களுக்கு இருக்கும். இன்று ஒரு நாள் முழுவதும் பூஜையில் இந்த சுவடியை வைத்து ஒரு நல்ல நாள் பார்த்து படிக்கத் துவங்கலாம் என்று தீர்மானித்திருக்கலாம். ஒரு புலவரை அழைத்து உரக்கப் படிக்கச் சொல்ல வேண்டும் என்று அவர்கள் எண்ணியிருக்கலாம். இதைச் சோதிப்பதற்காக உறையூர் கோட்டைக்குள் சுவரேறிக் குதிப்பேன் என்று சொல்கிறாயே, அதுவும் தவறு. இப்படிச் சோதனை செய்து ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுப்பேன் என்று சொல்வதும் தவறு."

"இது நான் தேர்ந்தெடுக்கவில்லை. என் சோதனை இல்லை. அகிலாண்டேஸ்வரியிடம் கேட்டேன். இந்த

நூலைப் படிக்க வேண்டும் என்கிற ஆவல் அந்தப் பெண்களுக்கு இருக்குமா என்று அன்னையிடம் கேட்டேன்.

அவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அன்னையிடமிருந்து பதில் வந்தது.

அகிலாண்டேஸ்வரியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தது நீதானே காளமேகம்! உன் அகிலாண்டேஸ்வரி பொய் சொல்வாளா. என்னைத் தவறான வழியில் நடத்துவாளா. அதனால்தான் அகிலாண்டேஸ்வரி சொல்வது சரியா என்று சோதித்துப் பார்க்க நான் சுவரேறிக் குதிக்கப் போகிறேன். செய்யட்டுமா வேண்டாமா?''

கோனேரிராயன் பேசி முடித்ததும் காளமேகப் புலவர் அமைதியாக இருந்தார். மெல்ல சிரித்தார்.

''சரி, எப்போது அகிலாண்டேஸ்வரி கட்டளையிட்டு விட்டாளோ அப்போது அவர்களைப் பின்தொடர்வது தான் சரி. வா போகலாம்.''

அவர்கள் நல்ல இருட்டில் காவிரி ஆறு தாண்டி திருசீரபுரத்துக்குள் நுழைந்து அங்கிருந்து மலைக்கோட்டை வழியாக அடர்ந்த சோலைகளுடைய உறையூருக்கு சென்றார்கள்.

கோட்டைக்கு வெளியே நின்றார்கள். கோட்டையின் பின்பக்கம் தோப்பில் குதிரைகளைக் காட்டினார்கள்.

கோட்டை உயரமானதாக இருந்ததால் பாதுகாப்புக்கு காவல் இல்லை. நான்கைந்து வீரர்கள் முன்வாயிலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவ்வப்போது எழுந்து கோட்டையைச் சுற்றி வந்தார்கள். அவர்கள் சுற்றி வராத நேரத்தில் கோனேரிராயன் கயிறு வீசி



கோட்டைச்சுவரில் ஏறினான். அதே கயிற்றின் வழியாக மறுபுறமும் இறங்கத் துவங்கினான்.

''புலவரே! ஒரு நாழிகை நேரம் இங்கே இரும். அந்தப் பெண்களைப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன். அவர்கள் என் சோதனையில் ஜெயித்துவிடுவார்கள் என்று தோன்றுகிறது. அகிலாண்டேஸ்வரி அதைத்தானே சொல்லியிருக்கிறாள்.''

அவன் இறங்கினான். உள்ளே போனான். புலவர் வெளியே காத்திருந்தார். குதிரைகள் கால் மாற்றி தவித்தன.

மெல்ல இருளில் அமர்ந்து கொண்டு தியானம் செய்து கொண்டிருந்தார்.

நேரம் நகர்ந்தது. கோட்டைக் கயிறு அசைவது தெரிந்தது. கயிறு பிடித்து கோனேரிராயன் உச்சிக்கு வந்தான். மறுபுறம் கயிறு வீசிப் போட்டான். இறங்கினான். கயிறை தளர்த்தி உதறி எடுத்துக்கொண்டான். முழங்கையில் சுற்றி தோளில் போட்டுக் கொண்டான். குதிரையைக் கட்டவிழ்த்து நடத்திக் கொண்டு போனான். காளமேகப் புலவரும் தன் குதிரையோடு அவனைத் தொடர்ந்தார்.

''என்ன ஆயிற்று, போன வேலை?'' அடிக்குரலில் கேட்டார்.

''அவர்கள் அழுது கொண்டிருக்கிறார்கள்.''

''என்ன.....''

''ஆமாம். அவர்கள் இரண்டு பேரும் அழுது கொண்டிருக்கிறார்கள்.'' கோனேரிராயன் குரல் கம்மலாக இருந்தது.

''எதற்காக அழுகிறார்கள்?''

''ஒருவருக்கொருவர் பேசியபடி உரத்த குரலில் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். நான் உட்கார்ந்து கேட்டேன்.''

''என்ன செய்தி சொல்லுங்க.''

''திருஞானசம்பந்தர் பாணரையும் அவர் மனைவியையும் யாக குண்டத்திற்கு அருகே உட்கார வைத்து எல்லோரும் சமம் என்று சொல்லிவிட்டார் ஆனால், அரசகுலப் பெண்களாகிய நாம் தீண்டாமையைக் கைபிடித்துக் கொண்டிருக்கிறோமே என்று அழுதார்கள்.

இந்த நூலிலே பேசப்பட்டுள்ள எல்லா நாயன்மார் களிலும் கண்ணப்ப நாயனார்தான் உயர்வு. படிப்பறி வில்லாதவர். பெரிய சீரான நாகரீகம் மிக்க குலத்தில் பிறக்காதவர். அவருக்கு இருக்கிற பக்தியில் ஒரு துளியேனும் எனக்கு இருக்கிறதா. சிவன் கண்ணில் ரத்தம் வழிந்தால் என் கண்ணைத் தோண்டி எடுத்துக் கொடுப் பேனா. ஆக என் படிப்புதானே என் கர்வத்தை வளர்த்திருக் கிறது. என் படிப்புதானே என் பக்தியைக் குறைக்கிறது. என் படிப்புதானே என் அவநம்பிக்கையை வளர்க்கிறது. நான் ஏன் படித்தேன். நான் ஏன் வேடுவச்சியாய் பிறக்காது போனேன்'' என்று பெருமாள் நாச்சி விம்மி விம்மி அழுதாள்.

''பிறகு?''

''வீரநாச்சி வேறு விஷயம் சொல்கிறாள்.''

''என்ன அது?''

''வீரநாச்சி பேசியது நந்தனார் சரித்திரம். சொல்லி சொல்லிப் புலம்புகிறாள். எத்தனை கொடுமை இந்த தேசத்தில் நடந்துவிட்டன. இந்த தேசத்தில் அந்நியப் படையெடுப்புக்கு காரணம் இப்படி நான்கு வர்ணங்



களாகப் பிரிந்திருப்பதுதானா. இது தவறல்லவா. ஒவ்வொரு வர்ணத்திலும் அற்புதமான மக்கள் இருக்கிறார்களே, அவர்களை யாரேனும் இனம் கண்டு கொண்டோமா.

இந்த நந்தனாருக்கு ஏன் இத்தனை சோதனை. ஏன் பார்ப்பனர்கள் நந்தனாரை இவ்வளவு இழிவுபடுத்த வேண்டும். அவரிடம் ஏதோ ஒரு சூட்சுமமான விஷயம் இருக்கிறது என்று தெரிந்துகொண்ட பிறகும் ஏன் பார்ப் பனர்கள் அவரை அங்கீகரிக்கவில்லை. ஜாதி முக்கியமா. குலத்தாழ்ச்சி சொல்லல் பாவமில்லையா என்று அந்தப் பெண்ணும் உரத்த குரலில் பேசினாள்.''

''உங்களுக்கு என்ன தோன்றுகிறது கோனேரிராயர்.''

''அகிலாண்டேஸ்வரியின் கட்டளை, அந்தப் பெண்கள் எனக்குரியவர்கள். அவர்களை வேறு யாரும் திருமணம் செய்ய இயலாது. திருமணம் செய்தால் திருமணம் செய்தவனும் சந்தோஷமாக இருக்கமாட்டான். இவர்களும் நன்றாக வாழமாட்டார்கள். இவர்கள் சாதராண பெண் களல்ல காளமேகம். இவர்கள் எனக்காக அகிலாண்டேஸ் வரியால் படைக்கப்பட்டவர்கள். சிறிது காலம் நாங்கள் வாழ்ந்தாலும் முழுவதும் சந்தோஷமாக வாழ்வோம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. நாளை என் சார்பாய் நீங்களும் சித்ராங்கியும், சித்ராங்கியின் தங்கை ரோஹிணி யும் வெற்றிலை தேங்காய், பழம் எடுத்துக் கொண்டு மங்கல சின்னம் தாங்கி எனக்காக பெண் கேட்டு வர வேண்டும். காளமேகப் புலவரே! திருமணம் என்பதை நான் தள்ளிப் போட்டதன் காரணம் எதற்குத் தெரியுமா?

என்னை முடமாக்கிவிடாத பெண் எனக்கு வேண்டும். இந்தப் பெண்கள் என்னைப் பலமாக்கப் போகிறார்கள். நான் வளரப் போகிறேன். காளமேகப் புலவரே! இன்று காலை நீங்கள் சொன்னதுபோல கோனேரிராயன் வெறும்

தளபதி அல்ல. அவன் மன்னனாகப் போகிறான். வெகுவிரைவில் அதற்கான ஏற்பாடுகள் நடைபெறும்.

நாளைக் காலையில் எனக்காக நீங்கள் பெண்கேட்டு வாருங்கள்.''

கோனேரிராயன் திருவானைக்காவலில் அவரை விட்டு விட்டு விரைவாக சமயபுரம் நோக்கி குதிரையை ஓட்டினான்.

காளமேகப் புலவர் குதிரையை விட்டு இறங்கி சித்ராங்கியின் வீடு நோக்கி போனார்.

கதவு தட்டினார். சித்ராங்கியிடம் நடந்த விஷயங்களைத் தெரிவித்தார். சித்ராங்கி சந்தோஷமாய் அவர் கன்னங்களில் முத்தமிட்டாள்.

''நீங்கள் எது செய்வதாலும் சிறப்பாக செய்கிறீர்கள். ஏன் தெரியுமா? உங்களை இயக்குவது நீங்களல்ல. அகிலாண்டேஸ்வரி! மிகப் பெரிய விஷயம். இந்தத் தமிழ் நாட்டில் வெகு விரைவில் நடைபெறப் போகிறது. அந்த சோழர்குல வல்லிகளுக்கு மிக நல்ல கணவர் கிடைத்து விட்டார். இது அரசியல் மாற்றத்தையும் மொழி கலாசார மாற்றத்தையும் ஏற்படுத்தப் போகிறது. சகலமும் அகிலாண்டேஸ்வரியின் கருணை.''

அவரைக் கைபிடித்து கட்டிலுக்கு அழைத்துப் போனாள்.

''ஊர் கவலை உங்கள் கவலையாகிவிட்டது. இனி உங்களைப் பற்றிய கவலை என்னுடையது. நன்கு தூங்குங்கள். நான் தூங்க வைக்கட்டுமா?'' அவள் புலவரின் அருகில் படுத்து அணைத்துக் கொண்டாள்.

திருமணப் பேச்சு மிக சுமுகமாக முடிந்தது. திருமணத்திற்குச் சீராக கோனேரிராயன் சங்கப் பாடல்களையும்



சிலப்பதிகார நூலையும் கம்ப ராமாயணம் இரண்டு பிரதிகளையும் அந்தப் பெண்களுக்கு அனுப்பிவைத்தான்.

அந்தப் பெண்கள் சோழர் குலத்தில் வெகு காலமாக பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த ராஜேந்திர சோழனுடைய வாளை அவனுக்கு அனுப்பி கௌரவப்படுத்தினார்கள்.

அந்த வாளை வாங்கி கண்களில் ஒற்றிக்கொண்டு சிரசில் வைத்து தன் அரியாசனத்தில் மாலையிட்டு அலங்கரித்து கோனேரிராயன் வைத்தான்.

திருமண நாள் வந்தது.

சமயபுரத்தில் பெருமாள் நாச்சியை அருகே வைத்துத் திருமணம் செய்து கொண்டான். மங்கலநாண் அணிவித்தான். வீரநாச்சியை அகிலாண்டேஸ்வரி சந்நிதியில் நிற்க வைத்து மங்கலநாண் கட்டினான்.

இருவரையும் அழைத்துக் கொண்டு காளமேகப் புலவரும் சித்ராங்கியும் வர, அங்கிருந்து தளபதிகள் சூழ ஸ்ரீரங்கம் நோக்கி சென்றான்.

ஸ்ரீரங்கநாதரை மனைவியர் சகிதமாக விழுந்து வணங்கினான். அங்கு உற்சவத்திற்கு வந்திருந்த அரசர் திருமலைராயரை வணங்கி எழுந்தான். திருமலைராயர் அவருக்கு பொன்னும் பொருளும் வழங்கினார். அங்கிருந்து கந்தாடை ராமானுஜரை ஒரு மரியாதை நிமித்தம் பார்க்கச் சென்றான்.

''என்ன இது திடீர் திருமணம். எனக்கு சொல்லியிருந்தால் உனக்கு நல்ல இடத்தில் பெண் பார்த்திருப்பேன். எதற்கு சோழப் பெண்களை மணந்திருக்கிறாய். நீ கன்னடத்தான் அல்லவா. தெலுங்குப் பெண்ணை மணப்பதுதானே நல்லது. அழகும் வளப்பமும் உடைய தெலுங்குப்

பெண்களை விட்டுவிட்டு இந்த மாநிறத்து சோழர் குலப் பெண்களிடம் என்ன கண்டாய்.’’

பெண்களை வைத்துக்கொண்டே கந்தாடை ராமானுஜம் உரத்த குரலில் கூறினார்.

‘‘யார் யாருக்கு தலையில் என்ன எழுதியிருக்கிறதோ அதுதானே ராமானுஜா நடக்கும்’’ என்று கோனேரிராயன் சொல்ல, சற்று அடங்கிப் போனார்.

‘‘சரி, இந்த திருமணத்திற்கு தூது போனவன் என் மடைப்பள்ளியில் வேலை செய்த வரதன்தானே. அவன் இப்போது என்னவோ காளமேகப் புலவனாம். கவிஞனாம். பாடகனாம். என்ன இது, யார் அவனுக்கு அந்த அதிகாரம் கொடுத்தது. ஏன் அவன் மடைப்பள்ளி வேலைக்கு வரவில்லை. எதற்காக அவன் வைஷ்ணவத்திலிருந்து சைவத்துக்கு தாவினான். அப்படித் தாவியவன் எப்படி மறுபடியும் இந்தக் கோவில் படியேறினான். கூப்பிடு அவனை.’’

கந்தாடை உரத்த குரலில் அதட்ட, கோனேரிராயன் மெல்ல பல் கடித்தான். திருமணமான முதல் நாளே மனைவியர் அருகிருக்க கோபம் காட்ட வேண்டாம் என்று தீர்மானித்தான்.

ஆனாலும் கந்தாடையை நோக்கி திடமாக பேச ஆரம்பித்தான்.

‘‘கந்தாடை! நீ துறவியா அல்லது அரச குடும்பமா என்று தெளிவாகப் பேசிவிடு. காளமேகப் புலவன் என் நண்பன். இது உனக்குத் தெரியும். இருப்பினும் தாறுமாறாகப் பேசுகிறாய். காளமேகப் புலவன் வைணவனல்ல. வைணவனாக இருப்பதும் சைவனாக இருப்பதும் ஒவ்வொரு மனிதனின் தனி உரிமை. இதைக் கேட்க எவனுக்கும் அதிகாரமில்லை. எனவே, இத்தோடு நிறுத்திக்கொள்.



உன்னை நான் ஒரு மரியாதை நிமித்தம் பார்க்க வந்திருக்கிறேன். அந்த மரியாதையை மரியாதை கொடுத்து காப்பாற்றிக் கொள்.’’

‘‘இல்லையென்றால் என்ன செய்வாய் கோனேரிராயா?’’

‘‘செய்வது எதையும் நான் எவரிடமும் முன்கூட்டி சொல்வதில்லை. என்ன செய்ய வேண்டும், எப்போது செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும். நான் செயலாகத்தான் பேசுவேனே தவிர சொல்லிக் கொண்டு அலையமாட்டேன். வெறும் பேச்சுகளை உதிர்க்க மாட்டேன்.

கந்தாடை! உனக்கு மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியவில்லை. இனிமேலும் என்னெதிரே நீ உரத்த குரலில் பேசினால் நான் சும்மா இருக்கு மாட்டேன் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்.

கந்தாடையின் மடத்திலிருந்து கொள்ளிடம் போனார்கள். அங்கும் கைகால் கழுவி காவிரியைத் தொழுதார்கள். மறுபடியும் ஸ்ரீரங்கம் கோவிலுக்குள் புகுந்தார்கள். வலமாக வந்து ஈசான மூலையில் பட்டாபிராமர் சந்நிதியில் கண்மூடி அமர்ந்தார்கள். ராமர் சிலைக்கு மாலை அணிவித்தார்கள். சிறிய நவநீத விக்கிரகத்தை மடியில் வைத்துக் கொண்டு சீராட்டினார்கள். அங்கிருந்து கிளம்பி ராமானுஜரின் உருவத்தை தரிசித்துவிட்டு ஸ்ரீரங்கம் கோவில் விட்டு வெளியேறினார்கள்.

‘‘உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்.’’ பெருமாள் நாச்சி, கோனேரிராயனிடம் சொன்னாள்.

‘‘கேள் பெருமாள் நாச்சி.’’

"இன்னொரு முறை ஸ்ரீரங்கம் வரும்போது நகைகளை நான் பார்வையிட வேண்டும். மிகப் பழங்கால நகைகள் எல்லாம் இருக்கின்றனவாம். அதில் ஒரு பவழ மாலையைத் தொட்டாலே உள்ளங்கைகள் குறுகுறுக்கின்றனவாம். இந்த நகைகளை நான் பார்க்க வேண்டும். அதுவுமல்லாது இஸ்லாமியர்கள் கொள்ளையடித்து சென்றுவிட்டார்கள் என்று இந்த வைணவர்களே இந்த நகைகளைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்களாம். இந்த நகைகளை யாராவது ஒருவன் என்ன இருக்கிறது என்று பார்க்க வேண்டாம்."

"நீ சொல்வது எனக்குப் புரிகிறது. பார்க்கின்ற ஆசையை முதலில் சொல்லி பார்த்துவிட்டு போய்விடுவோம். பிறகு சோதனையிடலாம். அதற்கு இப்போது நேர மில்லை. இன்னொரு நேரம் வரும். தயவுசெய்து ஞாபகப் படுத்து."

கோனேரிராயனும் அடிக்குரலில் பேசினான். அவர்கள் சமயபுரம் திரும்பினார்கள் ஆத்தாளைக் கைகூப்பி தொழுதார்கள்.

மாளிகைக்குப் போனார்கள். பொற்றாமரைக் குளத்தில் வீசிய காற்று மாளிகைக்குள் நுழைந்து வாசத்தோடு பரவியது.

இரண்டு பெண்களும் கோனேரிராயன் அருகே அமர்ந்து கொண்டு மாறிமாறி தமிழ்ப் பாடல்கள் சொல்ல, கோனேரி ராயன் தமிழில் திளைத்துப் போனான்.

அந்த இரவு அவர்களுக்கு தூங்காத இரவாக அமைந்தது.

சோழர்குல இளவரசிகள் விரும்பி மணந்தவன் கோனேரிராயன் என்கிற செய்தி சோழ தேசம் முழுவதும் பரவியது. குடந்தையிலும் தஞ்சையிலும் மயிலாடுதுறை யிலும் நாகப்பட்டினத்திலும் மதுரையிலும் திருச்சிராப்

...லும் இதைப் பற்றி ஜனங்கள் பேச ஆரம்பித்தார்கள். "யாரது கோனேரிராயன்?'' என்று விசாரிக்க ...ம்பித்தார்கள்.

...ண்டத்திலிருந்து சிறுவயதிலேயே வந்தவனாம். ...னாம். தமிழ் மீது தீராக்காதல் கொண்டவனாம். ...ழர்கள் மீது மிகவும் விருப்பமுடையவனாம். தமிழ் மொழியில் அப்படி ஒரு புலமையாம். தமிழ்ப் புலவர் ஒருவரோடு மிக நெருக்கமான பழக்கமாம். அந்தப் புலவர் பெயர் காளமேகம் என்று ஏதோ சொல்கிறார்கள். அவர் பாட்டு அத்தனை நகைச்சுவையாம்.

சமயபுரத்திலுள்ள கோனேரிராயனின் மாளிகை முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது. காவல்கள் பலமாக்கப் பட்டன. திருச்சிராப்பள்ளிக்குச் செல்லும் சாலையில் சாலையையொட்டி பெரிய மதிற்சுவர் எழுப்பப்பட்டது சமயபுரத்துக்கு நுழையும் வாசலில் காவல் வைக்கப்பட்டது. கோனேரிராயனின் மாளிகையிலிருந்து சமயபுரம் கோவிலுக்கு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டது. கோவிலிருந்து காவல்வாய் வழியாக வெகுவிரைவாய் தஞ்சை வயல்வெளிகளில் ஆங்காங்கே தரமான குடிசைகள் அமைத்து போர்வீரர்களை கோனேரிராயன் குடியமைத் தான். பெண்டுகள் வந்துவிட்டதால் உணவுகள் ருசியாக சமைக்கப்பட்டன. பசுக்கள் வளர்க்கப்பட்டன. பூஞ்சோலைகள் பூத்துக் குலுங்கின. மாளிகை மிக சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது.

கோனேரிராயனுடைய படிக்கும் அறை மெழுகிக் கோலம் போடப்பட்டு வெளிச்சம் உள்ள இடமாய் காற்றோட்டமாய் அமைக்கபட்டது. தினம் தினம் மாளிகை

முழுவதும் சுத்தப்படுத்தப்பட்டது. குதிரைகளை சற்று தொலைவே கொண்டு போய் கட்ட உத்தரவாயிற்று. யானைகளை இன்னும் சற்று தொலைவே கட்ட கட்டளை பிறப்பித்தார்கள்.

கோனேரிராயன் இரண்டு பெண்களோடு மிக சந்தோஷமாக இல்லறம் நடத்தினான். அவன் இல்லறத்தில் நுழைந்த ஆறாவது மாதம் வடக்கே சாளுவ நரசிம்மன் இறந்துபோனான். அவன் தளபதியான நரச நாயகன் சாளுவ நரசிம்மன் முதல் மகனான திம்மப்ப நாயக்கரை அரசராக்கினான். திம்மப்ப நாயக்கனுக்கு பத்து வயதே இருந்த படியால் தானே கோதாவரி நதியையும் துங்கபத்திரா நதிக்கரை முழுவதையும் ஆட்சி செய்தான்.

திம்மப்ப நாயக்கன் குழந்தை. பேருக்கு அரசன். எந்த நேரமும் நரச நாயகன் முடி சூட்டிக் கொள்வான். சாளுவ வம்சம் முடியப் போகிறது என்று தெரிந்ததும் அதனுடைய வடக்கிலுள்ள ஒரிஸ்ஸா தேசத்து ஒட்டர்களும் கஜபதி என்கிற அரசனும் பாமினி சுல்தானும் நரச நாயக்கனை எதிர்ப்பதற்கு ஆயத்தம் செய்தார்கள். நரச நாயக்கன் இதை எதிர்ப்பார்த்தவன் போல் படைபலம் பெருக்கி நாலா திசையிலும் தானே படையெடுக்க ஆரம்பித்தான்.

பாமினி சுல்தானின் தளபதியான ஆதில்ஷாவை விரட்டி விரட்டி துரத்தினான். கஜபதியை அடக்கினான். ஒட்டர்களை ஒழித்தான். அவன் கவனம் முழுவதும் வடக்கே தன்னை யார் யார் எதிர்த்தார்கள் என்று தெரிந்து கொண்டு படையெடுப்பில் மூழ்கியிருந்தது. அந்த நேரம் சோழ தேசத்து சிற்றரசர்கள் மெல்ல மெல்ல தங்களை சுய மன்னர்களாக தீர்மானித்துக் கொண்டார்கள். பாண்டிய தேசத்திலும் சிற்றரசர்கள் சுயமானார்கள்.



கந்தாடை ராமானுஜத்துக்கும் அரசாள ஆசை வந்தது. தன்னுடைய நண்பர்களோடு கலந்து ஆலோசித்து மிகப் பெரிய படை பலம் சேர்க்க வேண்டுமென்று எண்ணி அதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டான். இதை அப்போதைய மன்னனான திருமலைராயன் விசாரித்தபோது, எந்தவித முயற்சியும் தான் செய்யவில்லை என்று உத்தரவாதம் சொன்னான். ஆனால், மறைமுகமாக யார் மூலமாகவோ கையூட்டுக் கொடுத்து திருமலையராயன் உணவில் விஷம் வைத்தான். திருமலைராயன் நோய்வாய்ப்பட்டு இறந்தான்.

திருமலைராயன் இறந்தவுடன் குதிரையேறி வாள் அணிந்து ஈட்டியை கையில் பிடித்து துறவியான கந்தாடை ராமானுஜம் திருச்சிராப்பள்ளியை நோக்கிப் போக, அங்கு கோனேரிராயன் அவனுக்காக காத்திருந்தான்.

எந்தவிதத்திலும் திருச்சிராப்பள்ளி அரியணைக்கு நீ தகுதியானவன் அல்ல. நீ துறவி என்ற ஒரே காரணத்திற்காக உன்னுடைய இந்த வேடத்தை நான் பொறுத்துக் கொள்கிறேன். உடனடியாக வாளை கீழே போடு. ஈட்டியை தூக்கி எறி. குதிரையிலிருந்து இறங்கி பல்லக்கிலோ அல்லது கால்நடையாகவோ ஸ்ரீரங்கம் போய்ச்சேர். ஸ்ரீரங்கத்திலிருந்து ஒரு அடி நீ வெளியே வைத்தாலும் நீ பிணமாவாய். இது உன்னுடைய இடமல்ல. நீ துறவி. இந்த திருச்சிராப்பள்ளி இனிமேல் என் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். இந்த திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த சோழ தேசத்துக்கு இனிமேல் கோனேரிராயனே தலைவன்.'' உரத்து சொன்னான்.

நாலா திசைகளிலும் தமிழர்கள் அவனுக்கு ஆதரவு கொடுத்தார்கள். தமிழ்ப் பெண்களை மணந்த அந்த கன்னட வீரனுக்கு வரவேற்பு அளித்தார்கள். தங்களோடு

தரையிறங்கி சகஜமாக தமிழ்ப் பேசுகிற மன்னர்களை
அவர்கள் சந்தித்து பல நூறு வருடங்களாகிவிட்டன.
தெலுங்கு மன்னர்கள் யாரும் ஜனங்களோடு பேசுவ
தில்லை. பேசினாலும் தமிழ் புரிவதில்லை. அப்படியே
அவர்களுக்கு தமிழ் புரிந்தாலும் புரியாதது போலவே போய்
விடுகிறார்கள். தமிழைப் பேச அவர்கள் கூச்சப்படுகிறார்
கள். ஆனால், கோனேரிராயன் பொது ஜனங்களோடு
உட்கார்ந்து பேசி மனைவியர்களோடு எல்லோர் இல்லத்
திற்கும் வந்து மனதைக் கொள்ளை கொண்டான். அவன்
தமிழ் மீது கொண்ட காதல் எல்லோருக்கும் பிடித்திருந்தது.
சோழ தேசம் கோனேரிராயன் தங்கள் மன்னனாக தானே
முன்வந்து அங்கீகரித்துக் கொண்டது.

எவரையும் மதியாத மன்னனாக கோனேரிராயன்
பெயர் சூட்டிக் கொண்டான். 'இந்த சோழ தேசத்துக்கு
தமிழ் தெரிந்த ஒருவன்தான் அரசனாக இருக்க முடியும்.
இனி எந்தக் காரணம் கொண்டும் தெலுங்கு தேச அரசர்
களுக்கு சோழ தேசம் கப்பம் செலுத்தாது.

தெலுங்கிலே பேச விருப்பம் உள்ளவர்கள் வீட்டிற்குள்
பேசிக் கொள்ளலாம். வெளியே தெருவில் வந்தால் தமிழ்
தான் பேசப்பட வேண்டும். எங்கு எந்த கல்வெட்டு
செதுக்கப்பட்டாலும் தமிழில்தான் செதுக்கப்பட
வேண்டும். தமிழ் புலவர்களுக்குத்தான் முன்னுரிமை
அளிக்கப்படும். அதற்குபிறகு வடமொழிக்கு அளிக்கப்
படும். அதற்கு பிறகுதான் தெலுங்குக்கு அளிக்கப்படும்.
இதற்கு மாறாக எங்கேனும் எவரேனும் நடந்தால்
சவுக்கடித்தான் அவர்களுக்கு தண்டனையாக கிடைக்கும்.

இனி தமிழ்நாட்டில் தமிழ் மொழியைப் பேசுங்கள்.
இல்லையேல், தமிழ்நாட்டை விட்டு வெளியேறுங்கள்.'
என்று கோனேரிராயன் பறையறிவித்து கட்டளையிட்டான்.



தமிழ் ஜனங்கள் ஆரவாரம் செய்தார்கள் தெலுங்கர்கள்
அடங்கிப் போனார்கள். அவர்களும் வெளியே வந்து உரக்க
தமிழ் பேச முயற்சித்தார்கள். தமிழ் கற்றுக் கொண்டார்கள்.
ஆனாலும் அங்கங்கே சில தெலுங்கு தளபதிகள், தெலுங்கு
பேசும் பிரபுக்கள் தெருவில் இறங்கி கலகம் செய்தனர்.

எங்கே கலகம் நடக்கிறதோ அங்கே விரைவாக
படைகளை அனுப்பி தேவையானால் தானே நேரே போய்
கோனேரிராயன் கலகத்தை கடுமையாக அடக்கினான்.
எவரேனும் எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்று சந்தேகம்
வந்தால் அவர்களிடம் போய் எதிர்ப்பு உண்டா என்று
நேரடியாக விசாரித்தான். அவர்கள் பேசத் தயக்கம் காட்டி
னால் உடனடியாக கைதுசெய்து சிறையில் அடைத்தான்.
அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்தான்.
தீவிரவாதியான சில இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து இரகசிய
மாய் இடம் அமைத்து தாக்குதலுக்கு திட்டமிட்டிருக்கிறார்
கள் என்று தெரிந்தது. அந்த ரகசிய இடத்தை வளைத்து அந்த
கூட்டத்தையே வெட்டிக் கூறு போட்டான்.

அவனுடைய தலைமையை ஏற்க மறுத்த புலவர்,
தெலுங்கு அந்தணர்கள், வயோதிகர்கள், பெண்களை வேறு
தேசம் போக கட்டளையிட்டான். அவர்களைத் தொந்தரவு
செய்யாது நாடு கடத்தினான். அவர்களுடைய இடத்தில்
தமிழர்களை குடி வைத்தான்.

திருமலைராயனின் சகோதரர்கள் தஞ்சையிலிருந்து
படைதிரட்டி வாள் உருவி வந்தபோது அவர்களை
திரிசிரபுரம் எல்லையிலேயே மடக்கி கைதுசெய்தான்.
தப்பிக்க முடியாதபடி சிறையில் அடைத்தான். மிகமிக
கவனமாக தன்னுடைய எதிரிகள் யாரென்று தெரிந்து
பந்தாடினான்.

"நான் மன்னனாக முடிசூட்டிக் கொள்ள வேண்டுமா' அதற்கு விழா எடுக்க வேண்டுமா... என்ன சொல்லுகிறீர்கள் காளமேகம்."

காளமேகம் யோசித்தார்.

"நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது கோனேரிராயா. இது நீயும் உன் மனைவிமாரும் தீர்மானிக்க வேண்டிய விஷயங்கள். இந்த சோழ குல இளவரசிகளுக்கும் அவ்விதம் விழா எடுக்க வேண்டுமென்று ஆவலிருக்கலாம். அவர்களை கேட்டுச் சொல்."

கோனேரிராயன் மனைவியரை அழைத்தான். முடிசூட்டு விழா வேண்டுமாவென்று கேட்டான். இருவரும் மௌனமாக இருந்தார்கள்.

"ஏன் இதுபற்றி யாரும் பேசமாட்டேன் என்கிறீர்கள்."

பெருமாள் நாச்சி மெல்ல பேசத் துவங்கினாள். "இது கலவரமான காலம். முடிசூட்டிக் கொள்ள விழா எங்கு நடந்தாலும் அங்கு ஏதேனும் ஒரு பகுதியில் நிச்சயம் பதட்டம் ஏற்படும். எதிர்ப்புக் கிளம்பும். எதிர்ப்பு இல்லாத நேரத்தில் விழா நடத்துவதுதான் நல்லது. இது நீங்கள் முடிசூட்டிக் கொள்ளும் நேரமல்ல. என்னுடைய கருத்தளவில் நீங்கள் இன்னும் தளபதிதான். அதாவது நீங்கள் மன்னராக உங்களை அறிவித்துக் கொண்டாலும் மக்கள் ஏற்றுக்கொண்டார்களா என்பது பற்றி எனக்கு சந்தேகம் இருக்கிறது. எனவே, நீங்கள் மன்னர் என்கிற விஷயத்தை தமிழ்த் தேசம் முழுவதும் பரப்பி ஒரு தளபதியாக உலா வர வேண்டும். உங்களை மன்னராக மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என பார்க்க வேண்டும். இது நீங்கள் தளபதியாக இருக்க வேண்டிய காலம். வடக்கே திருவொற்றியூரிலிருந்து தெற்கே புதுக்கோட்டை வரை நீங்கள் பயணம்



செய்ய வேண்டும். மேற்கே மதுரை நீங்கள் போய்ப் பார்க்க வேண்டும். கிழக்கே நாகப்பட்டினம் வரை மக்களை நீங்கள் நேரடியாக சந்திக்க வேண்டும். இந்தப் பயணம் முடிவதற்கு ஒரு வருட காலமாகும். இந்த ஒரு வருட காலமும் நீங்கள் மக்களை எடை போட்டு அவர்களுடைய ஆசை அபிலாஷைகளை தெரிந்து கொண்டு அதற்கேற்ப நடக்கிறபோதுதான் உங்களுக்கு கௌரவம் கூடும். ஆதரவு பெருகும். ஆதரவு பெருகிய பிறகு மன்னரானால்தான் நல்லது. அப்போதுதான் நரச நாயக்கன் இங்கு படையெடுத்து வந்தால் அவனைத் தடுத்து நிறுத்த முடியும்.

நரச நாயக்கன் மிகவும் தந்திரசாலி. அவன் முடிசூட்டிக் கொள்ளவேயில்லை. தன்னை மன்னன் என்று அழைத்துக் கொள்ளவில்லை. மன்னனாக ஒரு பதினோரு வயது பையனை உட்கார வைத்துவிட்டு ஒவ்வொரு படையெடுப்பையும் தானே நடத்திக் கொண்டிருக்கிறான். இதைப் பார்த்தாவது நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டாமா. முடிசூட்டிக் கொள்கிற நேரம் இது இல்லை என்பது என் தீர்மானம்."

காளமேகம் புலவர் எழுந்து கைகூப்பினார். "தாயே! நீ பேசுவது அகிலாண்டேஸ்வரி பேசுவது போலவே இருக்கிறது. நாவில் சரஸ்வதி குடியிருக்கிறாள். இதைவிட அழகாக நான்கூட சொல்லியிருக்க முடியாது. எல்லா விளைவுகளையும் யோசித்து இந்த சொற்பொழிவு நிகழ்த்தியிருக்கிறாய். கோனேரிராயா! இந்த உலகத்தில் நான் மிக நல்ல காரியம் செய்தது என்னவென்றால், சோழ இளவரசிக்கு உன்னைத் திருமணம் செய்து வைத்தது. உன்னைக் கணவனாக அடைந்த அவள் பாக்கியசாலி அவளை மனைவியாக அடைந்த நீ அதிர்ஷ்டசாலி! இதை செய்த

நான் மிகப் பெரிய புண்ணியசிலன். கோனேரிராயா! பெருமாள் நாச்சி சொன்னது முற்றிலும் உண்மை. நரச நாயக்கனே இன்னும் தன்னை மன்னனாக அறிவித்துக் கொள்ள முடியாதபோது நீ உன்னை எப்படி அறிவித்துக் கொள்ளலாம். இது அங்கீகரிக்கிறார்களா என்பதை பொறுத்தது. ஆனால், நரச நாயக்கன் போல் நீ தந்திரமாக நடக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் மன்னன், மதியாத மன்னன் என்று சொல்கிறாய். நான்தான் சோழ தேசத்து கோனேரிராயன் என்று சொல்.

மன்னன் என்பதற்கு மக்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம். தமிழ் பேசு, தெலுங்கு பேசு. எல்லா மொழியும் பேசு. எல்லோருக்கும் வாரிக் கொடு வள்ளலாக இரு. பிரச்சினைகளை தீர்த்து வை. அப்போது மக்கள் உன்னை நெருங்கி வருவார்கள். மக்கள் நெருங்கி வந்து விட்டால் படைவீரர்கள் உன்னை ஆதரிப்பார்கள். தளபதிகள் உன் பக்கம் நிற்பார்கள். எனவே, மக்களோடு கலந்து பழகுவதில்தான் உன்னுடைய வெற்றியிருக்கிறது. நீ நல்ல நாள் பார்த்து வடக்கே கிளம்பு. நீ மட்டும் போக வேண்டாம். ஏனெனில், இது படையெப்பு அல்ல. இது ஒரு திக் விஜயம். எனவே, போகும்போது உன் இரண்டு மனைவியரையும் அழைத்துப் போ. அது உனக்கு உதவும் என்று நினைக்கிறேன்.''

''என் மனைவியர் மட்டும் வந்தால் போதாது. நீயும் சித்ராங்கியும் வர வேண்டும். ரோஹிணி வந்தாலும் எனக்கு சந்தோஷம்!'' கோனேரிராயன், காளமேகப் புலவரை வரும்படி வற்புறுத்தினான்.

பெரிய யானைக் கூட்டத்தோடு நல்ல குதிரைகள் மீது அமர்ந்து சமயபுரத்தை விட்டு அவர்கள் வடக்கு நோக்கி பயணப்பட்டார்கள். காஞ்சிபுரத்திற்கு போய் இறங்கினார்



கள். அற்புதமான அந்த நகரத்தை சுற்றிச் சுற்றிப் பார்த்து வியந்தார்கள்.

''கோனேரிராயா! உன்னோடு வரும்போது எனக்கு கிடைக்கிற மரியாதையே தனி. ஆனால், அது எனக்கு விருப்பமில்லை. நான் காளமேகம் என்பது வடக்கே உள்ள நிறைய பேருக்கு தெரியவில்லை. அதனால் உன்னுடைய மந்திரியோ அல்லது வேறு ஏதேனும் நிர்வாகியோ என்று மக்கள் என்னிடம் பேச பயப்படுகிறார்கள். நான் உன்னோடு வருவதைக் காட்டிலும் உனக்கு முன்பு ஒரு புலவனாக போவது நல்லது என்று நினைக்கிறேன். எனக்கு குதிரையைக் காட்டிலும் பல்லக்கு வசதியென்று நினைக்கிறேன். ஒரு பல்லக்கில் நான் சித்ராங்கி, ரோஹிணி மூன்று பேருமே ஏறிக் கொள்கிறோம்.

எங்களுக்கு தகுந்த ஆட்களும் பாதுகாப்பும் கொடு, போதும். நான் வசதிமிக்க புலவனாக ஒவ்வொரு ஊராக பார்த்துக் கொண்டு வருகிறேன். உன்னைப் பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்று தெரிந்துகொள்கிறேன். சில ஓலைக் குறிப்புகளை தகுந்த நபர்களிடம் விட்டுவிட்டுப் போகிறேன் அதைப் படித்துவிட்டு அதற்கேற்றபடி இரு. நான் வருகிறேன். எங்கேனும் சந்தித்து விரிவாக பேசுவோம்.''

அவர்கள் திட்டம் வகுத்தார்கள் காளமேகம் சித்ராங்கியுடன், ரோஹிணியுடன் காஞ்சி மாநகர் விட்டு திருவான்மியூருக்கு நகர்ந்தார்.

திருவான்மியூரில் இளைஞர்கள் காளமேகத்தை சூழ்ந்து கொண்டார்கள். ''உங்களைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். திரிசிரபுரத்தில் இருந்து வந்தவர்கள் உங்கள் பாடல்களை தொகுத்து கொடுத்திருக்கிறார்கள்.

நாங்கள் பிரதியெடுக்கிறோம். எங்கள் ஊருக்கு வரவேண்டும். இளைஞர்களாகிய நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று சொல்லித்தர வேண்டும்'' என்று கை கூப்பினார்கள்.

காளமேகப் புலவர் அங்கு தங்கினார். உங்களுக்கு ஒரு பாடல் எழுதித் தருகிறேன் என்று சம்மதித்தார்.

பண்புளருக்கு ஓர் பறவை பாவத்திற்கு ஓர் இலக்கம்
நண்பிலரைக் கண்டக்கால் நாற்காலி திண்புவியை
ஆள்வார் மதுரை அழகிய சொக்கர்க்கு அரவம்
நீள்வர கனம் நல்நிலம் தின்ஸாதியை ஆகினார்.

முதலிய அழகிய சொற்களுக்கு அரவம் நீள் வாகனம் நன்நிலம்... மாணவர்கள் புரியமால் விழித்தார்கள்.

"பண்புள்ளவருக்கு ஒரு பறவை. அதாவது, நல்ல குணம் உடையவர்களுக்கு ஈ என்பது ஒரு பறவை. பாவத்திற்கு ஒரு இலக்கம். என்ன இலக்கம். அஞ்சு, பாவத்திற்கு பயப்படு, நட்பு இல்லாதாரைக் கண்டால், விலங்கு, அதாவது விலகு. விளக்கிற்கு அரசாகிய மதுரையிலிருக்கும் அழகிய சொக்கநாத பெருமாளுக்கு நீண்ட அரவம் வாகனம்.

நல்நிலம். அதாவது, நீண்ட நிலைத்த அரவமென்றால் பணி. வாகனம் என்பது விடை, நீடித்து பணிவிடை செய் நன்நிலமென்றால் செய், நன் செய். ஆகவே சொக்கநாத பெருமானுக்கு நிலைத்த நீண்ட பணிவிடை செய் என்று சொன்னார்.''

நாலு வரியில் யோசிப்பதற்கு ஏகப்பட்ட விஷயங்கள் வைத்ததைக் கண்டு தமிழ் மாணவர்கள் சந்தோஷம் கொண்டார்கள். அவரோடு மயிலை, திருவொற்றியூரெல்லாம் சுற்றினார்கள். ஊர் பற்றி விவரித்தார்கள். தான் அறிந்த செய்தியெல்லாம் ஒலை மூலம் தனக்குப் பின்னே



வரும் கோனேரிராயனுக்கு காளமேகப் புலவர் விவரமாக எழுதினார்.

"காளமேகப் புலவரே! நீங்கள் உபதேசமான ஒரு பாட்டை மட்டும் சொல்லி நகர்ந்து வீட்டீர்களே! நீங்கள் சிலேடைக்குப் பெயர் பெற்றவர் அல்லவா! உங்கள் சிலேடையைக் கேட்க விரும்புகிறோம். ஏதேனும் புதிதாய் ஒரு சிலேடை பாடல் பாடுங்கள்.'' மயிலையிலுள்ள தமிழ் மாணவர்கள் கேட்டார்கள்.

காளமேகப் புலவர் ஒலையில் எழுத்தாணியால் எழுதினார். ஆடிக்குடத்து அடையும் ஆடும்போதே இறையும் மூடித் திறக்கின் முகம் காட்டும். ஓடி மண்டை பற்றில் பரபர எனும் பாரில் பிண்ணாக்கும் உண்டாம் உற்றிடும் பாம்பு எள் எனவே ஒரு பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடையாகப் பாடினார்.

பாம்பானது படமெடுத்து ஆடி குடத்தில் வந்து சேரும். அவ்வாறு ஆடும்போதே புஸ்புஸ் என்று இரைச்சலிடும். குடத்தில் போட்டு மூடிய பிற்பாடு திறந்து பார்த்தால் தன் தலையை வெளியே நீட்டிக் காட்டும். அது கடித்தவுடனே நஞ்சானது மண்டையைப் பற்றினால் பரபரவென்று அரிப்பு உண்டாகும். அதற்கு பிளவுபட்ட நாக்கும் உண்டு. அதே போல் எள்ளானது செக்கிலிட்டு ஆட்டப்பட்டு அதிலிருந்து கிடைத்த எண்ணெய் குடத்திலிட்டு அடைக்கப்படும். செக்ககை ஆட்டும்போது இரைச்சலை உண்டாக்கும். குடத்தில் ஊற்றி மூடிவிட்டு நுரை அடங்கி தெளிந்த பிற்பாடு பார்த்தல் பார்ப்போருடைய முகம் அதில் தெளிவாகத் தெரியும். தலையில் ஊற்றி தேய்த்துப் பார்த்தால் பரபரவென்று ஊறலெடுக்கும். எள்ளிடத்தில் பிண்ணாக்கும் உண்டாம் என்று எள்ளுக்கும் பாம்புக்கும் சிலேடை சொன்னார்.

காளமேகப் புலவரின் ஒவ்வொரு அசைவும் சித்ராங்கிக்கு மிகப் பெரிய கிறக்கத்தைக் கொடுத்தது.

"நீங்கள் காவியம் எழுத வேண்டாமா? கம்பனைப் போல ஒரு முழு நீள எழுத்துப் பணி செய்ய வேண்டாமா? நல்ல இதிகாசங்களை தமிழில் சிறப்பாக எழுத வேண்டாமா?'' என்று கேட்டாள்.

"என்னால் காவியம் எழுத முடியும் என்று தோன்றவில்லை. நான் என் மனதை அரசியலில் செலுத்தி விட்டேன். கவிஞன் என்று சொல்லிக் கொள்வதற்காக வெண்பாக்களை இயற்றிக் கொண்டிருக்கிறேன். ஒரு காவியம் செய்யக்கூடிய அளவுக்கு இப்போது தமிழ்த் தேசத்தில் சூழ்நிலையும் இல்லை. அதை எனக்குச் செய்கிற மனப்பக்குவமும் இல்லை. எந்த நேரம், என்னவிதமான அரசியல் மாற்றங்கள் இருக்குமோ என்கிற பயம்தான் என்னைப் பற்றிக் கொண்டிருக்கிறது. இஸ்லாமியர்கள் உள்ளே நுழைந்து இந்து மதம் முற்றிலும் சிதைந்துவிடுமோ என்ற கவலையிருக்கிறது. இந்த நேரத்தில் காவியங்கள் எழுதிக் கொண்டிருப்பதைவிட அந்நியர்கள் உள்ளே வராதபடி அரசர்களை பலப்படுத்துவதுதான் ஒரு கவிஞரின் வேலை என்றுதான் தோன்றுகிறது.

நானும் கோனேரிராயனும் சந்தோஷமாகப் பயணப்பட்டு வடக்கே வந்துவிட்டோம். திருச்சிராப்பள்ளியில் என்ன நடக்கிறது என்று யாருக்குத் தெரியும். இராமராயன் போன்ற அந்த அயோக்கிய திறன்கள் எது செய்வதற்கும் துணிந்தவர்கள். கோனேரிராயன் அங்கு இல்லாத நேரத்தில் இராமராயன் ஏதேனும் திட்டங்கள் தீட்டி அரசைக் கைப்பற்றுவதற்கு நிச்சயம் முயற்சி செய்வான். அதுபற்றிய கவலையே இடைவிடாது என் மனதில் இருக்கிறபோது நான் எப்படி காவியம் எழுதுவேன். மகாபாரதம் எழுத



வேண்டும் என்று எனக்கு ஆவல். அதை எப்படிச் செய்வது என்பது பற்றிக்கூட ஒரு திட்டம் இருக்கிறது. ஆனால் சித்ராங்கி, அகிலாண்டேஸ்வரி அந்தக் கட்டளையை தரவில்லை என்று நினைக்கிறேன்.'

"நீங்கள் சொல்வது சரியல்ல. நீங்கள் பழியை அகிலாண்டேஸ்வரி மீது போடுகிறீர்கள். நீங்கள் சொல்வது தவறு. அரசியலில் ஈடுபட வேண்டிய அவசியம் புலவர்களுக்கு உண்டு. ஒரு மிக நல்ல அரசனை இங்கு கொண்டு நிறுத்திவிட்டீர்கள். திருமலைராயரைவிட இராமராயரை விட மிகச் சிறந்த தெளிவான, மக்கள் ஆதரிக்கின்ற கோனேரிராயனை தூக்கி நிறுத்திவிட்டீர்கள். இனி அரசு நடத்துவது கோனேரிராயன் விஷயம் என்று சொல்லிவிட்டு நீங்கள் எங்கேனும் உட்கார்ந்து காவியம் செய்யலாம் அல்லவா? கோனேரிராயன் அருகில் இருந்தால்தானே உங்களுக்கு எண்ணங்கள் சிதறுகின்றன. காஞ்சியில் இருந்து கொண்டு நீங்கள் மகாபாரதம் எழுதலாம் அல்லவா? ஒரு புலவர் முழு நீள எழுத்துப்பணி செய்யாமல், காவியம் சமைக்காமல் துண்டு துண்டாய் சிலேடையாகவும் நகைச்சுவையாகவும் பாட்டு எழுதிக் கொண்டிருந்தால் யாருக்கு லாபம்? இதற்காகவா அகிலாண்டேஸ்வரி உங்களுக்கு இவ்வளவு சக்தியை கொடுத்தாள்.''

சித்ராங்கி கவலையோடு பேசினாள்.

"உண்மையில் நீ சொல்வது தவறு சித்ராங்கி! கோனேரிராயனை தூக்கி நிறுத்திவிட்டால் போதுமா? அவனைச் சுற்றி ஒரு பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்த வேண்டாமா. கோனேரிராயன் பலமாக நிற்கிறவரை எனக்கு அரசியல் வேலைகள் இருக்கிறது என்று நினைக்கிறேன். கோனேரிராயனை வடக்கே பயணப்பட சொல்லிவிட்டு நான்

திருவானைக்காவலில் உட்கார்ந்திருந்தால் அல்லது கால் நீட்டிப்படுத்திருந்தால் நல்லதல்ல.

கோனேரிராயனுக்குப் பேசுவதற்கு ஆள் வேண்டாமா? அவனுக்கு ஒரு நல்ல மந்திரி வேண்டாமா? அடுத்து என்ன செய்ய வேண்டுமென்று அவன் சிந்திப்பதற்கு இணையாக வேறொருவர் சிந்திக்க வேண்டாமா? ராயன் மட்டும் தனியாக இருக்கிறான். அங்கே நான் இல்லாது முடியுமா.''

''அவருக்குத்தான் மிக அழகாய், கெட்டிக்காரிகளாய் இரண்டு பெண்களைப் பரிசளித்து விட்டீர்களே.''

''போதவில்லை சித்ராங்கி! அந்த பெண்கள் தமிழிலும் மதத்திலும் ஈடுபடத் துவங்கி விட்டார்கள். அரசியலுக்கு உண்டான சூழ்ச்சித் திறன் அந்த பெண்களிடம் இல்லை. சூழ்ச்சியோடு கூடிய பெண்கள்தான் அரசியலுக்கு லாயக்கு. கோனேரிராயனுக்கு சூழ்ச்சி சொல்லிக் கொடுக்க ஒரு துணை தேவைப்படுகிறது. என் புத்தியெல்லாம் அரசியல் சூழ்ச்சியில் போகின்றவே ஒழிய காவியத்தில் ஈடுபடவில்லை. இந்த ஜென்மத்தில், இந்த பிறப்பில் நான் காவியம் எழுதுவேன் என்று எனக்கு தோன்றவில்லை. வேண்டுமென்றால் திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரியைப் பற்றி ஒரு சிறிய உலா பாடலாம். மற்றபடிக்கு மகாபாரதம் எழுதுவதோ இன்னொரு இராமாயணம் எழுதுவதோ அல்லது முருகப்பெருமானின் சிறப்புகளை கூறுவதோ என்னால் முடியுமா என்று தெரியவில்லை. புத்தி சிலேடைக்கும், சிரிப்புக்குமே போய்விட்டது. காவியம் எழுதுகிற அமைதி என்னிடம் இல்லை. என்னை மன்னித்துக் கொள் சித்ராங்கி.''

''நீங்கள் சொல்வது போல் தமிழ் தேசத்தின் நிலைமை அத்தனை மோசமாகவா இருக்கிறது. சோழ மண்டலம்



உள்நாட்டுப் போரை மறுபடியும் எதிர்கொள்ள வேண்டிய அவசியம் உண்டா?''

''நிச்சயம் உண்டு. ராமராயன் என்கிற கந்தாடை ராமானுஜம் இன்னும் ஒரு மாத காலத்தில் ஏதேனும் ஒரு கலவரம் செய்யத்தான் போகிறான். இது எனக்கு வந்த தகவல்.''

''வேறு என்னென்ன தகவல்கள் வந்தன?''

''கந்தாடை இராமனுஜம் திருவானைக்காவல் வந்திருக்கிறான். நம் வீட்டை எட்டிப் பார்த்திருக்கிறான். திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரியின் நகைகள் என்னன்ன என்று பட்டியலெடுக்க சொல்லியிருக்கிறான். முக்கியமான நகைகளை கோயிலுக்கு வெளியே கொண்டு வர சொல்லி பார்த்திருக்கிறான். அவன் வைணவன் அல்லவா? சிவன் கோவிலுக்குள்ளே போகமாட்டானாம். அதனால் கோவில் நகைகள் வெளியே கந்தாடை ராமானுஜம் பார்க்க வந்திருக்கின்றன. அதுமட்டுமில்லை. சமயபுரத்துக்குப் போயிருக்கிறான். நல்லவேளை நகைகள் கேட்கவில்லை. அங்கே கோனேரிராயன் அரண்மனையை சுற்றி பார்த்திருக்கிறான். சமயபுரம் கண்ணனூர் முழுவதும் யார் யார் எங்கெங்கு இருக்கிறார்கள் என்று விசாரித்திருக்கிறார்கள். தானே நேரடியாக ஒரு படையெடுப்புக்கு தீர்மானம் செய்கிறான் என்று தோன்றுகிறது.''

''இனி என்ன நடக்கும்?''

''கோனேரிராயனுக்கும் இந்த செய்திகள் போயிருக்கும். கோனேரிராயன் என்ன திட்டங்கள் வைத்திருக்கிறான் என்று தெரியவில்லை. வழியில் எங்கேனும் சந்தித்து அவனிடம் இதுபற்றி பேச வேண்டும். நான் கோனேரிராயனுக்கு செய்தி அனுப்பியிருக்கிறேன். இந்த வேலைகளுக்

இடையே சித்ராங்கி நான் என்ன காவியம், எப்படி எழுதுவேன்.”

சித்ராங்கி தலைகுனிந்து கொண்டாள்.

## 3

கந்தாடை இராமானுஜம் காவி கோவணத்துடன் கொள்ளிடம் ஆற்றில் இறங்கினான். அவனுக்கு பின்னே வாட்களோடும் உடம்பில் பன்னிரண்டு திருமண்களோடும் அவன் சீடர்கள் நின்றிருந்தார்கள். தெளிந்த கொள்ளிடத்து நீரில் இறங்கி உட்கார்ந்து கொண்டான். கழுத்துவரை சலசலவென்று கொள்ளிடத்து ஜலம் நகர்ந்து கொண்டிருந்தது. அந்த காலை வேளையில் சில்லென்று காற்று அடித்துக் கொண்டிருந்தது. எதிர் கரையில் நாற்பது ஐம்பது யானைகள் குளித்துக் கொண்டிருந்தன. யானைப் பாகர்கள் உரத்த குரலில் சப்தமிட்டு அவைகளுக்கு தேங்காய் மட்டையால் முதுகு தேய்த்துக் கொண்டிருந்தார்கள். முழங்கால் அளவே உள்ள நீரில் யானைகள் படுத்துப் புரண்டு, ஜலம் பீய்ச்சி மேலே அடித்துக் கொண்டு ஆனந்தமாய் குளித்துக் கொண்டிருந்தன. கழுத்தளவு நீரில் நின்றபடியே கந்தாடை இராமானுஜம் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“கோனேரிராயனுடைய யானைகள் அல்லவா அவை.”

“ஆமாம்மய்யா.”

“உண்மை ஐயா!”

“கோனேரியினுடைய பலமே யானைப் படைதானே?”

“இவ்வளவு யானைகளுக்கு தீனி போட அவனுக்கு எங்கிருந்து வருமானம் வருகிறது?”



“மக்களே முன்வந்து வரியைச் செலுத்துகிறார்கள் ஐயா. ஜமீன்தார்கள், சிறு மன்னர்கள் கோனேரிராயனைக் கொண்டாடுகிறார்கள். மேலும் கோனேரிராயன் வந்ததிலிருந்து பஞ்சமேயில்லை. மழை நன்கு பெய்கிறது விளைச்சல் நன்கு இருக்கிறது. இந்த வருடம் முழுவதும் சரியான அறுவடை என்று பேசிக் கொள்கிறார்கள்.”

கந்தாடை ராமானுஜம் கண்கள் முழுக்க ஆத்திரமாகியது. அந்த யானைகளைப் பார்த்தான். எழுந்து மண் மேட்டில் உட்கார்ந்து கொண்டான். ஒரு சீடர் அவனுக்கு முதுகு தேய்க்க ஆரம்பித்தான்.

என்னுடைய துரதிருஷ்டத்தைப் பார். தன்னை இங்கு மன்னனாக சொல்லிக் கொண்டவன் தலைநகரத்தில் இல்லை. அதன் படைகள் திசைக்கு ஒன்றாக அலைந்து திரிகின்றன. நான் இந்த ஸ்ரீரங்கத்தில் இருக்கிறேன். எனக்கு ஒரு சிறுபடை கொடுத்து அனுப்பு என்று நரச நாயக்கனுக்கு மூன்று முறை ஓலை அனுப்பிவிட்டேன். பதிலேதுமில்லை. ஓலை கொண்டு சென்றவனும் திரும்பி வரவில்லை. நரச நாயக்கன் உடன் பிறந்தவனாக இருந்தாலும் எனக்கு ஏன் உதவ மறுக்கிறான் என்று தெரியவில்லை.”

“ஐயா! நீங்கள் வேறொரு தந்திரம் செய்ய வேண்டும்.”

“என்ன?”

“நரச நாயக்கனுக்கு நான்காவது முறையாக ஓலை கொடுத்து அனுப்புங்கள். ஓலை கொடுப்பவருக்கு துணையாக சற்று தள்ளி மூன்று நான்கு பேரை அனுப்புங்கள். அங்கு என்ன நடக்கிறது என்பதை ஓலை கொடுப்பவர் வந்து சொல்லுவார்கள் அல்லவா! ஓலை சென்று கொண்டு வந்தோருக்கு ஒற்றர்கள் அனுப்புவது நல்லதல்லவா.”

"கந்தாடை ராமானுஜம் யோசித்தார். இன்றே அதை செயல்படுத்தலாம். நரசநாயக்கனிடம் எப்படியாவது படைகள் அனுப்பு என்று கெஞ்சி கடிதம் எழுதுவேன். எதற்கு என்று கேட்டால் ஸ்ரீரங்கம் மிக மோசமான நிலையிலே இருக்கிறது. ஸ்ரீரங்கத்து நகைகள் பாதுகாப்பான நிலையில் இல்லை. சைவர்கள், வைணவர்களைத் துன்புறுத்துகிறார்கள் என்று பேசுவேன். அப்பொழுதுதான் நரச நாயக்கன் ஏதேனும் செய்வான். இல்லையெனில், நான் ஆட்சிக்கு ஆசைப்படுகிறேன் என்று சொல்லி படைகள் அனுப்பமாட்டான்."

"ஐயா! இன்னொரு யோசனை. நீங்கள் சொல்வதிலிருந்துதான் இதை யோசனை செய்தேன். உண்மையிலேயே ஸ்ரீரங்கத்து வைணவர்களை திருவானைக் காவல் சைவர்கள் துன்புறுத்தினால் நன்றாக இராதா."

"என்ன சொல்லுகிறாய்?"

"ஸ்ரீரங்கத்தின் நகைகள் காணோம் என்று சைவர்கள் மீது பழிபோட்டால் என்ன."

"இதுவும் நன்றாக இருக்கிறதே. ஆனால், திருவானைக் காவல் சைவர்கள் ஸ்ரீரங்கத்திற்குள் எப்படி வருவார்கள்?"

"நாலைந்து சைவர்களை கட்டிப் பிடித்து வருவது. இரவோடு இரவாக ஸ்ரீரங்கத்து கோவிலுக்குள் நுழைய விடுவது. நகைகளை நாம் எடுத்துக் கொள்வது. சைவர்களை காட்டுவது."

"நல்லது இது. இன்னும் கவனமாகச் செய்ய வேண்டும். நான் செய்கிறேன் இதை, இத்தோடு மறந்து விடுங்கள்."

தனக்கு யோசனை செய்த சீடர்களுக்கு அந்த இடத்திலேயே கந்தாடை இராமானுஜம் பிடிப்பிடியாய்



பொற்காசுகள் கொடுத்தான். கரையேறினான். எக்காளம் முழங்க, யானை முன்னே செல்ல, கொடியும் பதாகையும் உடன் வர, சீடர்கள் புடைசூழ ஜெயவிஜயீ பவ என்று கட்டியக்காரர்கள் கட்டியம்கூட்ட, கொள்ளிடத்தில் இருந்து ஸ்ரீரங்கம் கட்டைக் கோபுரம் வழியாக தாயார் சந்நிதிக்குள் நுழைந்தான். கோபுரத்தை தாண்டி கந்தாடை இராமானுஜம் நுழையும்போது அவன் உச்சந்தலையில் புறா எச்சமிட்டது. கோபமாய் திரும்பினான். கோபுரத்திலுள்ள சில பொம்மைகளைக் கண்டதும் அவனுக்கு புதிதாய் ஒரு எண்ணம் உதித்தது. அந்தக் கோபுரத்தில் மட்டையடி உற்சவம் குறித்த பொம்மைகள் இருந்தன. கந்தாடை இராமானுஜத்துக்குள் ஒரு அழகான திட்டம் விரிந்தது. ஒவ்வொரு பங்குனி உத்திரத்தின்போது பிரயணகலகம் என்கிற அந்த உற்சவம் ஸ்ரீரங்கம் தாயார் சந்நிதியில் நடைபெறும்.

அன்புச்சண்டை என்று அதற்கு அர்த்தம். ரங்கநாதருக்கும் ரங்கநாயகிக்கும் இடையே நடக்கின்ற ஊடலாக, கணவன் மனைவி சண்டையாக அந்த உற்சவம் நடைபெறும். ரங்கநாதர் பங்குனி உத்திரத்திற்கு இரண்டு நாள் முன் உறையூருக்குப் போய் விடுவார். உறையூரில் சோழனுடைய மகளான கமலவல்லி நாச்சியுடன் சந்தோஷமாக இருந்துவிட்டு ரங்கநாத பெருமான் ஸ்ரீரங்கம் திரும்பி ரங்கநாயகி என்கிற தாயார் சந்நிதிக்கு வரும்போது அந்தக் கதவுகள் தடேர் தடேர் என்று மூடிக் கொள்ளும்.

ரங்கநாதரை பூ பந்துகளாலும், தயிர், வாழைப்பழம், பால் கலந்த கலவையாலும் அடித்து போ போவென்று தாயாரின் பக்த கோடிகள் துரத்துவார்கள். ரங்கநாதர் பின்னடைவார். ரங்கநாதருக்காக ஒரு அரையர் முன்வந்து 'என்றுமில்லாத படி இப்படி பூ பந்துகளாலும் வாழைப்பழ

தயிர், பால் கலவைகளாலும் வீசியெறிந்து என்னை அவமானப்படுத்து வது ஏன்? நான் என்ன தவறு செய்தேன்?' என்று கேட்பார்.

''உங்கள் கண்களெல்லாம் ஏன் சிவந்திருக்கின்றன. தலைமுடி ஏன் கலைந்திருக்கிறது, திருமண் காப்பெல்லாம் கலைந்திருப்பது ஏன்? நீங்கள் ஏன் வெளுத்திருக்கிறீர்கள். உங்கள் கழுத்தெல்லாம் ஏன் நகசின்னங்களாக இருக்கின்றன, உங்கள் மேனிகளெல்லாம் ஏன் குங்குமப் பொடிகளாக இருக்கின்றன, ஏன் பரிவட்டம் மஞ்சள் நிறமாக இருக்கிறது, ஏன் உங்களுடைய உள்ளங்கால்கள் மருதாணியிட்டது போல சிவந்திருக்கின்றன?'' என்று ரங்கநாச்சியார் கேட்பார்.

தாயாருக்கு பண்டாரி என்பவர்கள் அரையர்களை நோக்கி கேட்பார்கள். அதற்கு ரங்கநாதரின் சார்பாக அந்த அரையர்கள் பதில் சொல்வார்கள்.

''கண்கள் சிவந்திருக்க காரணம், இரவெல்லாம் குதிரை மீது நித்திரையின்றி ஊர் வந்ததால். காற்றினால் கேசம் கலைந்து போயிற்று. சூர்ய வெப்பத்தால் திருமண் காப்பு கரைந்து போயிற்று. அசுரர்களோடு போர் செய்ததால் உடம்பு வெளுத்து போயிற்று. காடுகள் வழியே போன போது பூச்செடிகள் கிழித்து கீறல்கள் ஏற்பட்டு விட்டன. தேவர்கள் பூக்களை வர்ஷிப்பதால் அதன் மகரந்த பொடிகள் மேலே படர்ந்து குங்கும பொடிகளாயிற்று. பீதாம்பரத்தின் நிழல்கள் மஞ்சளாக இருக்கிறது. அதற்கு நான் என்ன செய்வது. குதிரையின் அங்கவடியில் கால் வைத்து வந்து நெடுந்தூரம் வந்ததால் உள்பாதம் சிவந்து போயிருக்கிறதே தவிர இதற்கு என் பிழை என்ன?'' என்று ரங்கநாதர் கேட்பார்.



அதற்கு பிறகு ரங்கநாச்சியார் கணையாழி எங்கே என்று கேட்க, அதற்கும் ஏதோ ஒரு பதில் ரங்கநாதர் சொல்ல, ஊடல் தொடர்ந்து மறுபடியும் பந்து எறிதலும் வாழைப் பழ, பால், தயிர் கலவையடித்தலும் நடக்கும்.

பிறகு நம்மாழ்வார் வந்து இருவருக்கும் சமாதானம் செய்து வைத்து அரங்கரை தாயார் சந்நிதிக்கு அழைத்து போய் வெந்நீரில் குளிப்பாட்டுவார்கள். இதற்கு பெரும் ஜனக்கூட்டம் திரளும்.

கந்தாடை ராமானுஜம் இன்னும் ஒரு வாரத்தில் வரவிருக்கிற இந்த விழாவில் கலகம் செய்ய விரும்பினான். தாசிகளை அழைத்துத் திருவானைக்காவல் சைவர்களை இந்த மட்டையடி உற்சவம் பார்ப்பதற்காக அழைத்து வரச் சொன்னான். இப்பொழுதே போய் சிநேகமாய் பேசி மட்டையடி உற்சவம் பற்றி விவரித்து, மிக நன்றாக இருக்கும் என்றெல்லாம் சொல்லி அங்கு எப்படியாவது கூட்டி வந்து விடுங்கள் என்று காசு கொடுத்தான். அவர்கள் அவ்விதமே சரியென்று சொல்லிவிட்டுப் போனார்கள். ஸ்ரீரங்கத்து தாசிகள் திருவானைக்காவல் சைவர்களோடு பேசி சிரித்து சிநேகம் ஆனார்கள்.

காளமேகப் புலவர் காஞ்சி வழியாக திருவண்ணாமலைக்கு வந்து திருவண்ணாமலை வழியாக சீர்காழிக்கு வந்து, சீர்காழி வழியாக குடந்தைக்கு வந்து, குடந்தை வழியாக தஞ்சாவூருக்கு வந்து, தஞ்சாவூர் வழியாக திருச்சிராப்பள்ளிக்கு வந்தார்.

பங்குனி மாசம் பிறந்தது. ஸ்ரீரங்கத்து தாசிகள் திருவானைக்காவல் வந்து போகிறார்களா. இது வினோதமாக அல்லவா இருக்கிறது. இங்கு அவர்கள் எதற்கு வரவேண்டும். யாரை பார்க்க வருகிறார்கள். விவரம் சேகரித்

தார். யோசித்தார். கோனேரிராயனுடைய படைவீரர்களில் முக்கியமானவர்களைச் சந்தித்து ஸ்ரீரங்கத்தில் என்ன நடக்கிறது என்று விசாரித்து வர அனுப்பினார்.

கந்தாடை ராமானுஜம் நான்காவது முறையாக தன்னுடைய சகோதரன் நரச நாயக்கனுக்கு உதவி கேட்டு ஓலை அனுப்பியது தெரிய வந்திருக்கிறது. அந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது என்ற விவரமும் கிடைத்தது. 'இங்கே கோனேரிராயன் என்பவன் செய்கிற அட்டூழியங்கள் தாங்க முடியவில்லை. வைணவர்கள் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீரங்கம் சுத்தமாக சூரையாடப்பட்டுவிட்டது. எனவே, உடனே உதவிக்கு வரவும்' என்று ஓலையில் எழுதப்பட்டிருந்ததாய் காளமேகப் புலவருக்கு தெரியவந்தது. அவர் கையோடு சிறு படையை அனுப்பி கோனேரிராயனை திருச்சிராப்பள்ளி விரைந்து வருவதற்கு சொல்லியனுப்பினார்.

காளமேகப் புலவரும் சித்ராங்கியும், ரோஹிணியும் மட்டையடி உற்சவத்திற்கு சிறு தேரில் பயணமானார்கள். ஸ்ரீரங்கத்தில் நான்முக வாயிலில் தேரை நிறுத்திவிட்டு உள்ளே போனார்கள். மண்டபங்களையெல்லாம் தாண்டி தாயார் சந்நிதிக்கு போய் ஓர் ஓரமாய் காத்திருந்தார்கள்

''சித்ராங்கி! கம்பராமாயணம் படித்தது ஞாபகம் இருக்கிறதா?''

''எப்படி மறக்க முடியும்? என்ன அதற்கு?'' சித்ராங்கி கேட்டாள்.

''அந்தக் கம்பராமாயணம் அரங்கேறிய இடம் இந்த மண்டபம்தான். இங்கேதான் அந்தணர்களை கூட்டி, பெரிய சபையை அழைத்து தன்னுடைய காவியத்தை கம்பர் அரங்கேற்றியிருக்கிறார். இந்த மண்டபத்தில் மிக அழகான



நரசிம்மம் ஒன்று இருக்கிறது. இங்கே வா, இந்தத் தூணை பார்த்தாயா? இந்தத் தூண் மேல் தலைக்குமேல் நிற்கின்ற நரசிம்மர் பார். அந்த நரசிம்மர் விரலை பிடித்துக் கொண்டு இருப்பது பிரகலாதன். நரசிம்மர் எவ்வளவு உயரமாக நிற்கிறார் என்பதை பார். அவருடைய சாந்தம் உடம்பில் இருக்கிறது. முகம் மட்டும் சிங்கரூபமாக இருக்கிறது. இப்படி ஒரு சிங்கம் வேறு எங்கேனும் பார்த்திருக்கிறாயா சித்ராங்கி. ஸ்ரீரங்கம் ஒரு அற்புதமான இடம். இங்கே மூன்று முழ ஆழத்தில் நீர் கிடைக்கிறது. எந்த இடத்தைத் தோண்டினாலும் ஊற்றாக நீர் பெருகுகிறது. பள்ளி கொண்ட பெருமான் மேடை மீதோ மண் மீதோ இல்லை, நீர் மீதுதான் இருக்கிறான் என்பதற்கு இந்த ஸ்ரீரங்கம் சாட்சி! ரோஹிணி! பரவாசு தேவரை தரிசித்து இருக்கிறாயா? பார்த்திருக்கிறாயா? அதாவது, விமான ரங்கநாதர். மிக அழகான சிலை சிற்பம் அது. முழுவதும் தங்க கவசத்தால் மூடப்பட்டு மிக அற்புதமாக ஜொலிக்கும். பூக்கள் அன்னம் யாளி கொடியென்று ஒரு சரியான வரிசை அவரைச் சுற்றியிருக்கும். நான்கு யுகங்களில் நான் அவதரித்து தலைமை தாங்குவேன் என்பது போல நான்கு கோபுர கலசங்கள் இருக்கும். நூல் பிடித்தாற்போல தெற்கேயிருந்து வடக்கே வரை கோபுரங்களின் அணிவகுப்பு பார்ப்பதற்கு பரவசமூட்டும்.

ஸ்ரீரங்கம் தமிழர் நாகரீகம். வாஸ்து சாஸ்திரப்படி ஸ்ரீரங்கம் சிறிதும் பிசிறில்லாத ஒரு கட்டிட அமைப்பு. இதில் ஒவ்வொரு செங்கல்லும் சாஸ்திரங்களுக்கு உள்ளடக்கியே செய்யப்பட்டது. அதனால்தான் ஸ்ரீரங்கம் எல்லா காலகட்டங்களிலும் சிறப்பாக இருக்கிறது.

வைஷ்ணவம், சைவம் என்று இந்துக்கள் பேதம் பார்க்கிறார்கள். உள் சுற்றில் விநாயகர் சிலை இருக்கிறது.

வனதுர்கை சிலையும் இருக்கிறது. இந்த விநாயகர் சிலையும் வனதுர்கை சிலையும்தான் ரங்கநாதருடைய சந்நிதியை காவல் காக்கின்றன. ஆனால், அங்கே போவதற்கு வைஷ்ணவர்கள் விடுவதில்லை. அதற்கு நித்தியபடி பூஜையெல்லாம் தவறாது செய்கிறார்கள். கோவில் ஈசான்யத்தில் அதாவது வடகிழக்குப் பக்கத்தில் ஒரு இராமர் சந்நிதி இருக்கிறது. மூலவர் சந்நிதி ஒரு பக்கமும், உற்சவர் சந்நிதி மேற்கு பார்த்தும் இருக்கின்றன. அந்த மேற்கு பார்த்திருக்கிற உற்சவர் சந்நிதி நல்ல அதிர்வுகள் கொண்டது. அங்குள்ள மண்டபத்தில் சிறிது நேரம் உட்கார்ந்தாலும் மன அமைதி நிச்சயம் கிட்டும். அங்கே உட்கார்ந்து மந்திரம் சொன்னால் வெகு நிச்சயமாய் பலிதமாகும். பிரார்த்தனைக்கும் தியானத்திற்கும் மிக உன்னதமான இடம், அந்த ராமர் சந்நிதி.

மகா விஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் தனித்தனியே ஆதிசேஷனுக்கு கீழே உட்கார வைத்து கல்லால் வடித்திருக்கிறார்கள். மிக நுணுக்கமான வேலைப்பாடு. அந்த இடத்தில் பல்வேறு ஹோமங்கள் நடத்தப்பட்டு ஒரு இடையறாத உஷ்ணம் பரவியிருக்கிறது. ஸ்ரீரங்கம் எப்போது வந்தாலும் இந்த இராமர் சந்நிதியை பார்க்காமல் போக வேண்டாம். ஸ்ரீரங்கம் போன்ற கோவிலில் ஈசான்ய மூலையில் இருக்கும் சந்நிதிகள் மிக விசேஷமானவை பவித்தரமானவை அதிக சக்தி கொண்டவை. தாயார் சந்நிதியிலிருந்து போகும்போது இராமரையும் தரிசித்துக் கொண்டு போங்கள்.''

''என்றுமில்லாதபடி எதற்கு மட்டையடி உற்சவத்திற்கு அழைத்து வந்திருக்கிறீர்கள். கொஞ்சம் முரட்டு கும்பலாக இருக்கும் போலிருக்கிறதே.'' சித்ராங்கி கேட்டாள்.



''ஆமாம். அதனால்தான் சற்று விலகி தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். சற்று உயரமாகவும் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன் உன் மீது வாழைப் பழமோ பந்தோ பட்டால் அதிகம் அலற வேண்டாம். அமைதியாக பார்த்துக் கொண்டிரு.''

''நீங்கள் யாரென்று இவர்களுக்குத் தெரிந்துவிட்டது போலிருக்கிறதே. கொஞ்சம் சுற்றிச் சுற்றி வந்து பார்க்கிறார்களே.''

''இதையும் கவனித்தேன் நம்மைப் பாதுகாக்க நான்கைந்து வீரர்கள் வாள் இல்லாமல், கேடயம் இல்லாமல் சாதாரண விவசாயிகள் போல் நம்மை சுற்றியிருக்கிறார்கள்.''

''ஆமாம். எனக்கு இந்த உற்சவம் பற்றி ஒரு விஷயம் புரியவில்லை.'' ரோஹிணி ஆரம்பித்தாள்.

''இது என்ன, ரங்கநாதர் திருட்டுத்தனமாக எங்கோ போய் வருவதாகவும், தாயார் ரங்கநாயகி கோபித்துக் கொள்வதாகவும் சற்று தரக்குறைவாக அல்லவா இருக்கிறது.''

''இல்லை ரோஹிணி! அப்படிப்பட்ட விஷயமில்லை. இது கணவன் மனைவிக்கு இடையே இருக்கின்ற கலகம்.''

''ரங்கநாதர் சாதாரண கணவரா? தாயார் ரங்கநாயகி சாதாரண மனைவியா? இப்படி மனிதர்கள் போல இவர்களுக்குள் கலகம் வருமா?'' மறுபடி ரோஹிணி கேட்டாள்.

''ரோஹிணி! இந்த மதம் சாதாரண விஷயமல்ல. புருஷன் ஒருவனே. அவன் பரமாத்மா. புருஷனுக்கு எதிரே உள்ள மற்ற எல்லா விஷயங்களும் எல்லா உயிரினங்களும்,

எல்லா ஜீவர்களும் பெண்களே. அவன் மட்டும்தான் புருஷன் என்பது வைணவ சித்தாந்தம். பரமாத்மாவும் ஜீவாத்மாவும் போட்டுக் கொள்கிற சண்டைதான் பிரணய கலகம். அதாவது இந்த மட்டையடி ரங்கநாதர் பரமாத்மா. ரங்கநாயகி தாயார் ஜீவாத்மா. ரங்கநாதர் புருஷன். தாயார் மானுடம். ஜீவாத்மா என்ன செய்கிறது? கடவுளை குறை சொல்கிறது.

நீ என்னைக் கவனிக்கவே இல்லை. என்னைக் கொஞ்சவே இல்லை. என்னை சீராட்டவே இல்லை. என்னை நீ சரியான முறையில் வழிநடத்தவில்லை. என் மீது உனக்கு பிரியமில்லை. என்னை இம்சைப்படுத்தவே நீ இருக்கிறாய் என்று சொல்வதோடு மட்டுமல்லாமல் ஜீவாத்மா பரமாத்மாவை புறக்கணிக்கிறது. ச்சீ போ என்று தள்ளுகிறது. விரட்டுகிறது, நீ இல்லாமல் என்னால் இருக்க முடியும் என்று வெளிப்பார்வைக்கு சொல்லிவிட்டு உள்ளுக்குள் ஏங்குகிறது.

கடவுள் என்ற விஷயத்தை மனிதர்கள் இப்படித்தான் மறுக்கிறார்கள். தனக்கு சுக சௌகர்ய சுதந்திரங்கள் கிடைக்கவில்லை என்பதால் ச்சீ. ச்சீ. கடவுளே இல்லை என்று வாதிடுகிறார்கள். ஆனால், உள்ளுக்குள் கடவுள் இருக்கலாகாதா, நேரடியே வரக்கூடாதா, என்னோடு பேசக்கூடாதா என்று ஏங்குகிறார்கள். இது வெறும் விளையாட்டு அல்ல ரோஹிணி.

மிகப் பெரிய தத்துவ விஷயம். ஆனால், ஸ்ரீரங்கத்து வைஷ்ணவர்களுக்கு இந்த தத்துவ விஷயம் புரியுமா என்பது தான் சந்தேகம். எல்லோருக்குமா புரியாமல் இருக்கும். இல்லை. ஸ்ரீரங்கத்தில் மிகவும் தெளிவான வைஷ்ணவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் தெம்பு இல்லாமல் இருக்கிறார்கள்.



கந்தாடை ராமானுஜம் போன்றோர் தூண்டிவிடும் வைஷ்ணவ, சைவ சண்டைகளுக்கு தலை கொடுத்து விவரம் புரியாமல் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

''இங்கே சைவர்களும் அதிகம் இருக்கிறார்களே?'' ரோஹிணி சொன்னாள். ''வேடிக்கை பார்க்க வந்திருக்கிறார்கள்.'' பதில் சொன்னாள்.

''எனக்கு அதுதான் கவலையாக இருக்கிறது. என்றுமில்லாதபடிக்கு இந்த மட்டையடிக்கு திருவானைக்காவல் ஆட்கள் நம்மையும் சேர்த்து நூறு பேராவது இருப்போம். என்று நினைக்கிறேன். இதுவரை இந்தக் கோவிலில் இத்தனை எண்ணிக்கையில் நான் சைவர்களைப் பார்த்ததே இல்லை. மட்டையடி பார்க்க இத்தனை சைவர்கள் ஒன்று திரண்ட காரணம் புரியவில்லை. ஏதோ மெல்லியதாய் ஒரு வாசனை அடிக்கிறது.''

காளமேகப் புலவர் சொல்லிக்கொண்டேயிருக்கிற போது பல்லக்கில் ரங்கநாதர் திபுதிபுவென்று தாயார் சந்நிதி நோக்கி ஓடி வந்தார். ஒரு தண்டுக்கு ஆறு பேராக நாலு பக்கமும் இருபத்து நான்கு பேர் முரடான வைணவர்கள் கைகோத்துக் கொண்டு வேர்க்க விறுவிறுக்க ரங்கநாதரை தாயார் சந்நிதிக்குள் கொண்டு சேர்த்துவிட வேண்டும் என்ற வேகத்தில் ஓடி வந்தார்கள். அவர்கள் உள்ளே நுழைந்துவிடப் போகிறார்களே என்ற பயத்தில் தாயார் சந்நிதியின் பெரிய கதவுகள் மணிகள் ஒலிக்க தடேர் என்று சாத்தப்பட்டன. தாயார் சந்நிதி வாசலில் நின்றவர்கள் பூக்களையும் பூபந்துகளையும் தயிரும் பாலும் கலந்த வாழைப்பழ ஊறலையும் ரங்கநாதர் மீது வீசி அடித்தார்கள். தயிரும் பாலும் வாழைப்பழமும் கலந்த வினோத கலவை லேசான நாற்றத்தோடு சுற்றியிருந்த எல்லோர் மீது சொத்சொத்தென்று விழுந்தது. பூ பந்துகளால் பலர்

அடிவாங்கினார்கள். அங்கே மிகப் பெரிய களேபரம்
நடந்தது.

ரங்கநாதரை பின்னுக்கு எடுத்துச் சென்றார்கள்
மறுபடியும் கதவு திறந்தது. ரங்கநாதரின் சார்பாக அரையர்
பேச, அரையருக்கு எதிரே தாயாரின் சார்பாக பண்டாரி
பேச, மறுபடியும் வாழைப்பழ கலவை வீசியடிக்கப்பட்டது.
பூ பந்துகள் எல்லோர் மீதும் பலமாக குறிபார்த்து
அடிக்கபட்டன. எவ்வளவு ஒதுங்கி நின்றாலும் எல்லோர்
மீதும் இந்தக் கலவை பலமாக தெறித்து விழுந்தது. வழித்து
தரையில் போட்டு எல்லோரும் சிரித்துக் கொண்டிருந்தார்
கள். பழ, பூ பந்துகள் கை நிறைய வாழைப்பழக் கலவை
சைவர்கள் முகத்தில் வேகமாக அடிக்கப்பட்டது. சில
சமயம் இரண்டு மூன்று அடிகள்கூட சைவர்களுக்கு
விழுந்தது. அடிவாங்கிய சைவர்கள் தாயார் சந்நிதி மண்ட
பத்தை விட்டு வெளியேறினார்கள். வெளியேறியவர்களை
சிலபேர் இடித்து கீழே தள்ளினார்கள் காளமேகப் புலவ
ருக்கு இது திட்டமிட்ட கலவரம் என்பது புரிந்துவிட்டது.
கூட்டத்துக்கு நடுவே திருநீறு இட்டுக் கொண்டிருந்த ஒரு
இளைஞன் ரங்கநாதரை நோக்கிப் பாய்ந்தான். என்னடா,
என் மீது கலவை அடிக்கிறீர்கள் உங்கள் ரங்கநாதரை என்ன
செய்கிறேன் பார் என்று அவன் முத்துமாலை மீது கை
வைத்தான். பளீச்சென்று இழுத்தான். முத்துக்கள் சிதற
கையில் கிடைத்த மாலையோடு அவன் பட்டாபிராமன்
சந்நிதியை நோக்கி தலைதெறிக்க ஓடினான். வேறு சிலபேர்
ஓட, அவர்களை ஓட வேண்டாம் என்று வேறு சில
வைஷ்ணவர்கள் தடுத்தார்கள். ஓடிய சைவனும் அவனைத்
தொடர்ந்து ஓடிய வைஷ்ணவர்களும் காணாமல் போனார்
கள். 'எல்லாம் இந்த திருவானைக்காரர்கள் செய்யும் வேலை
இந்த சைவர்கள் ரங்கநாதரை கொள்ளையடிக்கவே
வந்திருக்கிறார்கள். ஏன் இவர்களை உள்ளே விட்டீர்கள்.'



யாரோ உரத்து சொல்ல, இன்னொருவன் பிடித்து மடக்கி
அடித்தால் ஏன் வருகிறார்கள் என்று பதிலுக்குசொன்னான்.
வைஷ்ணவர்கள் சைவர்களை நோக்கிப் பாய்ந்தார்கள்.
அங்கங்கே கிடந்த கட்டைகளை மடமடவென்று எடுத்துக்
கொண்டார்கள் கண்மூடித்தனமாய் ஆண் - பெண் என்று
பார்க்காமல், பெரியவர் - குழந்தை என்று பார்க்காமல்
திருநீறு இட்டவர்களையெல்லாம் வைணவர்கள் தாக்கத்
துவங்கினார்கள்.

இதே நேரம் இராஜ மகேந்திரன் திருச்சுற்றில் இருக்கின்ற
பண்டார அறையில் கள்ளச்சாவி போட்டு கந்தாடை
ராமானுஜத்தின் சீடர்கள் பொக்கிஷ கதவைத் திறந்தார்
கள். நகைகளையும் நல்முத்துக்களையும் பவளமாலைகளை
யும் பொற்காசுகளையும் வாரிக்கொண்டார்கள். அள்ளி
கூடைக்குள் போட்டுக் கொண்டு மேலே உணவுப்
பண்டங்கள் பரப்பி தலையில் எடுத்துக் கொண்டு
கூட்டத்தில் கலந்துபோனார்கள். இந்த கலவரம் ஓய வெகு
நேரமாயிற்று.

காளமேகப் புலவர் கண் சிவந்தபடி சகலமும் பார்த்துக்
கொண்டிருந்தார். வடக்கு வாசல் வழியாக வெளியேறி
னார். அங்கே அவருடைய சிறு தேர் தயாராக இருந்தது.
ஏறிக் கொண்டார். திருவானைக்காவல் நோக்கி காவேரி
வழியாக தேர் போயிற்று. அகலமான படகில் தேர் ஏறி
நிற்க, அதில் உட்கார்ந்தபடியே நடந்தவைகளை ஒரு முறை
காளமேகப் புலவர் யோசித்துப் பார்த்தார். இதற்கு
பின்னே அரசியல் இருப்பது அவருக்குத் தெரிந்துவிட்டது.
கோனேரிராயன் இங்கு வந்தே ஆகவேண்டிய அவசியத்தை
அவர் உணர்ந்து கொண்டார். மற்ற தளபதிகளுக்கு செய்தி
அனுப்பினார். மிகப் பெரிய படையொன்று ஸ்ரீரங்கத்தை

சுற்றி வளைத்துக் கொண்டது. யாராவது உரக்கப் பேசினால் கன்னத்தில் அடித்து உட்காரவைத்தது.

கோனேரிராயன் இருபது நாட்கள் கழித்து திரிசிரபுரம் எல்லைக்குள் நுழைந்தான்.

காளமேகப் புலவர் அவனை எதிர்கொண்டு வரவேற்றார். "எதற்கு பயப்படுகிறாய் காளமேகம்! கந்தாடை ராமானுஜத்தை மாறுகால் மாறுகை வாங்கி விடுவேன். என்ன விஜய நகரம். என்ன தெளிவு ஆட்சி சிறிய தர்மம் கூட இல்லாமல் எத்தனை சூழ்ச்சிகள். எத்தனை சண்டைகள். சாளுவ நரசிம்மனின் இரண்டு குழந்தைகளையும் நரச நாயக்கன் அரியணையில் ஏற்றி வைத்தான் அல்லவா. முதல் குழந்தைக்குப் பட்டம் கட்டினான் அல்லவா. அவனை கொன்றுவிட்டு இரண்டாவது பையனை இப்போது அரியணையில் ஏற்றியிருக்கிறார். முதலாவது பையனுக்காவது பேசத் தெரியும் இரண்டாவது பையனுக்கு பேசவும் தெரியவில்லை, பார்க்கவும் தெரியவில்லை. வெறுமே அசையாது பொம்மை போல உட்கார்ந்து கொண்டிருக்கிறது. அங்கு செயல்படுவது மொத்தமும் நரச நாயக்கன். ஆனால், நரச நாயக்கனுடைய கவனம் முழுவதும் பாமினி சுல்தான் மீதும் ஒட்டர்கள் மீதும் இருக்கிறது. ஒரிஸ்ஸாவிலிருந்து வந்த ஒட்டர்களையும் அவன் தடுத்து நிறுத்தி விட்டிருக்கிறான். அவன் இதற்கு பிறகு கர்நாடகா முழுவதையும் தன் வசப்படுத்திக் கொள்ள முயற்சி செய்கிறான் என நினைக்கிறேன். அவன் இங்கு வருவதற்கு பல காலம் ஆகும். அதற்குள் நான் சுதாரித்துக் கொள்வேன் காளமேகம். மிகப் பெரிய பலமான படை ஒன்று திரட்டப் பட வேண்டும். மதுரையில் மாவலிராயன் தான் தனி மன்னன் என்று அறிவித்துவிட்டான் என்று கேள்விப் பட்டேன். இங்கு மறுமுறை இந்த அறிவிப்பு



நடக்கும். எனக்கு முடிசூட்டு விழா நடக்கும். எந்தக் கவலையும்பட வேண்டாம்.

தமிழ் தெரிந்தவன்தான் தமிழ் தேசத்தில் அரசனாக இருப்பான். கந்தாடை ராமானுஜத்தையும் அவன் சிஷ்ய கோடிகளையும் கைதுசெய்து சங்கிலியால் பிணைத்து திரிசிரபுரம் வரை நடத்தி அழைத்து வாருங்கள். அவர்களை சிறையில் தள்ளுங்கள். கந்தாடை ராமானுஜத்துக்கு ஆதரவாக எவர் குரல் கொடுத்தாலும் அடித்து நொறுக்குங்கள். இது தவிர ஸ்ரீரங்கத்தில் என்ன இருக்கிறது, என்ன இல்லை என்பது எனக்குத் தெரிந்தாக வேண்டும். ஒரு முத்து மாலையை ஒரு சைவன் எடுத்துக் கொண்டு ஓடினான் என்பதற்காக திருவானைக்காவல் சைவர்களை நான் கைது செய்துவிட முடியாது. முதலில் அவர்களுடைய கோயில் சொத்துக்கள் என்ன என்பதை தெளிவாக எனக்கு பட்டியல் போட்டுக் காட்ட வேண்டும் என்று அவர்களுக்கு உத்தரவிடுங்கள்.

கோனேரிராயன் வேகமாக செயல்பட்டான். வைஷ்ணவர்கள் திகைத்தார்கள். கந்தாடை ராமானுஜத்தை கோனேரிராயன் வீரர்கள் சுற்றிக்கெள்ள, அவன் கயிறால் பிணைக்கப்பட்டு, பிரம்பால் அடிக்கப்பட்டு கால் நடையாய் திரிசிரபுரத்துக்குக் கொண்டுவரப்பட்டு சிறை வைக்கப் பட்டான்.

ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாகப் பொறுப்பிலிருந்த ஜீயர்கள் கந்தாடை ராமானுஜத்துக்கு ஆதரவாக பேசவில்லை. ஆமாம். மட்டையடி உற்சவம் சற்று அதிகப்படி கலவரமாக ஆகிவிட்டது. அவ்வளவுக்கு செய்திருக்கக் கூடாது. அதை செய்ததெல்லாம் கந்தாடை இராமானுஜம்தான். முத்து மாலையை எடுத்தது இன்னாரென்று தெரியவில்லை. இதற்காக சைவர்களைத் தாக்கியதும் அவர்களை மிரட்டிச்

சென்றதும் திருவானைக்காவலில் இருபது வீடுகளைச் சூறையாடியதும் தவறு நான் என்று ஒப்புக்கொண்டார்கள்.

கோனேரிராயன் அவர்களை எச்சரித்து திருப்பி அனுப்பினான்.

கந்தாடை ராமானுஜம் வீரர்கள் தனக்கு ஆதரவாகயில்லை எதிராகவே சாட்சி சொன்னார்கள் என்று தெரிந்ததும் மனம் நொந்து போனான். குறிப்பாய் ஒரு வீரன் மீது கோபம் அடைந்தான்.

ஸ்ரீரங்கத்தின் எல்லா வீதிகளிலும் கோயிலின் உள்ளும் புறமும் கோனேரிராயரின் ஆட்கள் நிறுத்தி வைக்கப்பட்டார்கள். நெற்றி நிறைய திருநீறுமாக பெரும் மீசையுமாக கையில் பிரம்போடு அவர்கள் வாயிலை கவனமாக காத்து வந்தார்கள். விடியலில் திறந்து இரவு மூடினார்கள். உள்ளே யார் இருந்தாலும் சவுக்கால் அடித்து வெளியே துரத்தினார்கள். கோயில் என்பது இப்போது வைணவர்களுக்கு சொந்தமல்ல, சைவர்களுக்குச் சொந்தம் என்பது போல் ஒரு தோற்றம் ஏற்பட்டது.

உறையூரில் சோழகுலவல்லிகளின் அரண்மனையில் முடிசூட்டு விழா நடந்தது. ஏழை எளிய மக்களுக்கு தானம் தரப்பட்டன. காளமேகப் புலவருக்கு சன்மானங்கள் தரப்பட்டன. திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரிக்கும் சமயபுரத்து அம்மனுக்கும் பல நிவந்தங்கள் விடப்பட்டன. அந்த முடிசூட்டு விழாவில் வைணவர்கள் வருத்தமாக புறக்கணிக்கப்பட்டார்கள். வைணவர்களுக்கு வருத்தமாக இருந்தது. ஆனால், முடிசூட்டு விழா நடந்த மறுவாரமே கோனேரிராயன் ஸ்ரீரங்கம் கோயிலுக்குள் சிங்கம்போல் புகுந்தான். நான் உங்களை கணக்கெடுக்க சொல்லி இருபது



நாட்களாகி விட்டன. என்ன கணக்கெடுத்து வைத்திருக்கிறீர்கள். எதை ஒப்பிட்டுப் பார்த்தீர்கள். என்ன குறைகிறது என்று உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டான். வைணவர்கள் மவுனமாக இருந்தார்கள். கோனேரிராயன் பொக்கிஷ அறையைத் திறக்கச் சொன்னான். தன் ஆட்களை எடுத்து விட்டு உள்ளிருக்கிற எல்லா பண்டங்களையும் வெளியே எடுத்து வந்தான். கங்காளம் கங்காளமாக பொற்காசுகள். பல பெட்டிகளில் உதிரி வைரங்கள். நிறைய மரப்பெட்டிகளில் மாலைகள். மூன்று ஆள் உயரத்திற்கு பூவும் தங்கக் காசு மாலை, வைரக்கிரீடம், தங்கத்தாலான ஒட்டியாணம் என்று பல்வேறு விஷயங்கள் இருந்தன. பவழ மாலை மட்டுமே நூற்றுக்கணக்கில் இருந்தன.

கோனேரிராயன் தன்னுடைய மனைவிகளோடு அந்த செல்வங்களைப் பார்க்க ஆசைப்பட்டான். சித்ராங்கியும் ரோஹிணியும் ஆளனுப்பி வரவழைக்கப்பட்டார்கள். காளமேகப் புலவர் தனியே உட்கார்ந்து எல்லாவற்றிற்கும் பட்டியல் போட்டுக் கொண்டு இருந்தார். பெண்கள் நகைகளை எடுத்து பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு மன்னர்கள் செய்த இந்தக் காணிக்கைகள் அவர்களைப் பரவசப்படுத்தின. கோனேரிராயன் தனக்கென்று சில வைரங்களும் மோதிரங்களும் தங்கக்காசு மாலையும் தோள் வளையமும் எடுத்துக் கொண்டான். எல்லாவற்றையும்விட அரங்கர் ஒரு அரசர். அவருக்கு செங்கோல் உண்டு. அவர் இடுப்பிலே தரித்துக் கொள்ள கட்டாரி உண்டு என்று காட்டினார்கள்.

அழகிய வெள்ளிப்பிடியை வளைத்து கூர்முனையோடு மிக உறுதியாய் இருந்த ஒரு யானை முக கட்டாரியை கோனேரிராயன் ஆச்சரியத்தோடு பார்த்தான். அந்தக்

கட்டாரியை கையில் வாங்கியதும் உடம்பு சிலிர்த்தது. அதன் ஒரு பக்கம் வைஷ்ணவ சின்னம் பொறிக்கப்பட்டு இருந்தது. இன்னொரு பக்கம் சக்கரம் பொறிக்கப்பட்டு இருந்தது. அழகிய யானை வாயில் கத்திக்கும், பிடிக்கும் அருகே பூவேலைகளுமாய் மிக நேர்த்தியாய் அந்தக் கட்டாரி இருந்தது. அது ஒரு பட்டுத் துணியில் சுத்தப்பட்டு இருந்தது. அந்தக் கட்டாரியையும் கோனேரிராயன் தனக்கென்று எடுத்து வைத்துக் கொண்டான். இது அரங்கருடைய கட்டாரி. எடுக்கலாகாது. வைணவர்கள் ஆட்சேபித்தார்கள். முட்டாள் வைணவர்களே. இந்தக் கோயிலுக்குள் புகுந்து ஒரு இஸ்லாமியன் பொருட்களை வாரிக் கொண்டு போனானே. அப்பொழுதெல்லாம் நீங்கள் என்ன செய்தீர்கள்? எப்படி பாதுகாத்தீர்கள்? உங்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். மறுபடியும் இஸ்லாமியர்கள் தெற்கு நோக்கி வரவிருக்கிறார்கள். பாமினி சுல்தான் நரச நாயக்கனை வீழ்த்திவிட்டால் அவன் அடுத்த குறி சோழ தேசந்தான். குறிப்பாய். திருவரங்கம். எனவே, உங்கள் செல்வங்கள் உங்களிடமே நிரந்தரமாக இருக்குமென்று ஒரு நாளும் எண்ணிவிடாதீர்கள். உங்கள் செல்வங்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் அதற்கு ஒரு கோனேரிராயன் தேவை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். கந்தாடை ராமானுஜம் போன்று துறவியுமில்லாமல் க்ஷத்திரியனாயும் இல்லாமல் ஒரு ரெண்டுங்கெட்டான் ஆளுக்காக என்னைப் பகையாதீர்கள். இந்தக் கட்டாரி என்னிடம் இருப்பது திருவரங்கரத்தை காப்பதற்கு உதவும். இனி இது என் கட்டாரி. எனக்கு இந்தப் பட்டில் சுத்திய கட்டாரியை நான் அணிந்திருப்பதால் எனக்கு பட்டுக் கட்டாரி கோனேரிராயன் என்ற பெயரும் இனி தரப்படும். என் கல்வெட்டு களில் என் பெயர் எழுதும்போது பட்டுக்கட்டாரி என்று எழுதுவார்கள்.



எனவே, பட்டுக்கட்டாரியும் நான் எடுத்த நகைகளையும் மறந்து விடுங்கள். மற்றவைகளுக்கு கணக்கு சொல்லுங்கள்'' என்று அதட்டினான். வைணவர்கள் மவுனமானார்கள். உள்ளுக்குள் குமைந்தார்கள்.

''நகைகளைப் பார்த்துவிட்டு வியந்து போகாதே கோனேரிராயா! இங்கு வேறு ஒரு விஷயம் இருக்கிறது. ஸ்ரீரங்கம் கோயிலுக்கு கிராமம் கிராமமாக அரசர்கள் நிவந்தம் விட்டிருக்கிறார்கள். மிகப் பெரிய பரப்பு ஸ்ரீரங்கத்துக்குச் சொந்தமாக இருக்கிறது. ஐந்து குதிர்கள். ஒவ்வொரு குதிரிலும் தளும்ப தளும்ப நெல் இருக்கிறது. பால் சோற்றுக்கு பஞ்சமே இல்லாத இடம் திருவரங்கம். மூன்று ஆள் ஆழம் தொட்டி என்று கட்டியிருக்கிறார்கள். தயிரும் பாலும் இடைவிடாது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜனங்கள் கொண்டுவந்து கொண்டுவந்து கொடையாக கொடுக்கிறார்கள்.

ஸ்ரீரங்கத்தின் இந்த செல்வத்தை ஞாபகம் வைத்துக் கொள். பல யானைகள் ஸ்ரீரங்கத்துக்குச் சொந்தம். பல ஆடுகள் ஸ்ரீரங்கம் கோயிலுக்குச் சொந்தம். பல நிலங்கள் ஸ்ரீரங்கம் கோயிலுக்குச் சொந்தம். ஒரு கோவிலுக்கு இத்தனை நிலங்கள் தேவையில்லை. இதனால்தான் இங்கு உள்ள வைணவர்கள் முரட்டுத்தனமாக இருக்கிறார்கள். நகைகள்ளைக் கண்டு ஆச்ரியப்படாதே. கிராமங்களைப் பார்'' என்று கோனேரிராயனுக்கு காளமேகப் புலவர் வழி காட்டினார்.

கோனேரிரா யன் அந்தத் தகவல்களை ஆராய்ந்தான். ஸ்ரீரங்கத்துக்கு அன்று நிவந்தமாகக் கொடுக்கப்பட்ட பல கிராமங்களைப் பிரித்து எடுத்து திருவானைக்காவலுக்கும் சமயபுரத்துக்கும் மலைக்கோட்டை தாயுமானவர் சுவாமிக்கும் வேறு சில உறையூரிலுள்ள காளியம்மன் கோவிலுக்

கும் பிரித்துக் கொடுத்தான். வைணவர்கள் இடிந்து போனார்கள்.

காலம் காலமாக அனுபவித்து வந்த பாத்தியதை, பரம்பரை பரம்பரையாக அனுபவித்து வந்த சுகம் பறிபோவதை பார்த்து விம்மி அழுதார்கள். ''ஒரே ஒரு கோயில் மட்டும் இத்தனை சுகங்களை அனுபவித்துக் கொண்டு இருப்பது என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. எல்லா கோயில் களுக்கும் சமமாக வேண்டும். நான் வைணவத்திற்கு எதிரியல்ல. நீங்கள் அதிகப்படியான செல்வத்தோடு செழிக்கிறீர்கள். இதனால் உங்களுக்கு கர்வம் ஏற்படுகிறது. பிறரை அவமதிக்கிறீர்கள். உங்கள் கர்வத்தைக் குறைக்க உங்கள் செல்வத்தை பறிப்பது மட்டும்தான் வழி. எனவே, என்னுடைய கட்டளையை ஏற்று மிக அமைதியான முறையில் என்னோடு ஒத்துழைப்பீர்களேயானால் நல்லது. அல்லது நான் வன்முறையில் ஈடுபட வேண்டியிருக்கும்'' என்று கோனேரிராயன் மிரட்டினான்.

வைணவர்கள் அடிபணிந்தார்கள். ஜீயர்கள் மறுபடியும் விஜயநகரத்திற்கு ரகசியமாய் கடிதம் எழுதினார்கள்.

கந்தாடை ராமானுஜத்தை விசாரிக்க ஒரு மாதம் கழித்து அவனைக் கோனேரிராயன் அழைத்து வரச் சொன்னான். கந்தாடை ராமானுஜம் மெலிந்து போயிருந் தான். கோனேரிராயனை பார்த்தவுடன் சாஷ்டாங்கமாக காலில் விழுந்தான். ''மதியாத மன்னர் கோனேரிராயர் வாழ்க!'' என்று வாழ்த்தினான். கை கூப்பினான். கண்ணில் ஜலம் வழிய நின்றான்.

''ஏன் என்னவாயிற்று உனக்கு?'' கோனேரிராயன் ஊடுருவி பார்த்து விசாரித்தான்.



''இனி ஒருபோதும் கோனேரிராயருக்கு எதிராக நான் எந்தக் குரலும் எழுப்பமாட்டேன். நான் துறவி என்பதை நீங்கள் ஞாபகப்படுத்தினீர்கள். ஒரு சைவன் முத்து மாலையை களவாடிப் போகிறானே என்ற கோபத்தில் தான் என்னுடைய ஆட்களோடு திருவானைக்காவல் போனேனே ஒழிய மத்தபடி சைவர்களிடம் எனக்கு எந்த விரோதமும் இல்லை.

நீங்கள் கிராமங்களைப் பிரித்து திருவானைக்காவலுக்கும் சமயபுரத்துக்கும் கொடுத்தது எனக்கு பூரண சம்மதம். என்னை விட்டு விட்டீர்கள் என்றால் நாராயண நாமம் சொல்லிக் கொண்டு கொள்ளிடத்தில் குளித்துக் கொண்டு அமைதியான வாழ்க்கை வாழ்வேன். தயவுசெய்து என்னை வேறு ஏதும் செய்துவிடாதீர்கள்'' என்று கைகூப்பினான்.

''உம்மைப் பற்றிய தீர்ப்பு நாளை தரப்படும். இன்று நீர் மலைக்கோட்டைக்கு கீழே எம்முடைய காவலில் இரும்'' என்று அவருடைய சிறைவாசத்தை தளர்த்தி வெறும் காவலில் கந்தாடை ராமானுஜத்தை உட்கார வைத்தார். காளமேகப் புலவரைப் பார்த்து என்ன செய்வது என்று கேட்டார். காளமேகப் புலவர் கண்மூடி ஜபம் செய்யத் துவங்கினார். உள்ளுக்குள்ளேயே கந்தாடை ராமானு ஜத்தை விட்டுவிடு என்று அகிலாண்டேஸ்வரி உருவமும் குரலும் தோன்றியது. காளமேகப் புலவர் கண் திறந்தார்.

''கோனேரிராயா! கந்தாடை ராமானுஜத்தை மன்னித்து விட்டுவிடு'' என்று சொல்ல, மறுநாள் காலை கந்தாடை ராமானுஜம் விடுதலை ஆகி ஸ்ரீரங்கம் போனார் தன்னுடைய மடத்திற்கு போனார்.

கதவு சாத்திக்கொண்டார். தன்னுடைய வாளை உயர்த்திப் பிடித்து மடத்துக்குள் இருந்த சீனிவாசருடைய

பாதத்தில் வைத்தார். ''சீனிவாசப் பெருமாளே! திருவேங் கடவா! எனக்கு ஏன் இத்தனை அவமானம். நான் சரியான துறவியாக இல்லை என்பதால்தானே என்னை சிறைக்கு அனுப்பினீர். நான் தாசிகளோடு புரண்டு கொண்டிருக் கிறேன் என்பதால்தானே என்னை தண்டித்தீர். இப்போது இந்த கந்தாடை ராமானுஜம் உன் முன்பே பிரதிக்ஞை எடுத்துக் கொள்கிறேன். இனி ஒருபோதும் பெண்களை மனதாலும் நினைக்கமாட்டேன். நிறுத்திவிட்டேன். என் ஆயுள் இருக்கும் வரை ஸ்ரீரங்கம் அரங்கனுக்கு என் சேவையைச் செய்வேன். நான் முற்றிலும் துறவி. முழுத்துறவி. ஆனால், அரசியல்லிருந்து விலகமாட்டேன். கோனேரிராயன் சாகும்வரை ஓய மாட்டேன். கோனேரி ராயன் மரணத்தை எனக்கு வரமாக கொடு. என் அவமானத்திற்கு நான் பழி தீர்ப்பேன். சீனிவாசப் பெருமாளே! வைஷ்ணவம் தழைக்க ஒரு வேளை உணவும் ஒரே உடையுமாய் இந்த கந்தாடை ராமானுஜம் வலம் வருவான். அவன் பிரதிக்ஞை மீறினால் தன்னைத்தானே சிரம் அறுத்துக் கொண்டு சாவான் என்று உங்கள் முன் சத்தியம் செய்கிறேன்'' என்று ஓங்கி அடித்து சத்தியம் செய்தான்.

வாளை எடுத்துத் தலைக்குமேல் வைத்துக்கொண்டான். உறையிலிட்டு சீனிவாசப் பெருமாள் மீது வாளை சாய்த்து விட்டு மடத்தின் திண்ணைக்கு வந்து உட்கார்ந்து கொண் டான். கதவு திறக்க சொன்னான். ஸ்ரீரங்கத்து வைணவர்கள் கந்தாடை மடத்தின் வாயிலுக்கு முன்பு கூடியிருந்தார்கள். கதவு திறந்ததும் உள்ளே வந்தார்கள். அவன் எதிரே கை கட்டி நின்றார்கள். ஆமாம், இது நமக்கு மோசமான காலகட்டம். ஆனால், என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியும். என்னுடைய வழி ரகசியமான வழி. உங்களோடு நான் அதிகம் பேசிக்கொண்டு இருக்க



முடியாது. உங்களில் யார் நல்லவர், யார் ஒற்றர் என்று எனக்குத் தெரியும். நான் யாரையும் நம்பத் தயாராயில்லை. ஆயினும் நான் ஸ்ரீரங்கம் அரங்கருக்கு என்னுடைய உயிர் பொருள் ஆவி அனைத்தையும் தத்தம் செய்திருக்கிறேன். அரங்கர் வழிகாட்ட, எப்படியாவது ஸ்ரீரங்கத்தை வைணவத் தலமாக வைணவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட இடமாக இதை மாற்றுவேன். அதிகம் பேச வேண்டாம். என் முன்னே கை கட்டி நிற்கவேண்டாம். எனக்கு என்ன செய்வது என்று தெரியும். என்னை தனியே விட்டுவிடுங் கள். அது போதும்'' என்று கை கூப்பினான்.

ஸ்ரீரங்கத்து வைணவர்கள் கலைந்து போனார்கள் கந்தாடை ராமானுஜம என்ன செய்வது என்று யோசிக்கத் துவங்கினான்.

கந்தாடை ராமானுஜத்தின் மடம் பலமான கதவு களுடன் உறுதியான கருங்கல் சுவர்களுடன் உள்ளே வெளிச்சம் வரக்கூடிய விதமாய் உயர்த்திக் கட்டப் பட்டிருந்தது.

முற்றத்தின் நடுவே சிறிய கோயில் ஒன்று வைத்து திருப்பதி ஸ்ரீனிவாசப் பெருமாளை மூன்றடி உயரச் சிலையாய் செய்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

கந்தாடை ராமானுஜம் முற்றம் முழுவதும் அலைந்தான். ஸ்ரீனிவாசப் பெருமாளோடு அடிக்கடி பேசினான்.

''இந்த சோழ தேசம் முழுவதும் ஸ்ரீனிவாசா, உன் புகழைப் பரப்ப விரும்பினேன். இந்த ஊரின் எல்லா ஊரின் வாசற்படியிலும் சங்கும் சக்கரமும் பொறிக்க விரும் பினேன். ஆழ்வார் பாடல்களை எல்லா கோயில்களிலும் சந்தை சொல்ல ஆசைப்பட்டேன்.

வேங்கடவா! நான் என்ன செய்ய வேண்டும் என்பதை எனக்குச் சொல்.

எனக்கு என் தவறு புரிந்துவிட்டது. ஸ்ரீனிவாசா! துறவு என்று சொல்லி ஸ்ரீரங்கத்து தாசிகளை ரகசியமாய் அழைத்து சல்லாபம் செய்ததன் பாபம் நான் அனுபவித்துவிட்டேன். ஒரு சாதாரண தளபதி இந்த கோனேரிராயன் என்னை அவமானப்படுத்திவிட்டான். எந்த மண்ணில் தலைநிமிர்ந்து நின்றேனோ அந்த மண்ணில் நாய் போல் இழுத்து வரப்பட்டேன். நான் தவறு செய்தேன். இதற்குத் தண்டனை தந்தாய். இனி இந்த தவறு நடக்காது.

வேங்கடவா! எனக்கு பதில் சொல். எனக்கு நீ வழிகாட்டாத வரையில் நான் உண்ணப் போவதில்லை. நான் உறங்கப் போவதில்லை.

இதோ இந்த முற்றத்தில் நான்கு தூண்களையும் சுற்றி வரப் போகிறேன்.

இடது தூணில் ஹனுமார், வலது தூணில் உறங்கா வில்லிதாஸன். அதற்கு பக்கத்தில் பொன்னாத்தாள் என்று ராமானுஜரின் சீடர்கள் சிலையாக இந்த மடத்தில் எழுந்தருளியிருக்கிறார்கள்.

அவர்களைச் சுற்றிச் சுற்றி வருவேனே தவிர, நீ ஜெயிப்பாய் என்று ஆறுதல் கூறு. எனக்கு ஒளி காட்டும் வரை ஓயாது சுற்றுவேனே தவிர, உயிர்பிரியும் மட்டும் நகருவேனே தவிர உட்கார மாட்டேன்.

இந்த கந்தாடை ராமானுஜம் துறவி. இனி எந்தப் பெண்களையும் தொடாத துறவி.

எனக்கு பதில் சொல் வேங்கடவா!'' கந்தாடை ராமானுஜம் அந்த மண்டபத்தை வெறி பிடித்தது போல்



சுற்றி வந்தான். உணவு இன்றி ஒரு இரவு ஒரு பகல் அலைந்தான். வயிறு இழுத்து கால் தடுமாறி தடேரென்று தரையில் விழுந்தான்.

''நான் இருக்கிறேனடா எழுந்திரு.'' கந்தாடை ராமானுஜத்துக்குள் ஒரு குரல் கேட்டது.

கந்தாடைக்கு தன் காதுகளை நம்ப முடியவில்லை. 'நான் இருக்கிறேன் எழுந்திரு.' தெய்வம் மறுபடி சொல்லிற்று.

கந்தாடை வாய் விட்டு அழுதான்.

சாதத்தில் ஊற்றிய ஜலத்தை ஐந்து மிடறுகள் குடித்தான். வழிநடை திண்ணைக்கு வந்து தூங்கிப் போனான்.

தெற்கிலிருந்து முற்றத்து மேற்கூரையில் அடித்த காற்று தரையிறங்கி கந்தாடை ராமானுஜத்தை தாலாட்டியது.

ஒரு யானை வேகமாகத் திரும்ப, அந்த யானையின் வால் குதிரையில் வந்த கோனேரிராயன் முகத்தில் பட்டென்று அடித்தது. பெரிய மூங்கில் பிரம்பால் முகத்தில் அடித்த வலி ஏற்பட்டது.

கோனேரிராயன் கண்களைப் பொத்திக் கொண்டான். யானை அப்படி அடித்தது நல்ல சகுனமில்லை என்று அவனுக்குத் தெரியும். ஆனால், அதை அவன் யாரிடம் சொல்லவில்லை.

காளமேகப் புலவர் நான்கு குதிரைகள் மீது பொற்காசுகள் கட்டி, மூன்று பெட்டிகளில் தனியே பொற்காசுகளைத் தூக்கி வரச் செய்து திரிசிரபுரத்தில் இருந்து நாகைப் பட்டினம் போனார்.

யவன வீரர்கள் குதிரைகளோடு வருவார்களா என்று விசாரித்தார். அரேபியாவிலிருந்தும் போர்ச்சுக்கீசியத்தில்

இருந்தும் வந்த குதிரைகள் அரபிக் கடல் பக்கமுள்ள துறைமுகங்களில் இறக்கப்பட்டு விஜயநகர மன்னர்களிடம் நல்ல விலைக்கு விற்கப்பட்டன. அவர்களால் கழித்துக் கட்டப்பட்ட குதிரையைத் தவிர வேறு எதுவும் சோழ தேச கடற்கரைக்கு வருவதில்லை.

ஒரு நாள் காலை கூடாரத்திலிருந்து சீனர்கள் ஒரு சிறிய கப்பலிலிருந்து இறங்கினார்கள். ஒரு மூங்கில் குழாயைக் கடல் மண்ணில் புதைத்துவிட்டு அதன் தலையில் நெருப்பு வைத்துவிட்டு ஓடினார்கள். படேரென்று மூங்கில் குழாய் வெடித்து நான்கு புறமும் மண் சிதறி எல்லோரையும் கலவரப்படுத்திற்று.

குதிரைகள் எவ்வளவு இறுக்கிப் பிடித்தாலும் கால் மாற்றி தவித்தன. பறவைகள் ஓயாமல் கத்தின.

சீனர்கள் கையோடு கூட்டிவந்திருந்த ஒரு அடிமையை கைகால் கட்டி இழுத்து வந்தார்கள். கடற்கரை மணலில் நிற்க வைத்தார்கள். அவன் இடுப்பில் மூங்கில் குழாய் சொருகினார்கள். நெருப்பு வைத்துவிட்டு ஓடினார்கள்.

எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க அந்த அடிமை சுக்கல்சுக்கலாக செத்துப்போனான். எலும்பும் தசையும் மூக்கும் நாக்கும் வெகுதூரம் சிதறிக் கிடந்தன. உடம்பும் நெஞ்சும் வெகுதூரம் சிதறிக் கிடந்தன.

காளமேகம் தலையிலடித்துக் கொண்டார்.

எவ்வளவு குரூரமான மனிதர்கள். த்தூ என்று தரையில் துப்பினார்.

ஒரு மூங்கில் குழாய் வெடிமருந்து நூறு பொன். திரியை கொளுத்தி ஒரு கோட்டைக்குள்ளே தூக்கியெறிந்தால்



அந்தக் கோட்டைக்குள் இருப்பவர்கள் மரணமடைவது நிச்சயம்.

ஒரு மூங்கில் குழாய் நூறு பொன். அந்தப் படகில் ஆயிரம் மூங்கில் குழாய்கள் இருந்தன.

இதைப் போய் வாங்குவதா? காளமேகம் தயங்கினார். அழைத்துப்போன தளபதிகள் வாங்கலாமென்றும், வாங்கக் கூடாது என்றும் சண்டையிட்டனர்.

ஒரு தளபதி நூறு பொன் கொடுத்து ஒரே ஒரு மூங்கில் குழாய் வாங்கினான். நெருப்பு பற்ற வைத்து மேலே எறிந்தான். அது குறுக்கே பறந்த காக்கையின் மீது பட்டு திசைமாறி அவனருகே வந்து விழுந்தது.

சீனர்கள் வீச்சு வீச்சென்று கத்தினார்கள். அவனைக் குப்புறப் படு என்று சைகை செய்தார்கள்.

அந்த முட்டாள், மூங்கில் குழாய்க்கு இரண்டு முழதூரத்தில் குப்புறப்படுத்தான். சுக்கல் சுக்கலாய் கிழிந்து இறந்துபோனான்.

மற்ற தளபதிகள் வேண்டாமென்று தீர்மானிக்க, காளமேகப் புலவர் கவலையானார்.

சோழ கடற்கரைக்கு மூன்று மாதங்கள் வரை குதிரைக் கப்பல் வரவேயில்லை, மாறாய் பாண்டிய தேசத்திலும் சோழ தேசத்திலும் சுற்றினால் யானைகளை வாங்கி விடலாம்.

குதிரைக்குப் பதிலாய் யானைகள் இருந்தால் எதிரி தோற்றுத்தானே போவான்.

சோழ தேசத்தில் தென்னைமட்டைக்கும் கரும்புக்குமா பஞ்சம். யானை வாங்குவது நல்லது என்று காளமேகப் புலவருக்குப் பட்டது.

ஆனால், அந்த சீனப் படகை அவரால் புறக்கணிக்க முடியவிலலை. கோனேரிராயனுக்கு செய்தி சொல்லி திரும்பும் வரை சீனப்படகை இருக்கச் சொன்னார்.

ஒரு நாளைக்கு இருநூறு பொன் கை செலவுக்குக் கொடுத்தார். காளமேகப் புலவர், கோனேரிராயனுக்கு செய்தி அனுப்பிய தளபதி குடிகாரன். அவனால் தஞ்சை தாண்ட முடியவில்லை வயிற்றுவலியால் படுத்துவிட்டான். வேறு ஒருவனிடம் தகவல் சொல்லி அனுப்பினான்.

அனுப்பிய ஆளுக்கு கோனேரிராயனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவனுக்கு சரியான தகவல் யாரும் சொல்லவில்லை.

அவன் கோனேரிராயனைக் காணோம் என்று தஞ்சைக் குத் திரும்பினான். தஞ்சையில் அந்த தளபதி இறந்துபோக, தகனம் செய்து கொண்டிருந்தார்கள்.

தமிழகத்தின் தலையெழுத்து அந்தத் தகனத்தால் திசைமாறிற்று.

யானைகளை அனுப்பிவிட்டு காளமேகம் குதிரைப் படைக்காகக் காத்திருந்தார்.

பல்வேறு வணிகர்களிடம் குதிரைகள் வேண்டுமென்று இடைவிடாது சொல்லி அனுப்பியிருந்தார்.

ஒரு குதிரைகள் ஆயிரம் பொன் என்று கருங்கல்லில் பொறித்துக் கொடுத்தார்.



குளிர்காலம் போய், வெயில் காலம் போய் மழைக் காலம் வரையில் அரேபிய குதிரைகளுக்காகக் காத்திருந் தார். நாகப்பட்டினத்து காத்தான் சத்திரத்தில் அவருக்கு சோறு வடித்துப் போட்டார்கள். ஆரம்பத்தில் அறுசுவை யாக இருந்த உணவு பிறகு பழஞ்சுவையாகப் போயிற்று. உணவு தயாரிக்க பெரும் பொழுது ஆயிற்று. காளமேகப் புலவர் லேசாய் கோபமானார்.

“கத்துக் கடல் சூழ் நாகைக் காத்தான் தன்
சத்திரத்தில் அத்தமிக்கும் போதில் அரிசி வரும் குத்தி
உலையில் இடஊர் அடங்கும்; ஓர் அகப்பை
அன்னம் இலையில் இட வெள்ளி எழும்.’’

சத்திரக்காரன் பதறினான்.

“ஐயா! சற்று தாமதமாகிவிட்டது. அதற்காக நிந்தையாக பாட்டெழுதி விடாதீர்கள். காலகாலத்துக்கும் என் உணவுக் கூடத்தை எல்லோரும் கேலிசெய்துவிடுவார்கள்.

இன்றிலிருந்து நீங்கள் கேட்ட நேரத்திற்கு சோறு போடுகிறேன்.’’

சத்திரக்காரனைக் காளமேகப் புலவர் சமாதானம் செய்தார்.

இதே பாட்டுக்கு வாழ்த்தாகவும் நான் அர்த்தம் சொல்வேன் என்று விளக்கிக் காட்டினார்.

நாகைப்பட்டினம் முழுக்க அவர் பாட்டைப் பிரதிஎடுத்துக் கொண்டு ஒரே பாட்டுக்கு இரண்டு விதமான அர்த்தம் இருப்பதை சொல்லி மகிழ்ந்தது. வெளியே ஆயிரம் விதமாகப் பேசினாலும் உள்ளே மனசு அயர்ந்து கிடந்தது.

மறுபடியும் தேர் ஏறி தஞ்சை வழியே கவிஞர் திரிசிர புரம் அடைந்தார்.

குதிரைகள் கிடைக்கவில்லையே என்று உள்ளுக்குள் ஒரு குமைச்சல் தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது. போர் வீரர்கள் அராபிய குதிரைகள் பற்றி பல்வேறு விதமாய் விவரித்துக் கூறுவார்கள்.

முன்பு இருந்த மன்னன் திருமலைராயனிடம் இருபது இருபத்தைந்து குதிரைகள் இருந்தன. பார்க்கும்போதே ஒரு பரவசத்தை அவை கொடுத்தன. இம்மாதிரி அறுநூறு குதிரைகள், ஆயிரம் குதிரைகள் பாமினி சுல்தானிடம் இருக்கிறதாம்.

பாமினி சுல்தானை போரிட்டு ஜெயித்த நரச நாயக்கன் அத்தனை குதிரைகளையும் கைப்பற்றிவிட்டானாம்.

பாமினி சுல்தானிடம் வேலை செய்த போர்வீரர் களையே நல்ல சம்பளம் கொடுத்து தன் படையில் வைத்துக் கொண்டிருக்கிறானாம்.

ஓடுகிற குதிரையிலிருந்து அம்பு எய்வதற்கும், ஈட்டி எறிவதற்கும் கவண் கல் எறிவதற்கும் அவர்கள் நரச நாயக்கன் வீரர்களைப் பழக்குகிறார்களாம் இதைத் தவிர கோவா என்கிற துறைமுகத்தில் போர்ச்சுக்கீசியர்களிட மிருந்து நிறைய குதிரைகள் வாங்க எந்நேரமும் ஆள் வைத்திருக்கிறாராம்.

ஆக இன்றில்லாவிட்டால் என்றாவது ஒரு நாள் நரச நாயக்கன் திரிசீரபுரம் நேக்கி வரப்போகிறான். அவன் வரும்முன் அந்த யுத்தத்தை எதிர்கொள்ள என்ன செய்ய முடியும் என்பதே இப்போதைய கேள்வி.



நரச நாயக்கன் உள்ளே வந்தால் மறுபடி தெலுங்கு அரியணை ஏறும்.

எல்லாத் தெலுங்கர்களும் அரவம் அத்துவானம் என்று தமிழைப் பழிப்பார்கள். பாடல்களும் ஆடல்களும் பேச்சும் பழக்கமும் கவிதையும் கதைகளும் இலக்கியமும் இலக்கண மும் தெலுங்காகத்தான் போகும். பாண்டிய தேசத்திலுள்ள சுத்தமான தமிழ் மறவர்கள்கூட தெலுங்குதான் பேச வேண்டும் என்கிற கட்டாயம் ஏற்படும்.

தமிழ் பின்னுக்குத் தள்ளப்படும். தமிழ் மக்கள் இரண்டாந்தர குடிமக்களாகி விடுவார்கள். தெலுங்கு தெரிந்தால்தான் அரசு வேலை என்கிற நிர்ப்பந்தம் எற்படும். தெலுங்கு வீரனுக்கு ஒரு சம்பளமும், தமிழ் போர் வீரனுக்கு ஒரு சம்பளமும் தரப்படும். தமிழர்களால் தெலுங்கு கற்றுக் கொள்ளமுடியும். ஆனால், தெலுங்கர்கள் தமிழ் கற்றுக்கொள்ள மாட்டார்கள்.

தமிழர்கள் தெலுங்கு கற்றுக்கொள்ள ஆரம்பித்தால் தமிழை மறந்துவிடுவார்கள். பிறகு கம்பனையும் வள்ளு வனையும் தமிழ் உலகம் மறந்தே போய்விடலாம். அற்புதமான தமிழ் மொழி காணாமல் போய் விடலாம். சோறு பொங்கிப் போட்ட இந்த சோழ தேசம், அதன் நாகரீகம் காணாமற் போய் விடலாம்.

இன்னொரு விஷயமும் இருக்கிறது. நாயக்க மன்னர்கள் உள்ளே நுழைந்தால் வைணவம் பெருகும். வைணவத் திற்கும் சைவத்திற்கும் சண்டை மூட்டி வேடிக்கை பார்ப்பார்கள். விதம் விதமாய் பிரிந்திருக்கும் இந்த சோழ தேசத்தில் சமய சண்டை ஏற்படுத்தி சிரிப்பார்கள்.

சைவனான சோழ மன்னன் ராமானுஜரை எப்படி துரத்தினான். அவன் சீடர்களை எப்படியெல்லாம் பழி

வாங்கினான். அதே போல் செய்ய வேண்டும். கண்ணை நோண்டு, காதை அறு, கையை ஒடி என்று சைவர்களுக்கெதிரே கலகக்குரல்கள் வரும். இந்த சமயச் சண்டை அந்நியர்களுக்கு சாதகமாகும்.

மேற்பார்வைக்கு வைணவர்கள் ஜாதி வித்தியாசம் பார்க்க மாட்டார்கள் என்று சொல்லப்பட்டாலும் நான்காவது வர்ணத்தைக் கடுமையாக நிந்திப்பார்கள்.

நான்காவது வர்ணத்தினர் மனம் நொந்தால் நாடு உருப்படாது. கோனேரிராயன் எவ்வளவு பலவான் என்பது தெரியவில்லை. கோனேரிராயனுக்குப் பிறகு யார் அரசன் என்பது தெரியவில்லை.

தமிழ்நாட்டை நாயக்கர்களிடமிருந்து எப்படிக் காப்பாற்றப் போகிறோம் என்பது தெரியவில்லை.

அகிலாண்டேஸ்வரி முன்பு போல உள்ளுக்குள்ளிருந்து பேசமாட்டேன் என்கிறாள்

நானும் எல்லாம் மறந்து நாய் போல பல்வேறு அரசியல் விஷயங்களுக்கு அலைந்து கொண்டிருக்கிறேன்.

காளமேகம் அலுப்போடு தனக்குத் தானே பேசிக் கொண்டார்.

திரிசிரபுரம் கலகலப்பாக இருந்தது. மலைக் கோட்டையைச் சுற்றி மிகப் பெரிய சந்தை உருவாகியிருந்தது.

காவிரியைத் தாண்டுவதற்கு அரசாங்கம் படகுகளால் பாலம் அமைத்திருந்தது. கயிறு பிடித்துக் கொண்டு சிறு குழந்தைகள்கூட பாலம் தாண்டிப் போய் விடலாம்.



விடிந்ததும் முதல் மூன்று நாழிகை அரசாங்க வீரர்கள் பாலத்தில் நடமாடுவார்கள். பிறகு ஒரு நாழிகை காசு கொடுத்துவிட்டு வியாபாரிகள் பொருட்களை இக்கரைக்கும் அக்கரைக்கும் மாற்றுவார்கள்.

அதற்குப் பிறகு பொதுமக்கள் இலவசமாகத் தாண்டிப் போகலாம். இரவு அதிகாரம் இல்லாத யாரும் பாலம் தாண்ட முடியாது. கொள்ளிடத்திற்கு பாலம் தேவைப்படவில்லை. மாறாக இரண்டு யானைகள் நிற்கக்கூடிய அளவிற்கு படுகைப்படகு ஓட்டப்பட்டது.

கொள்ளிடத்தில் பாதி ஆறுதான் நீர் இருந்தது. மீதி மணலில் துணி துவைப்பவர்களும் சாயம் போடுபவர்களும் குடிசை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

கோனேரிராயன் கொள்ளிடம் தாண்டி உள்ள இடங்களை மிக பலமாக அமைத்திருந்தான். ராஜபாட்டைகளைத் தவிர மற்ற பக்கங்களில் ஸ்ரீரங்கத்தை நெருங்க முடியாதபடி மூங்கில் காடுகள் அமைத்தான். கால்வாயிலிருந்து அந்த மூங்கில்களை வளர்க்க ஆட்களை விட்டு நீர் மொண்டுவிட சொன்னான்.

எல்லைகளைப் பல்வேறு விதமாக பலப்படுத்தினான். வேகமான குதிரைகளை ஸ்ரீரங்கத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள ஊர்களில் நிற்க வைத்து உடனடியாக தகவல் சொல்வதற்குப் பழக்கினான். தகவல் சொல்வது போர் வீரர்கள் என்பதை மாற்றி அந்தணச் சிறவர்களுக்கும் பாணர்களுக்கும் தனியே பயிற்சி அளித்திருந்தான். அவர்களுக்கும் குதிரை ஓட்ட கற்றுக் கொடுத்திருந்தான்.

ஸ்ரீரங்கத்தில் பல வைணவ வீடுகளைக் காலி செய்யச் சொல்லி அங்கு தளபதிகளைக் குடியேற்றினான். ஸ்ரீரங்கத்தின் வடக்குப் பகுதி முழுவதும் அவன் யானைகள்

சந்தோஷமாகத் திரிந்தன. அந்தப் பக்கம் வேறு எவரையும் குளிக்க அவன் அனுமதிக்கவில்லை.

வணிகர்களைக் கூப்பிட்டுப் பேசினான். தொண்டை நாட்டிலிருந்து நிறைய துணிகள் வாங்கி வரச்சொன்னான். பலவிதமான சாயம் தோய்த்த ஆடைகளை சலுகை விலையில் மக்களுக்கு விற்கச் சொன்னான். வேளாளர்களுக்கு உழவுக் கருவிகளை பாண்டிய தேசத்திலிருந்து வாங்கி வரச் செய்து இனமாகக் கொடுத்தான். தச்சர்களுக்கும் கருமார்களுக்கும் தனி வீதிகள் ஏற்படுத்தி, மழையில் பாதிக்காத உயரமான வீடுகள் செய்யச் சொல்லி பார வண்டிகளும் சிறு தேர்களும் செய்யச் சொன்னான்.

மக்களைச் சோம்பலாக இருக்க அவன் அனுமதிக்கவில்லை. இது போர்க்காலம். வெறும் சோம்பலாய் இருக்கலாகாது என்றான்.

எல்லாவிதமான கைத்தொழில்களிலும் அந்தணர்களை மேற்பார்வையாளராக நியமித்தான். அந்தக் கைத்தொழிலை மேற்கொண்டு எவ்விதம் செம்மைப்படுத்தலாம் என்று அவர்களை யோசிக்க சொன்னான். அவர்கள் யோசிக்கிறார்களா என்பதைத் தளபதிகளை விட்டு கேட்கச் சொன்னான்.

புலவர்களைக் கிராமம் கிராமமாகப் போகச் சொன்னான். பாணர்களை படை வீடுகளில் போய்ப் பாடச் சொன்னான்.

திரிசீரபுரத்திலிருந்து தஞ்சைக்கும், தஞ்சையிலிருந்து குடந்தைக்கும், குடந்தையிலிருந்து சீர்காழிக்கும், சீர்காழியிலிருந்து நடு நாட்டிற்கும் வண்டிகள் போய்க் கொண்டேயிருந்தன. அந்த பார வண்டிகளில் மக்கள் இலவசமாக ஏற்றப்பட்டார்கள்.



குடந்தை வரை அன்னச் சத்திரங்கள் நிறுவக் கட்டளையிட்டான். சத்திரங்களின் பாதி செலவை அரசும் மீதி செலவை மக்களும் கொடுக்குமாறு பணித்தான். தடாலடியான சோதனைக்கு ஏற்பாடு செய்தான்.

மக்களுக்கு கோனேரிராயனைப் புரிய இரண்டு ஆண்டுகளாயின. அவ்வப்போது வேலையும் செய்யாமல் வெறுமே ஒய்வாக இருந்த தமிழ் மக்கள், இந்த விரட்டல் தாங்காமல் முதலில் மிரண்டார்கள். புலவர்களும் பாணர்களும் உழைப்பைப் பற்றி அவர்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். ஜாதிச் சண்டை போடுபவர்களைக் கேலி செய்து பாடினார்கள். அதிகம் கோவில் கோவில் என்று சுற்றுபவர்களைக் கண்டித்துக் கவிதைகள் எழுதினார்கள். வாய்விட்டுச் சிரிக்கின்ற சிலேடைகள் எழுதினார்கள். இளைஞர்களுக்கு நடுவே பெண்களைப் பற்றி குதூகலிக்க வைக்கும் பாடல்களைப் பாடிக் காட்டினார்கள். எங்கும் உற்சாகம் குறையாமல் இருக்கும்படி கவனித்துக் கொண்டார்கள்.

கலவரங்களுக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன. அந்த தண்டனைகள் தெருமுனையில் நிறைவேற்றப்பட்டன. அதேபோல் பாராட்டுகளுக்கு அரசனே முன்வந்து நின்றான்.

தினந்தோறும் சமயபுரத்திலிருந்து திருவானைக்காவலுக்கு இரண்டு மனைவிகளோடு திறந்த பல்லக்கில் ஏறிப் போனான். வழிநெடுக வயல்வெளிகள், வேளாளர் குடியிருப்புகள். அரசனது வரவை ஆவலோடு கவனித்தார்கள். வயல்களை விட்டு ஓடிவந்து வாழ்த்தினார்கள்.

‘எங்கே காளமேக ஐயாவைக் காணோம்?’ என்று அரசனிடமே விசாரித்தார்கள். ஒவ்வொரு நாள் ஒவ்வொரு கிராமத்திலும் குடிப்பதற்கு ஏதாவது கொடுத்தார்கள்.

'அம்மா! இங்கே சோழர்கள் கட்டிய கோவில் இருக்கிறது. வந்து பாருங்கள்' என்று பெருமாள் நாச்சியையும் வீர நாச்சியையும் அழைத்துப் போனார்கள்.

பெண்கள் அதிகம் பல்லக்கை சூழ்ந்து கொண்டார்கள். தங்கள் குறைகளை அரசரிடம் நேரே சொன்னார்கள்.

"ஐயா! தினமும் பல்லக்கில் ஊர்வலம் போவதைவிட நீங்கள் கம்பீரமாய குதிரையில் போகலாமே.' அலங்கரிக்கப்பட்ட யவன குதிரைகள் பல நம்மிடம் இருக்கின்றனவே. அரசரைக் கண்டு மக்கள் அச்சமில்லாமல் இருப்பது நல்லதா?'' தளபதிகள் பணிவாகக் கேட்டார்கள்.

"ஏன் அரசரைக் கண்டு மக்கள் பயப்பட வேண்டும்?'' கோனேரிராயன் பதிலுக்கு கேட்டான்.

"மன்னரைக் கண்டு மக்கள் பயந்தால்தான் எங்களைக் கண்டும் பயப்படுவார்கள்.''

"அப்படி வாருங்கள் வழிக்கு. உங்களைக் கண்டு ஜனங்கள் பயப்படவில்லை என்பதுதான் உங்களின் ஏக்கம் இல்லையா.''

"அப்படியில்லை மகாராஜா!''

"அப்படித்தான், உங்கள் ஏக்கம் எனக்குப் புரிகிறது. ஆனால், தளபதிகளைக் கண்டு மக்கள் சற்று பயப்பட வேண்டும் என்பது என் விருப்பமும்கூட. தவறானவர்களைக் கண்டுபிடித்து நீங்கள் தண்டிக்கிற விதம் உங்கள் மீது ஜனங்களுக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தும்.

நேற்று வயலூரில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆடுகள் திருடப்பட்டு விட்டன. பாண்டியப் படைகள் காரணமென்று சொல்லப்படுகிறது. நீங்கள் அந்த ஆடு திருடிய



கள்ளர்களைப் பிடித்துக் காட்டினால் ஜனங்களுக்கு உங்கள் மீது மரியாதை வரும்.

கள் குடித்துவிட்டு கலவரம் செய்கிற வீரர்களை உடனே துரத்திப் பிடித்தால் உங்கள் மீது நம்பிக்கை ஏற்படும்.

இருட்டிய பிறகு வீட்டை விட்டு எவரும் வெளியேறக் கூடாது என்று உத்தரவிட்டால் ஊர் கட்டுப்படும். வணிகர்கள் அழைக்காமலேயே அவர்கள் பாரவண்டிகளுக்குத் துணை போக வேண்டும். பாரவண்டிகள் போவதற்கு முன்பு ஒரு சிறு குதிரைப்படை போகட்டும்.

ஒரு நெல்மணிகூட திருட்டு போகாமல் நீங்கள் காவல் காத்தால் ஜனங்கள் உங்களைத் தலையில் வைத்துக் கொண்டாடுவார்கள். நீங்கள் மிரட்டினால் பணிவார்கள். நீங்கள் முறைத்தால் அடங்குவார்கள்.

ஆனால், நான் இவர்களோடு இன்னும் நெருக்கமாகக் கலந்து பேசப் போகிறேன். என்னைத் தடுக்க வேண்டாம். என் பாதுகாப்புக்கு பத்து வீரர்கள் போதும். நான் தனியே போகாமல் மனைவியோடு இருப்பதாலேயே பெண்கள் நெருங்கி வந்து பேசுகிறார்கள். நாட்டின் பொருளாதார வளத்தை இவர்கள் பேச்சை வைத்தே எடை போடுகிறேன். ஆடைகளைத் தொண்டை நாட்டிலிருந்து கொண்டுவரச் சொன்னது அவர்களை மிகவும் சந்தோஷப்படுத்தியிருக்கிறது.

தஞ்சை அரிசி தொண்டை நாட்டுக்கு பதிலாகத் தரப்பட்டது. தொண்டை நாட்டுக்கு சந்தோஷமாகி விட்டது.''

கோனேரிராயன் பல இடங்களில் விரிவாகப் பேசினான்.

வணிகர்களின் சொற்படி பொன்னிலும், தாமிரத்திலும் காசுகள் அச்சடித்தான். ஒருபுறம் கோனேரிராயன் நின்ற உருவமும், மறுபுறம் கோனேரிராயன் என்ற தமிழ் எழுத்தும்

அச்சிடப்பட்டிருந்தன. அந்தக் காசிற்கு தமிழ்க் காசு என்று மக்களிடையே பெயர் வழங்கிற்று.

பெருமாள் நாச்சி வைணவத் தலங்களையும், வீரநாச்சி சிவத்தலங்களையும் பழுது பார்த்து புதுப்பித்தார்கள். நிறைய நிவந்தங்கள் அளித்தார்கள். மருத்துவச் சாலைகளையும் அன்னச் சத்திரங்களையும் திறந்தார்கள்.

அற்புதமாய் இன்னும் ஐந்து வருடங்கள் சென்றன.

நரச நாயக்கன் தெற்கே திரும்பவேயில்லை. ஒரிஸ்ஸாவில் ஓட்டர்களை நிர்மூலமாக்குவதில் அவனுடைய முழுக்கவனத்தையும் செலுத்தினான்.

பாண்டிய நாட்டில் சுதந்திரப் பிரகடனம் செய்த மாவலிவாணனிடம் கோனேரிராயனின் தெளிவில்லை. தெற்குப் பக்கம் இருந்த சேதுபதிகளைப் பாண்டியனால் அடக்க முடியவில்லை. சோழ தேசத்திற்குள் நுழைய பயந்த அந்த தெற்கத்திச் சீமை மறவர் கூட்டம் பாண்டிய நாட்டில் அடிக்கடி புகுந்து கலவரமூட்டியது.

கோனேரிராயன் மிகக் கவனமாக தெற்குப் பகுதியை மிகக் கடுமையாகப் பாதுகாத்தான். கொள்ளையில் ஈடுபட்ட மறவர்களை மிகக் குரூரமாக தண்டித்தான்.

கறுப்பு உடை வீரர்களுடன் முகமூடி அணிந்து மறவர் குடும்பங்களைத் தாக்கி தீயிட்டு அழித்தான். மறவர்களின் கால் கட்டை விரல்களைத் துண்டித்தான். அவர்கள் வேகமாக ஓடமுடியாதபடி செய்தான்.

பெரும்படைகளோடு சேதுபதிகளிடம் போய் குசலம் விசாரித்தான். ஒரு வார காலம் படைகளுக்கு உணவு போடச் சொன்னான். ராமேஸ்வரத் தீவில் கடலாடினான்.

அவன் ஆட்சி ஸ்திரமாயிற்று.



ஆனால், காளமேகப் புலவர் இதற்குப் பிறகு என்ன என்று கவலையோடே இருந்தார்.

உனக்குப் பிறகு யார் கோனேரிராயா என்று கவலைப் பட்டார். அகிலாண்டேஸ்வரியிடம் இறைஞ்சினார்.

ஏழு வருடங்கள் கந்தாடை ராமானுஜம் வாயே திறக்கவில்லை. எந்த வம்புக்கும் போகவில்லை.

ஸ்ரீரங்கம் கோவிலில் என்ன நடந்தாலும் அது பற்றி அவன் குரல் கொடுக்கவில்லை.

பிரணய கலகம் என்கிற மட்டையடி உற்சவம் பங்குனி உத்திரத்தின்போது மூன்றே மூன்று மலர் பந்துகள் எறிதலுடன் நடந்து முடிந்தது. வாழைப்பழம், பால், தயிர் கலவை எவர் வைத்திருந்தாலும் கசையால் அடிக்கப் பட்டார்கள்.

ஒரு வைணவன் சட்டி நிறைய இந்தக் கலவை செய்து தன் மீதே ஊற்றிக் கொண்டான்.

கோனேரிராயனிடம் செய்தி போயிற்று.

அந்த வைஷ்ணவ அந்தணனை கோனேரிராயன் யானையை விட்டு மிதிக்கச் சொன்னான்.

இது ப்ரம்மஹத்திதோஷம் என்று அவனுக்கு சொல்லி பயமுறுத்தினார்கள்.

அப்படியானால் கலவை கலந்த விரல்கள் பத்தையும் நறுக்கி விடுகிறேன் என்று சொல்ல, கூட்டம் மௌனமானது.

அந்தணனையும் யானையையும் எதிர் எதிரே நிற்க வைத்தார்கள். யானை மன்னித்துவிட்டாலும் சரி, அறைந்து கொன்றாலும் சரி என்று முடிவாயிற்று.

கால் நாழிகை நேரம் கணக்கு வைக்கப்பட்டது. கால் நாழிகை முடிந்தது என்று கொடி தூக்கியதும் வைணவர்கள் ரங்கா, ரங்கா என்று கத்தினார்கள்.

அந்தக் கூச்சலுக்கு நடுவே பாகன் ''ஹடகே'' என்று யானைக்கு உத்தரவிட்டான். யானை முன்னே நடந்து அந்தணனைப் பிடித்து தரையில் ஓங்கி அறைந்தது.

வைணவர்கள் சிதறி ஓடினார்கள். கந்தாடை ராமானுஜம் ரங்கநாதர் சந்நிதியில் போய் வாய்விட்டுக் கதறினான்.

''ரங்கா! உனக்கு ஒருவேளைதான் சாப்பாடு. எனக்கு அதற்கும் வழியில்லை. என் மடத்தின் மான்யம் யாவும் கோனேரிராயனால் மறுக்கப்படுகிறது. உழைத்து சாப்பிடு என்று உத்தேசிக்கப்படுகிறது. ரங்கா! நான் ராஜரிஷி! சத்யத் துறவி. உன்னை நம்பி வந்த எனக்கு இதுதான் நீ தரும் பரிசா.'' திருமணத்தூண்களில் முட்டிக் கொண்டு அழுதான். எனக்கு வழி சொல் என்று கதறினான்.

அர்ச்சகர்கள் அவனைத் தேற்றி அழைத்துக் கொண்டு ஜீயர்களிடம் போனார்கள்.

அரங்கன் நிச்சயம் காப்பாற்றுவான் என்று ஆறுதல் சொன்னார்.

அந்த ஜீயருக்கு வேத விஷயங்கள் தெரிந்திருந்தன. ஆனால், அரசியல் தெளிவில்லை.

''இதற்கு ஒரு தீர்வு உண்டு. நீங்கள் சற்று மனமிரங்க வேண்டும்.''

கந்தாடை ராமானுஜம் ஜீயரை நோக்கி கை கூப்பினான்.



''என்னால் ஆனதை செய்கிறேன். என்ன செய்ய?''

''கோவிலின் கிழக்குப் பக்கத்திலிருக்கும் வெள்ளை கோபுரத்தின் மீது ஏற வேண்டும்.''

''நானா, எதற்கு...?'' அவர் அப்பாவியாய் கேட்டார்.

''கோனேரிராயனை மிரட்டுவதற்கு.''

''எப்படி?'' மறுபடியும் குழந்தையாய் ஜீயர் கேட்டார்.

''நீங்கள் ஏறி நின்றால் போதும். மற்ற விஷயங்களை நான் கவனித்துக் கொள்கிறேன்.''

''சொன்னால் அல்லவா செய்யலாம்.''

''சொல்வதற்கில்லை. உங்கள் மடத்தில் கோனேரிராயன் ஒற்றர்கள் இருக்கிறார்கள்.''

''உங்களிடம் சொன்னால் என்னை யானை விட்டுக் கொன்று விடுவார்கள்.''

''வேண்டாம். சொல்லாதே.'' ஜீயர் பதட்டமாகத் தடுத்தார்.

ஆழ்ந்து சிந்திப்பது போல பாவனை செய்தார். அவரால் சிந்திக்க முடியவில்லை.

''தயவுசெய்து நாளைக் காலை வெள்ளைக் கோபுரத்தின் மீது நீங்கள் ஏறி நிற்க வேண்டும்.''

''என்னால் ஏறமுடியாதே. வயதாகி விட்டதே.''

''இளைய ஜீயரைக் கைபிடித்து அழைத்துப் போகச் செய்ய வேண்டும்.''

''இவன் எனக்கு மேல் பலஹீனமாக அல்லவா இருக்கிறான். படியேறினால் இவனுக்குத்தான் அதிகம் மூச்சு வாங்குகிறது.''

''எப்படியாவது நீங்கள் வெள்ளைக் கோபுரத்துக்குப் போய்விட வேண்டும். அங்கிருந்து இறங்க மாட்டேன் என்று அடம்பிடிக்க வேண்டும்.''

''ரங்கநாதா, பிறகு உண்பதற்கு வழி...?

''அங்கு நான்கைந்து நாட்களுக்கான உணவு தயாராக இருக்கும்.''

''என்ன செய்யப் போகிறாய்?''

'' நாடகமாடப் போகிறேன்.''

''என்ன நாடகம்?''

''உங்கள் மடத்தில் ஒற்றர்கள் இருக்கிறார்கள். இன்று மாலைக்குள் கோனேரிராயனிடம் சொல்லிவிடுவார்கள்.''

''வேண்டாம், வேண்டாம். சொல்லாதே.'' ஜீயர் தடுத்தார்.

பல வைணவர்களுக்கு காசு கொடுத்து கந்தாடை ராமானுஜம் ஜீயரை சம்மதிக்க வைத்தான்.

மறுநாள் பெரிய ஜீயரும் இளைய ஜீயரும் கிழக்குப் பக்க வெள்ளைக் கோபுரத்தின் மீது ஏறினார்கள்.

சீடர்கள்பால் அன்பும் அத்வைத தத்துவத்தின் மீது நம்பிக்கையும் ஸ்ரீரங்கம் திவ்ய தம்பதிகள் மீது அளவற்ற பிரேமையும் நீர் சூழ்ந்த அந்த க்ஷேத்திரத்தின் மீது மிகுந்த பிரியமும் கொண்டிருந்த அந்த ஜீயர்கள், கந்தாடை ராமானுஜத்தின் சூழ்ச்சி புரியாமல் வெள்ளைக் கோபுரத்தின் மீது ஏறினார்கள்.



வெள்ளைக் கோபுரத்தின் நான்காவது நிலையில் அசட்டு சிகப்பாய் நறுக்கு மீசையாய் ஒரு தெலுங்குத் தளபதி ஈட்டியும் கத்தியுமாய் உட்கார்ந்திருந்தான்.

''ஒன்றுமில்லை. உங்களுக்கு உணவு எடுத்து வைக்க வந்தேன்'' என்று சொன்னான்.

அவர்கள் ஐந்தாவது நிலைக்கு சிரமப்பட்டு ஏறினார்கள்.

''உணவு எங்கே வைத்திருக்கிறாய் காணோமே?'' பெரிய ஜீயர் மூச்சு வாங்கக் கேட்டார்.

''கீழே கந்தாடை ராமானுஜம் இருக்கிறார். அவரைக் கேளுங்கள். அந்தத் தெலுங்கு முதலி கை காட்டினான்.''

அவர் எட்டிப் பார்த்தார்.

பின்னாலிருந்து ஈட்டியின் அடிப்பக்கத்தால் அந்தத் தெலுங்கு முதலி பெரிய ஜீயரை நெட்டித் தள்ளினான்.

பெரிய ஜீயர் கைகால் விரித்தபடி வானில் மிதந்தார். தரையில் மோதினார். இறந்தார்.

இளைய ஜீயரை அந்தத் தெலுங்கு முதலி தலையில் அடித்து காயப்படுத்தினான். இளைய ஜீயர் ரத்தம் ஒழுக உட்கார, இழுத்து வெளியே தள்ளினான்.

ஓரத்திலிருந்து பானையிலிருந்து கள் குடித்து இலையில் மடித்து வைத்த மீனை சாப்பிடத் துவங்கினான்.

அவன் மடி முழுவதும் பட்டையான ஒரு பையில் பொற்காசுகள் திணிக்கப்பட்டிருந்தன.

கோனேரிராயன் கொடுமை பொறுக்காமல் ஜீயர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் என்று ஸ்ரீரங்கம் முழுவதும் கலவரமாயிற்று.

கந்தாடை ராமானுஜம் வாள் உருவி எதிர்ப்பட்ட கோனேரிராயனின் ஆட்களை வெட்டிப் போட்டான். அவர்கள் இல்லங்களை தீ வைத்துக் கொளுத்தினான்.

குதிரையேறி காவிரிக்கரை வழியாக பூம்புகார் அடைந்து அங்கிருந்து கடற்கரை வழியாக மாமல்லபுரம் வந்தடைந்தான்.

அதற்கு அருகே உள்ள திருவிடந்தை என்னும் வைணவத் தலத்தில் வீடு வாங்கி தங்கினான். தன் பெயரை மாற்றிக் கொண்டான்.

ஸ்ரீரங்கத்துக் கலவரம் ஒரே நாளில் அடக்கப்பட்டது.

வைணவ அந்தணர்களுக்கும் முதலிகளுக்கும் நாயக்கர்களுக்கும் முதுகுத்தோல் உரியும்படி சவுக்கடிகள் விழுந்தன.

வெள்ளைக் கோபுரத்தில் ஏறி கள் குடித்து மயங்கிக் கிடந்த தெலுங்கு முதலியை இழுத்து வந்தார்கள் .

கொதிக்கின்ற எண்ணெயை அவ்வப்போது தெளித்தார்கள். அவனை அம்மணமாய் நிற்க வைத்து பூரான் தேள் போன்ற விஷ ஜந்துக்களை அவன் மீது எறிந்தார்கள். அவன் குடும்பத்தினரைக் கூட்டி வந்து ஆண் பெண் பேதம் பாராமல் விளாசித் தள்ளினார்கள்.

அவன் சகலமும் கதற, கந்தாடை ராமானுஜத்தை வலை வீசித் தேடினார்கள். அவன் வசித்துவந்த வீட்டைக் கைப்பற்றினார்கள். அவன் உறவினர்களை சித்ரவதை செய்தார்கள்.

பல நாட்கள் அரங்கன் சந்நிதி திறக்கப்படவேயில்லை.



கோனேரிராயனை சாந்தப்படுத்த காளமேகப் புலவர் மிகவும் கஷ்டப்பட்டார்.

கந்தாடை ராமானுஜம் இரண்டு அந்தணர்களையும், இரண்டு முதலிகளையும் விஜயநகரத்திற்கு அனுப்பினான்.

ஜீயர்கள் விழுந்து தற்கொலை செய்து கொண்டதை உருக்கமாய் எழுதியிருந்தான். எல்லா வைணவர்களும் சவுக்கால் அடிக்கப்படுகிறார்கள் என்று விவரித்திருந்தான்.

இந்த தூதுக்குழு விஜயநகரம் போகவும், ஒட்டர்களை முறியடித்து நரச நாயக்கன் விஜயநகரம் நோக்கி வரவும் சரியாக இருந்தது. அதே படைகளோடு அப்படியே கிழக்கு கடற்கரை நோக்கித் திரும்பி திருவொற்றியூர், மயிலாப்பூர் வழியாக திருவிடந்தை அடைந்து, அங்கு கந்தாடை ராமானுஜத்தை சந்தித்துப் படையை இரண்டாக பிரித்துக் கொண்டு ஒரு படையை நரச நாயக்கன் தலைமை தாங்கி குடந்தை வழியாகவும், இன்னொரு படையைக் கடற்கரை வழியாகவே ராமநாதபுரம் சீமையை அடைந்து கொற்கைத் துறைமுகம் வரை போய் பாதிக்கப்பட்ட தெற்கத்திய மறவர்களை விலைக்கு வாங்கி அவர்களுக்கு குடிக்க கள்ளும், உடலுக்குத் தடவிக் கொள்ள நல்லெண்ணெயும் கொடுத்து அவர்கள் நெஞ்சுயர வாள்களுக்கு கூர் தீட்டி, உற்சாகமாய் பேசி அவர் வீட்டுப் பெண்களுக்கு பொற்காசுகள் அள்ளிக் கொடுத்து, திரிசிரபுரத்தைக் கொள்ளையடியுங்கள் என்று முன்னே அனுப்பினான்.

குடந்தை, தஞ்சாவூரை கபளீகரம் செய்துகொண்டு ஒரு படையும் தெற்கிலிருந்து புதுக்கோட்டை வழியாக இன்னொரு படையும் கோனேரிராயனைத் தாக்கின.

காளமேகப் புலவர் வேண்டாமென்று சொன்ன சீன வெடி மருந்துப்படகு இலங்கையை சுற்றிக் கொண்டு

கிளம்பியது. பரதகண்டத்தின் மேற்கு பகுதியை அடைந்தது.

அராபியக் கப்பல்கள் வழிகாட்ட, மர்மகோவாவில் நங்கூரம் போட்டது. இஸ்லாமிய தளபதிகன் வெடிமருந்தை இனம் கண்டு கொண்டார்கள். நரச நாயக்கனிடம் ஓடிப்போய் சொன்னார்கள்.

நரச நாயக்கன் அத்தனை வெடிமருந்தையும் எடைக்கு எடை பொன் கொடுத்து வாங்கிக் கொண்டான். சீனர்கள் இரும்புக்குழாயில் வெடிமருந்து அடைத்து அடைத்து நரச நாயக்கனின் வீரர்களுக்கு பயிற்சி கொடுத்தார்கள். திரியில் தீ வைத்து அது வெடிமருந்துக்கு அருகே வந்தவுடன் இரும்புக் குழாய்களை வீசினார்கள். வெடிமருந்தோடு ஈயக் குண்டு கலந்து இரும்புக் குழாய்களில் போட்டு கெட்டித் தார்கள். குறுபீரங்கிகளும் பெரிய பீரங்கிகளும் தயாரித்தார் கள். வெடிமருந்து அடைத்து சுட்டுப் பழகினார்கள்.

அந்த வெடிமருந்து பீரங்கிகளோடுதான் நரச நாயக்கன் கொள்ளிடக்கரை வந்தடைந்தான்.

வடகரையில் நின்று ஸ்ரீரங்கத்தை நோக்கி வெடிமருந்துக் குழாய்களை நரச நாயக்கன் வீசினான்.

காளமேகப் புலவர் வாங்கி வந்த யானைகள் குழப்ப மடைந்தன. ஈயக்குண்டுகளால் தாக்கப்பட்டு கோனேரி ராயரின் படைகளையே மிதித்துக் கொன்றன.

ஸ்ரீரங்கன் கோவிலுக்குள் பதினேழு யானைகள் ரத்த வெறியோடு அலைந்தன. கோவில் வெறிச்சோடிப் போயிற்று.

மட்டையடி உற்சவம் நடந்த இடத்தில் பல மனிதர்கள் நசுங்கிக் கிடந்தார்கள். யானைகள் இறந்துகிடந்தன.



இஸ்லாமியர்களால் தாக்கப்பட்டதைவிட மிகக் கடுமையாக ஸ்ரீரங்கம் தாக்கப்பட்டது.

கோனேரிராயனின் தலைநகரான சமயபுரம் கண்ணனூர் பீரங்கிகளால் தாக்கப்பட்டது. மாரியம்மன் கோவில் தவிர மற்ற எல்லா இடங்களும் சூறையாடப் பட்டன,

கோனேரிராயன் படை நிர்மூலமாக்கப்பட்டது.

லட்சோபலட்சம் வீரர்கள் திரிசீரபுரத்திற்குள் நுழைந்தார் கள். சோழ தேசத்தை சூறையாடினார்கள். காளமேகப் புலவர் நாகைப்பட்டினம் வழியாய் சித்ராங்கியும் அவள் தங்கையும் உடன் வர, ராமேஸ்வரம் தாண்டி குமரி முனைக்குப் போனார்.

தன் வாழ்நாளில் தன் கண் எதிரே தமிழ்தேசம் தெலுங்கர்களால் பாழ்படுத்தப்படுவதைப் பார்த்து விம்மினார்.

கோனேரிராயன் கைதுசெய்யப்பட்டதை கேள்விப் பட்டார். கசையால் அடித்து சாகடிக்கப்பட்டதை உறுதி செய்து கொண்டார்.

கோனேரிராயன் அவன் மனைவிகளுக்கு உடன்கட்டை ஏறக்கூடாது என்று உத்தரவிட்டிருந்தான். அவர்கள் விதவைக் கோலத்தோடு வேளாளர் குடியிருப்பில் ஒதுங்க, அவர்களால் ஆதரிக்கப்பட்ட சோழ வேளாளர்கள் அந்தப் பெண்மணிகளை ஆதரித்தார்கள்.

யார் மிரட்டியும் காட்டிக் கொடுக்காமல் இருந்தார்கள். பந்தனைநல்லூரில் அந்த சோழர்குல இளவரசிகள் அடையாளமின்றி வாழ்ந்தார்கள்.

ஒரு தமிழ்ப் புலவனை விட்டு முதலாமாண்டு நினைவு நாளின்போது ஒரு பாடல் எழுதி கல்வெட்டாய் வெட்டினார்கள்.

**நாலாங்க வாளிபெற்றார் நாரியரே-பாரியினும்
மேலங்கமான கொடை வேளான்-காலிங்க
னெல்லனுக்கே பெறுமோ விந்திர கிலங்கருப்பு
வில்லன் கைக்கே பெறுமோமின்.**

காளமேகப் புலவர் கவிதைகளை வெறுத்தார். தமிழ் பேசவும் மறுத்தார். இறை வழிபாட்டை நிறுத்தினார். குமரிக்கடல் பக்கம் வெறுப்போடு அலைந்தார். மெல்ல மெல்ல உணவு மறுத்தார். மெலிந்தார்,

அகிலாண்டேஸ்வரி அன்னையைப் பார்த்துப் பார்த்து ஒளியேறிய கண்களுக்கு அமைதி அடைய, இன்னொரு பெண் தெய்வம் தேவைப்பட்டது.

கன்னியாகுமரி காளமேகப் புலவருக்கு ஆசுவாசம் தந்தாள்.

புலவர் என்ன செய்வதென்றறியாது அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். இடைவிடாது மந்திர ஜபம் மனதுக்குள் செய்து கொண்டிருந்தார்.

“நீ எனக்கு வரம் கொடுத்தும் நான் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.” என்று மனம் நொந்து புலம்பிக் கொண்டிருந்தார். அதிக நேரம் மௌனமாக இருந்தார்.

காளமேகப் புலவர் கன்னியாகுமரி வந்ததை ராமநாதபுர சேதுபதிகளும் பாண்டிய மன்னர்களும் தெரிந்து கொண்டு அவருக்கு உதவிகள் அனுப்பினார்கள். நாகர்கோவிலுக்கு அருகே கடலையொட்டிய தென்னந்தோப்பில் அவருக்கு



உறுதியான வீடு கட்டிக் கொடுத்தார்கள். நிலம் நிவந்தமிட்டார்கள். ஏதாவது எழுதுங்கள் என்று வேண்டினார்கள்.

“இல்லை. என் நண்பன் கோனேரிராயன் போன பிறகு எழுதவோ படிக்கவோ என்னால் இயலவில்லை.

ஆனால், அதேசமயம் நான் வெறும் வாழ்க்கை வாழ்ந்துவிடவும் இல்லை. அகிலாண்டேஸ்வரி உருவத்தைப் பார்த்து எப்படி ஜெபித்தேனோ அவ்விதமே தாய் கன்னியாகுமரி பார்த்து மந்திரம் ஜபித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு பலம் வேண்டுமென்று அகிலாண்டேஸ்வரியை ஜபித்தேன். இந்த தமிழ் தேசத்திற்கு பலம் வேண்டுமென்று கன்னியாகுமரியை ஜபித்துக் கொண்டிருக்கிறேன்.

தமிழ் தேசத்தில் தெலுங்கர்கள் படையெடுப்பு எப்படித் தவிர்க்க முடியாததோ அதுபோல சோழ தேசத்திலும் பாண்டிய தேசத்திலும் இஸ்லாமியர் ஆட்சியைத் தவிர்க்க முடியாது.

விஷத்தை முறிக்க விஷம் தேவை. இஸ்லாமியரை முறியடிக்க நம்மால் முடியாது. செங்கால் நாரையைப் போன்ற உடல் நிறம் கொண்ட மிலேச்சர்கள் நம் பக்கம் வந்து இறங்குவார்கள். அவர்கள் இஸ்லாமியரை அடித்து நசுக்குவார்கள். பரத கண்டம் முழுவதும் ஆட்சியைக் கைப்பற்றுவார்கள்.

அதே வெள்ளை மிலேச்சர்களால் இந்து மதத்துக்கு அதிகம் ஆபத்தில்லை. அவர்கள் கோவில்களைக் கொள்ளை அடிக்கப் போவதில்லை. வழிபாட்டை நிறுத்தப் போவதில்லை. மொழியைத் தடைசெய்யப் போவதில்லை.

அந்த வெள்ளை மிலேச்சர்கள் இங்கு வரவேண்டுமென்று கன்னியாகுமரியை வேண்டிக் கொண்டிருக்கிறேன். என் மந்திர ஜபத்தையெல்லாம் அவள் மூக்குத்தியில் ஏற்றிக்

கொண்டிருக்கிறேன். அந்த மூக்குத்தி ஒளி பட்டு வெள்ளை மிலேச்சர் மரக்கலம் இங்கு வரும். சரித்திரம் மாறும்.

அறிவார்ந்த சபை முன்பு அவர் பேச, சேதுபதிகள் அவருக்கு பணியாட்கள் அனுப்பினார்கள்.

''ரோஹிணி! நீ வேண்டுமானாலும் வண்டியேறி திரிசிரபுரம் போய்விடேன். அங்கு போய் நடனம் சொல்லிக் கொடேன். இந்தக் கடற்கரை ஊதல் காற்றில் ஏன் வாடுகிறாய்.''

அவள் தலையைத் தடவி காளமேகப் புலவர் அன்போடு சொன்னார்.

''உம்மையும், சித்ராங்கியையும் விட்டு நான் எங்கே போவது, எவ்விதம் வாழ்வது? சித்ராங்கி சம்மதித்தால் நானும் உமது பெண்டாகவே இருந்து விடுகிறேன்'' என்று அவரை நமஸ்கரித்தாள்.

காளமேகப் புலவர் விதம் விதமான யந்திரங்கள் எழுதி அந்த இரண்டு பெண்களுக்கும் மந்திர உச்சாடனங்கள் கற்றுக் கொடுத்து அவர்கள் மூலமாய் சேர தேசத்துப் பெண்களுக்கு இடையே சக்தி உபாசனை பரப்பினார்.

கன்னியாகுமரியிலிருந்து மேற்கு நோக்கி அந்த இயக்கம் பரவியது.

''தமிழருக்கும் சக்தி உபாசனை சொல்லித் தரலாமே, சோழ தேசத்தையும் பாண்டிய தேசத்தையும் பலப் படுத்தலாமே'' சேதுபதிகள் சேட்டார்கள்.

தங்களுக்கும் சக்தி மந்திரம் உபதேசம் வேண்டுமென்று விரும்பினார்கள்.



''இல்லை. உங்களுக்கு சக்தி உபதேசம் தேவையில்லை. தொண்டை மண்டலத்திலிருந்து மிகப் பெரிய மகான் தோன்றி ஆறுமுக உபதேசம் செய்வார். தமிழ்நாடு முழுவதும் முருகக் கடவுள் வழிபாடு நடக்கும். அதுவும் சாக்தம் போல் பலமுள்ளது. இந்து மதத்தைப் பேணி காப்பது'' என்று காளமேகம் பதில் சொன்னார்.

கடும் உபவாசத்தால் உடல் மெலிந்தார்.

திடுமென்று ஒரு நாள் மிகுந்த பரவசத்துக்கு ஆளானார்.

மூக்குத்தி பூரணமாகிவிட்டது. மூக்குத்தி பூரணமாகி விட்டது என்று கத்தினார். என் பலம் முழுவதையும் மூக்குத்தியில் வைத்துவிட்டேன் என்று உரக்கக் கூவினார்.

''சித்ராங்கி, ரோஹிணி! காவியம் எழுதுவது மட்டுமே ஒரு புலவன் வேலையா. நான் அதைவிட மேலான ஒரு பணியைச் செய்து முடித்துவிட்டேன். அன்னை கன்னியாகுமரி உருவுக்கு மிகப் பெரிய பலம் தந்து விட்டேன்.

இது எவருக்கும் தெரியாது. சொல்லவும் அவசிய மில்லை. நாம் இங்கு வந்ததன் வேலை முடிந்துவிட்டது. இங்கிருந்து மெல்ல மெல்ல ஊர்ஊராக எருது வண்டியில் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு திரிசிரபுரம் நோக்கிப் போய்விட வேண்டும். என் மரணம் அங்குதான் நிகழ வேண்டும்.

கோனேரிராயன் அரண்மனை இருந்த சமயபுரம் கண்ணனூரில்தான் என் சமாதியும் இருக்க வேண்டும்.

ஏனெனில், நானும் கோனேரிராயனும் மறுபடி பிறப்போம். தமிழ் உலகுக்கு நன்மை செய்வோம். எங்களுக்குத் துணையாய் நீங்களும் பிறப்பீர்கள். சோழகுல

வல்லிகளும் பிறப்பார்கள். நாம் அனைவரும் மறுபடியும் தமிழ் பணி செய்வோம். இறை பணி செய்வோம்.

என் பயணம் தொடங்கிவிட்டது. திரிசிரபுரம் தொட்டதும் உயிர் விட்டு விடப்படும்.'' என்று சந்தோஷமாகச் சொன்னார்.

அந்தப் பெண்கள் கவலையோடு பயணமானார்கள். பயணப்பட, பயணப்பட... ஒவ்வொரு கோவிலாய் ஏறி இறங்க, ஏறி இறங்க... காளமேகப் புலவர் உடம்பு நோய்மையாயிற்று.

பலமான எருது வண்டியில் அவர்கள் திரிசிரபுரம் வந்தடைந்தார்கள். திரிசிரபுரம் வந்த பிறகு அவர் வண்டியிலேறவில்லை. கோலூன்றி ஈரமண்ணை மிதித்து மிதித்து சந்தோஷமாக நடந்தார்.

எனது பூமி... எனது பூமி என்று பரவசப்பட்டார்

பல வருடங்களுக்குப் பிறகு புலவர் திருவானைக்காவல் நோக்கி நடந்தார். அவரோடு உடன் வாழ்ந்த அந்த இரண்டு பெண்டிரும் தொடர்ந்தார்கள்.

காவிரியைத் தாண்டி திருவானைக்காவல் எல்லையைத் தொட்டதும் அவரால் நடக்க முடியவில்லை. காவிரிக்கரை நாவலம் காட்டிலேயே நான்கு நாட்கள் வசித்தார். அவர் வருகையை ஊர் மக்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள். தனித்தனியே வந்து பார்த்தார்கள்.

அவர் இதுவரை பராமரித்த சித்ராங்கியின் கைபிடித்து கண்களில் ஒற்றிக் கொண்டார்கள்.

பதின்மூன்று வருடங்களுக்குப் பிறகு இன்றுதான் தெலுங்குப் படைகள் திரிசிரபுரத்திற்குள் நுழைந்தன என்று ஒருவன் சொல்ல, காளமேகப் புலவர் முகம் வெளிறிற்று.



படைகள் நுழைந்த அன்று மாலையே திருவானைக் காவல் கொள்ளையடிக்கப்பட்டதாம். அகிலாண்டேஸ்வரியின் அத்தனை நகைகளும் ஸ்ரீரங்கம் எடுத்துச் செல்லப்பட்டனவாம். ஒரு பவழ மாலையும் இரண்டு காது தோடகங்கள் மட்டுமே திருப்பித் தரப்பட்டதாம்.

கோனேரிராயன் ஸ்ரீரங்கத்திலிருந்து எடுத்துப் போன கட்டாரியைக் கந்தாடை ராமானுஜம் பறித்துக் கொண்டான். அவன்தான் கோனேரிராயனைக் கசையாலடித்துக் கொல்ல வேண்டும் என்று கட்டளையிட்டான்.

இப்போது திரிசிரபுரத்திற்கு துறவி கந்தாடை ராமானுஜம்தான் அதிகாரி. ஆனால், கந்தாடை ராமானுஜம் அவனுடைய பழைய மடத்தில் இருந்து கொண்டே ஆட்சியை நடத்துகிறான்.

துறவற ஒழுக்கத்திலிருந்து இம்மியளவும் பிசிறவில்லை.

அந்த முறை மட்டையடி உற்சவத்திற்கு நூறு குடம் வாழைப் பழத்தயிர் பிசையப்பட்டது. திருவானைக்காவல் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் வீசியெறியப்பட்டது.

அவர்கள் சோழர்குல வல்லிகளைத் தேடினார்கள். ஆனால், கடைசிவரை சோழிய வேளாளர்கள் காட்டிக் கொடுக்கவில்லை.

சோழர் குல வல்லிகளுக்கு நீங்கள் வந்த தகவல் தெரிவிக்கப்பட்டு விட்டது. பந்தனநல்லூரிலிருந்து தேர் ஏறி திரிசிரபுரம் நோக்கி அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்.''

செய்தி சொன்னார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து சமயபுரத்து வாய்க்கால் ஈரமண்ணில் படுத்துக்கிடந்த காளமேகப் புலவரை நோக்கி

இரண்டு பெண்கள் ஓடிவந்தார்கள். தலையிலடித்துக் கொண்டு அழுதார்கள்.

''எங்கள் ஐயன் கோனேரிராயன் நீங்கள் இப்படிப் படுத்திருப்பதைப் பார்த்தால் என்ன பாடுபடுவான். ஐயன் ஆண்ட தேசத்தில் நீங்கள் இப்படிப் படுக்கலாமா'' என்று அலறினார்கள்.

காளமேகம் எழுந்து நின்று அவர்களை நோக்கிக் கை கூப்பினார். அவர்களை வெறித்துப் பார்த்தார்.

''எங்கள் மகாராசா கோனேரிராயனின் மனைவியரை இந்தக் கவி காளமேகம் இந்தத் தமிழ் மழை நன்றியோடு வணங்குகிறது. வாழ்ந்தது சில நாள் என்றாலும் தமிழுக்கு வாழ்வு கொடுத்தவன் மாவீரன் கோனேரிராயன். அவன் துணைவிகளுக்கு தமிழ் தாள்பணிந்து வணங்குகிறது.''

மெல்ல மண்டியிட்டு அவர்கள் கால்களில் பணிந்தார்.

சுற்றியுள்ள எல்லோரும் அரசிகளைப் பணிந்தார்கள்.

இது சம்பிரதாயம். தமிழ் மரபு. அரசனையும் அரசியையும் பணிதல் தமிழர் குல வழக்கு. அரசன் கடவுள் அம்சம். அவன் மனித தெய்வம்.

எல்லோரும் எழுந்திருக்கக் காளமேகப் புலவர் மட்டும் எழுந்திருக்கவில்லை. அவர் அரசிகளைக் கும்பிட்ட வண்ணமே உயிர் நீத்திருந்தார்.

ஊர் அலறியது. சோழர்குலவல்லிகள் கதறினார்கள். காவிரிக் கரை நோக்கி சாரி சாரியாய் ஜனங்கள் வந்தார் கள்.



காளமேகப் புலவர் உடலைத் தெலுங்கர்கள் கைப்பற்ற முனைந்தபோது ஆயிரமாயிரம் சோழிய வேளாளர்கள் வாள் உருவி தடுத்தார்கள்.

கந்தாடை ராமானுஜம் தெலுங்கர்களை அதில் தலையிட வேண்டாம் என்று சொல்லிவிட்டான். மாறாக அன்று ஸ்ரீரங்கத்தில் படையெடுப்பை ஞாபகப்படுத்தும் வண்ணம் கோலாகலமாக விழா எடுத்தான்.

காவிரி ஆற்றுப் படுகையில் ஆழமான குழி தோண்டப் பட்டது. குழியில் பூக்கள் சொறியப்பட்டன.

காவிரியில் குளித்துவிட்டு ஈரத்தலையும் மஞ்சள் துணி யும் நெற்றி நிறைய குங்குமமுமாய் சித்ராங்கி கரையேறினாள்.

காளமேகத்தின் வலக்கையில் தங்கப்பொட்டோடு கூடிய மங்கல நாணைக் கொடுத்து சிறிதுநேரம் பொறுத்து வாங்கி தன் கழுத்தில் தானே பொட்டு கட்டிக் கொண் டாள்.

ஒரு தேவாரப் பாடலுக்கு காளமேகப் புலவரின் உடல் முன்பு அபிநயித்தாள். அவர் பாடிய சிலேடைகளைப் பாடினாள். அவர் செய்த அகிலாண்டேஸ்வரி உலாவை நடித்துக் காட்டினாள். காளமேகப் புலவரை மூன்று முறை வலம் வந்து நமஸ்கரித்தாள். காவிரி நதிக்கும் மலைக் கோட்டை உச்சிக்கும் போய் வருகிறேன் என்று கையசைத்து விடை கொடுத்தாள். ஒரு சொம்பில் வைத் திருந்த காவிரி நீரை வயிறு நிறையப் பருகினாள். தலையில் ஊற்றிக் கொண்டாள். குழியில் குதித்தாள். துணியில் சுற்றிய காளமேகப் புலவரை வணங்கிக் கொண்டாள்.

அவர் தலையைத் தன் மடியிலிட்டு ஒரு மூலையாய் சாய்ந்து கொண்டாள்.

திருவானைக்காவல் சைவர்கள் இந்தக் காட்சியைக் காணப் பொறாமல் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதார்கள். இறங்க முயன்ற ரோஹிணியை இறுகப் பிடித்துக் கொண்டார்கள்.

இதற்கு உடன் பள்ளிக் கொள்ளல் என்று பெயர். உடன் கட்டை ஏறுவது போல இதுவும் ஒரு மரபு. சித்ராங்கி தேவதாசி. இறைவனுக்கு வாழ்க்கைப்பட்ட பெண். அவளுக்கு உடன் பள்ளி கொள்ளல் செய்ய உரிமை இல்லை. அவை குலப் பெண்களுக்கே உரியவை. தேவரடியார் குலப்பெண்டிர் ஆக முடியாது. சித்ராங்கி காளமேகத்தின் மனைவியாக முடியாது.

ஸ்ரீரங்கத்திலிருந்து கந்தாடை ராமானுஜம் உரத்து பேசி தடுப்பதற்கு ஆள் ஏவினான்.

வைணவப்படை வருகிறது என்று தெரிந்ததும் திருவானைக்காவல் சைவர்கள் பரபரப்பானார்கள். சித்ராங்கியிடம் விஷயம் சொன்னார்கள்.

''இனி மறந்தும் வெளியே வரமாட்டேன். மீறி தொட்டால் நஞ்சு வைத்திருக்கிறேன்'' என்று குப்பியைக் காட்டினாள். அரசிகளைக் காப்பாற்றுங்கள் என்று உரக்கக் கூச்சலிட்டாள்,

அரசியர் இருவரும் குழியில் மண் தள்ள உத்தர விட்டார்கள். மடமடவென்று காளமேகத்தின் மீதும் சித்ராங்கியின் மீதும் காவிரி மண் தள்ளப்பட்டது. முப்பது நொடிகளில் மண் போட்டு மூடப்பட்டு இறுக்கப்பட்டது. பாறைக் கற்கள் போடப்பட்டு கெட்டிக்கப்பட்டது. மேலே இரண்டு நெய் விளக்குகள் ஏற்றப்பட்டன.

காவிரிக் கரை ஓரமாய் வந்த ஒரு இளைஞன் திருவானைக்காவல் மண்டபத்தில் குருடரும் முடவருமாக



இருந்த இரட்டைப் புலவர்கள் கொடுத்த ஓலையை விளக்கடியில் வைத்துவிட்டு வணங்கித் திரும்பினான். அந்த ஓலையில் ஒரு பிரிவுத்துயர் பாடல் எழுதப்பட்டிருந்தது.

''ஆசுகவி மாரியநில உலகமெலாம்
வீசுகவிகாள மேகமே... பூசுரா
விண் கொண்ட செந்தழாய் வேகின்ற தேயையோ
மண் தின்ற பாணமென்ற வாய்''

தமிழைக் காதலித்த காளமேகம், தமிழை எளிமையாக்கி எல்லா மக்களும் ரசிக்கக் கவிதை கொடுத்த காளமேகம், அரசியல் சதுரங்கத்தில் மாட்டிக் கொண்டு காவியம் செய்ய முடியாத காளமேகம், திரிசிரபுரத்துக் காவிரிக்கரையில் திருவானைக்காவலுக்கு அருகே உள்ள படுகையில் ஒரு நாவல் மரத்துக்குக் கீழே அயர்ந்து தன் காதலியோடு தூங்குகிறார்.

திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி கோவிலில் உள்ள ஒவ்வொரு தூணையும் காளமேகத்துக்குத் தெரியும். ஒவ்வொரு தூணுக்கும் காளமேகத்தைத் தெரியும்.

அந்த காளமேகம் ஒவ்வொரு பிறவியிலேயும் அகிலாண்டேஸ்வரியைக் கொண்டாடிக் கொண்டிருக் கிறார். சூரிய சந்திரர் உள்ளளவும் அகிலாண்டேஸ்வரி கோவிலும் காளமேகத்தின் கவிதைகளும் இப்புவியில் இருக்கும்.

கவி காளமேகத்தைப் பற்றி சொல்லும்போதெல்லாம் தமிழ்காசு போட்ட கோனேரிராயனைப் பற்றியும், தமிழ் உலகம் பேசும் ஒன்பதே ஆண்டுகள் ஆண்ட அந்த மன்னன் பற்றியும் சமயபுரம் கோவிலுக்குப் போகும் போதெல்லாம் நினைத்துக் கொள்ளுங்கள்.

தமிழ் சாதாரண மொழியல்ல. அதற்காகப் பல ஆயிரம் மன்னர்கள் தங்கள் இன்னுயிரைக் கொடுத்திருக்கிறார்கள்.

ஏனெனில், மொழியைக் காத்தல் என்பது தமிழரின் இன்னொரு மரபு. இந்த மரபும் சூரியசந்திரர்கள் உள்ள வரை அழியாது.

திருச்சிராப்பள்ளி என்கிற திருசீரபுரத்தின் ஒவ்வொரு அடி மண்ணிலும், திருவரங்கம் என்கிற கோவிலின் ஒவ்வொரு பாறைப் பலகையிலும் கவி காளமேகத்தின் காலடிபட்டிருக்கிறது.

கந்தாடை ராமானுஜம் கைப்பற்றிய கோனேரிராயனின் பட்டுக்கட்டாரி, கந்தாடை ராமானுஜத்தின் நீண்ட உடைவாள் இன்னும் அவர் வம்சத்தினரிடையே பாது காத்து வைக்கப்பட்டிருந்தது.

தெலுங்கு தேசத்திலிருந்து திருவரங்கம் வந்து வைணவக் கொடியை உயர்த்திய கந்தாடை ராமானுஜத்தின் மடம், அவன் உட்கார்ந்து உறங்கிய திண்ணை, உலவிய கல் தூண்கள் நிரம்பிய மண்டபம் இன்னும் அவன் பரம் பரையினரால் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

நான் போன வாரம் கோனேரிராயனின் பட்டுக் கட்டாரியை நெஞ்சில் வைத்துக் கொண்டு, கந்தாடை ராமானுஜத்தின் உடைவாளை மடியில் வைத்துக் கொண்டு, அவனுடைய துணிக் கிரீடத்தை என் சிரசில் சூட்டிக் கொண்டு வெகுநேரம் உட்கார்ந்திருந்தேன் (அக்டோபர் இரண்டாம் வாரம் 1998-ம் வருடம்)

இந்தக் கதை எழுதத் துவங்கும்போது இவைகளைத் தொடுவேன் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. இந்தக் கதை பாதி எழுதியபோது இவை இறையருளால் எனக்குப் பார்க்கக் கிடைத்தன.



இவைகளை எனக்குப் பார்க்க வழிக்காட்டிய திருவரங்கம் முரளிபட்டருக்கும் அவர் சகோதரர் நந்த குமார் பட்டருக்கும் தமிழ் நாவல் உலகம் கடமைப் பட்டிருக்கிறது.

என் நாவலில் வரும் ஒரு பாத்திரத்தின் உடைவாளை எனக்குத் தயக்கமின்றி எடுத்துக் காட்டிய கந்தாடை ராமானுஜத்தின் பரம்பரையைச் சார்ந்த திருநாராயணன் அவர்களுக்கும் அவர் துணைவியார் ராஜலட்சுமி அம்மை யாருக்கும் என் வணக்கமும் நன்றியும்.

பல புத்தகங்கள் தந்த ஈ.வெ.ரா கல்லூரிப் பேராசிரியர் ஜெகதீசன் ஐயாவுக்கு நன்றி.

திருவரங்கம் போனால், திருவரங்கம் நான்முகன் வாயிலிலிருந்து கிழக்கு நோக்கி பத்து வீடுகள் தாண்டினால் கந்தாடை ராமானுஜம் வசித்த மடம் பார்க்கலாம்.

கோனேரிராயன் கோட்டையைக் காலம் தரை மட்டமாக்கிவிட்டது. ஆனால், அவன் நிவந்தம் கொடுத்த எல்லா கோவில்களிலும் கோனேரிராயன் என்கிற பெயரோடு தன் துணைவிகளோடு பல்லக்கில் போவது போன்ற படைப்புச் சிற்பத்தைச் செதுக்கியிருக்கின்றான்.

காஞ்சிபுரத்துக்கு அருகே உள்ள திருவோத்தூர் என்ற ஊரில் இந்தப் படைப்புச் சிற்பம் பெரிதாகவே இருக்கிறது.

சித்ராங்கி உடன் பள்ளிகொண்ட கவி காளமேகத்தின் சமாதியைத்தான் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. திருச்சி போகும்போதெல்லாம் தேடிக்கொண்டிருக் கிறேன்.

ஆனால், கவி காளமேகம் தமிழ்க் கவிதையை விரும்புவோர் நெஞ்சில் ராஜகோபுரமாக உயர்ந்து நிற்கிறார்.

**முற்றும்**